Koviloor Digital Library

வ.சுப.மாணிக்கனாரின் சொல்லாக்கம்

டாக்டர் பழ.முத்துவீரப்பன்

1799
A·No: 1799
031

Koviloor Digital Library

1799
Koviloor Digital Library
KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
PHONE: -430467
1799

வ. சுப. மாணிக்கனாரின் சொல்லாக்கம்

டாக்டர் பழ. முத்துவீரப்பன், பிஎச்.டி.,
பட்டயம் (வடமொழி), சான்றிதழ் (மொழியியல்).,
இணைப் பேராசிரியர்
தொலைதூரக் கல்வி இயக்ககம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

Nachiappa Swamigal Arts and Science College Library
Accn No: 01724
Koviloor-630 307

மெய்யப்பன் அறக்கட்டளை

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கி தெரு, சென்னை-600 001.

1988 — 10/-

Koviloor Digital Library

முதற்பதிப்பு: டிசம்பர், 1983

உரிமை : செறிவு.

பக்கங்கள் : 94+42

விலை : ரு 10-00

கிடைக்குமிடம்

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம்-608001

14, சிங்கராம் தெரு, பாரிமுனை, சென்னை-600001

55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600001

28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001

3/4 ராஜ வீதி கோயமுத்தூர்-641001

20, நந்திக்கோயில் தெரு, திருச்சி-620002

சென்னை போன் : 512996, சிதம்பரம் போன் : 2799

அச்சிட்டோர்: சூப்பர் பவர் பிரஸ், கொள்ளிடம்.

Koviloor Digital Library

முதல் முயற்சி

ச. மெய்யப்பன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மணிவாசகர் பதிப்பகம் துறைதொறும் தமிழுக்கு வளம் சேர்க்கும் நூல்களை வெளியிட்டு வருகிறது. தமிழ் மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, நாட்டுப்புறவியல் வரலாறு, தமிழகக்கலை வரலாறு.திருக்கோயில்கள் வரலாறு என வரலாற்று வரிசை வளர்ந்தோங்கி வருகிறது. மொழிவரலாற்றில் சொற்கள் பெறும் இடம் பெரிது. சொல்லாக்கங்கள் மொழிக்கு அளிக்கும் வளமும் பெரிது. காலந்தோறும் புதிய புதிய சொற்கள் தமிழில் வாழ்வு பெறுகின்றன. கவிஞர்கள் புத்தம் புதிய சொற்களைப் படைக்கின்றனர். பழஞ்சொல்லுக்கு வாழ்வு நல்குகின்றனர். சொற்களை இணைத்துப் புதிய ஆட்சியினை வழங்கு கின்றனர். 'புதுமனைபுகுவார்'' என்ற சொல்லாட்சியினை கம்பர் முதன்முதலாகப் பயன்படுத்துகிறார். இன்று புது வீடுகட்டிக் குடி புகுவோர் இச்சொல்லை அழைப்பில் பயன் படுத்துகின்றனர். படைப்பாளர்கள் புதிய சொற்களை வழக்குக்குக் கொண்டு வருவதால்தான் மொழியின் சொல் வளம் பல்குகிறது- பெருகுகிறது.

இவ்வகையில் மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார் தமிழுக்கு அளித்த கொடைகளை பதிப்பகம் ஆய்வு நூலாக வெளியிடும் திட்டத்தில் இது முதல் நூல். மாணிக்கனாரின் மொழி நலம், நடை நலம், இலக்கியப் புலமை, மொழிக்கொள்கை, கல்விக்கொள்கை, சமுதாயப் பார்வை முதலிய தலைப்புக்களில் இன்னும் சில நூல்களைப்

Koviloor Digital Library

பதிப்பகம் வெளிக்கொணர இருக்கிறது. நாற்பது ஆண்டு கால எழுத்துப்பணியினை பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்து ஆசிரியர் ஆளுமையினையும், தனித்திறன்களையும் மதிப்பீடு செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கடந்த இருபது ஆண்டுகளாக பேராசிரியரோடு நெருங்கிப்பழகும் பேறு கிடைத்துள்ளது. அவர்களுடைய படைப்பாற்றலையும் ஆய்வில் அவர்களுடைய அவாவையும் சொல்லாக்கத்தில் அவர்களுடைய வேணவாவையும் அறியும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. 1954 -இல் வள்ளுவம் என்னும் சொல்லை வழக்கிற்குக் கொண்டு வந்தார்கள். எழுபது முதல் எழுபத்து ஏழு வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராகத் திகழ்ந்த போது பல்கலைக்கழகத்தில் நாளும் பயன்படுத்தப்பெறும் ஆங்கிலச் சொற்களுக்கு ஈடாகப் புதிய புதிய சொல்லாக் கங்களை உருவாக்கினார்கள். மொழிப்புலம், புல முதன் மையர், ஆளவை, ஆட்சிக்குழு, செம்பதிப்பு எனப் பலநூறு சொற்களை அவர்கள் படைத்து அளித்தார்கள். அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் இருபது ஆண்டுகள் நடந்த கம்பராமாயண ஆராய்ச்சிப் பெருந்திட்டம் இவர்கள் காலத்தில் நிறைவுற்றது. அதற்கு நிறைவுரை எழுதுகிற போது பேராசிரியர் உருவாக்கிய சொல்தான் 'செம்பதிப்பு'. இச்சொல் இன்று வாழ்வு பெற்று பெருவழக்கம் பெற்றுள்ளது.

அன்பர்கள் பதிப்பினை அன்பளிப்பாகக் கொடுப் பதனைப் 'பதிப்பளிப்பு' என வழங்கினார்கள். இவ்வாறு சொற்கள் பல்குதற்கு வழி வகுத்தார்கள்.

படைப்பிலக்கியத்தில்தான், அதுவும் குறிப்பாக நாடகத்தில் சமுதாயத்தின் தேவைக்கேற்ப காலத்திற்கேற்ப உடனடியாக புதுப்புதுச் சொற்களாகப் பலநூறு சொற்களை

Koviloor Digital Library

படைத்துள்ளார்கள். சொற்களின் உயிராற்றலுக்கேற்ப இனிமைக்கேற்ப, எளிமைக்கேற்ப அவை வாழ்வு பெறுகின்றன. இவர் போல் நம்காலத்தில் புதிய சொற்களைப் படைப்போர் இலர். பழஞ்சொற்களைப் புதுக்குவோர் பலர்.

ஆசிரியர் எப்பொழுதும் சொற்செட்டை விரும்புபவர். நன்றியுடையேன் என்பதனை நன்றியன் என்றும் ஆட்சியாளர் என்பதை ஆட்சியர் என்றும் குறுக்குவர். சொற்களை ஓரசை, ஈரசைச் சொற்களாகவே உருவாக்குவார்கள். கட்டுரைகளிலும் பொருளற்ற வெற்றுச் சொற்களைப் பயன்படுத்தமாட்டார்கள். இயல்பாகவே சொல்லாக்கத்தில் நாட்டமுடையவர்கள். மொழிப் புலமையும் இலக்கண அறிவும் நிரம்பப் பெற்றவராதலால் விதிகளுக்கேற்பவே சொற்கள் இவர்களால் படைக்கப் பெறுகின்றன. காலவெள்ளத்தால் கரைந்து போகாமல் உயிர்ப்புள்ள சொற்களை உருவாக்குகிறார்கள். தெளிந்த சிந்தனையால், ஆழ்ந்த இலக்கியப் பயிற்சியால், சிறந்த மொழி நூற்புலமையால் இவர்கள் படைக்கும் சொற்கள் உயிராற்றல் பெற்று உலாவருகின்றன.

பேராசிரியர் இதுவரை எழுதிய கட்டுரைகள் அனைத்தையும் பொருளுக்கேற்பப் பகுத்து மாணிக்கனார் நூல் வரிசையென ஒன்பது நூல்களைப் பதிப்பகம் வெளியிட்டது. அத்தொகுப்பினை ஒருசேரப் பயில்வோர் ஆசிரியரின் நடை நலத்தையும், சொல்லாக்க வளத்தையும் பெரிதும் போற்றினர். அந்நூல்வரிசையே இந்நூலுக்கு அடிப்படை. கட்டுரைகளை எண்ணிட்டுக் காட்டவும் நூற்பெயர் சுட்டவும்அந்த வரிசை உறுதுணையாய் அமைந்தது.உற்ற துணையாகஅமையவே ஆய்வு எளிதாக அமைந்தது. மேலும் பல்வகை ஆய்வுகளுக்கு இந்நூல் வரிசை அடித்தளமாய் அமையும் என்பது என் நம்பிக்கை.

Koviloor Digital Library

ஒரு ஆசிரியரின்-எழுத்தாளரின் படைப்பு முழுவதையும் ஒருசேரப்பார்த்து அவர்தம் சொல்லாக்கங்களை ஆராய்வதில் இதுவே முதல்நூல்-முதல்முயற்சி. இதில் இருவேறு கருத்து இருக்கமுடியாது.

இவ்வகை ஆய்வுக்கு இந்நூல் அடிப்படையாக அமையும். இது முன்னோடியாய் முகிழ்த்துள்ளது. வழிகாட்டும் வன்மையுடையது. **மொழிஞாயிறு பாவாணர்** அவர்கள் பலசொற்களைப் படைத்துள்ளார்கள். **ஆட்சி மொழிக்காவலர் கி. ராமலிங்கனார்** ஆட்சித்தமிழுக்கு அழகிய சொற்கள் பலவற்றை ஆக்கியுள்ளார்கள். அவை பற்றி முறையான ஆராய்ச்சி இனிமேல்தான் தொடங்கப் பெறல் வேண்டும்.

பேராசிரியர் அவர்கள் பிற நூலுக்கு அளித்த அணிந்துரைகளிலும் மதிப்புரைகளிலும் தமிழ் வழிக்கல்வி இயக்கத்திற்காக வெளியிட்ட அறிக்கைகளிலும் அவர்கள் எழுதிய மடல்களிலும் பல புதிய சொல்லாக்கங்கள் காணப் பெறுகின்றன. அவையனைத்தையும் சேர்த்தால் சொல்லகராதி இன்னும் விரியும் விடுபட்ட சொற்கள் அனைத்தையும் தொகுத்து மிகுந்த கவனத்துடன் அடுத்த பதிப்பில் இணைத்துக் கொள்வோம்.

நல்லதமிழ்த் தொண்டு செய்த நா.மு. மாணிக்கனாரின் திருமகனார், இவ்வரிய ஆராய்ச்சி நூலை எழுதிய டாக்டர் பழ. முத்துவீரப்பன். எழுத்தாற்றல் மிக்க இளைஞர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணைப்பேராசிரியர். பழந்தமிழ் இலக்கியத்தில் பயிற்சிமிக்கவர். புதியபடைப்பு இலக்கியத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். மரபு வழிக் கவிஞரான இவர் புதுக்கவிதையிலும் தன் திறமையைக் காட்டியுள்ளார். படைப்பாற்றலும், எழுத்தாற்றலும், செயல்திறனும், முயற்சியும் உள்ள இவ்விளைஞர்க்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய வாழ்த்துகிறேன். இந்நூல்

Koviloor Digital Library

எழுதுவதற்காக அறிஞர் வ. சுப. மாணிக்கம் நூல்களைப் பன்முறை பயின்றார். சொற்கள் அனைத்தையும் தொகுத்தார்; வகைப்படுத்தினார்; வரிசைப்படுத்தினார். மொழியியல் அறிஞர்களின் ஒப்புதலோடு நூலுக்கொரு செவ்விய வடிவம் கொடுத்தார். நூல் சிறிதாயினும் முயற்சி பெரிது; பயன்பெரிது.

இந்த ஆய்வேட்டிற்கு மொழியியல் அறிஞர்கள்— இலக்கணப் புலவர்கள் மதிப்புரை வழங்கியுள்ளனர். இந்நூலைமுதன்மையாகக் கொண்டு இதுபோன்ற நூல்கள் வெளிவரப்பெறல் வேண்டும் என்னும் நல்லநோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப் பெறுகிறது.

எழுத்திலக்கணக்கோட்பாடு, சொல்லிலக்கணக்கோட்பாடு என அரிய பெரிய இலக்கண நூல்களை எழுதி, புதிய இலக்கணக் கொள்கைகளை வெளியிட்டு இலக்கண மொழி வல்லுநராக விளங்கும் டாக்டர் செ. வை. சண்முகனார் அவர்கள் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ளார்கள்.

உரையாசிரியர் என்னும் பெருநூலைப் படைத்து பேரும் புகழும் பெற்ற பேராசிரியர் அரவிந்தனார் ஆய்வுரை நல்கியுள்ளார்கள். இலக்கணவரலாறு என்னும் நன்னூலை நாட்டுக்களித்த நல்லாசிரியர் இலக்கியச்செம்மல் இளங்குமரனார் வரலாற்றுரை வழங்கியுள்ளார்கள். புதிய இலக்கியங்களில் தனித்திறம் சான்ற இளைஞர், அறிஞர் மோகன் பாராட்டுரை நல்கியுள்ளார்கள். வழக்கம்போல் என்னுடைய ஆய்வுப் பதிப்புரை சொல்லாக்கத்தின் தோற்றத்தினையும், வளர்ச்சியினையும், வரலாற்றினையும் விளக்குகிறது. என் ஆசிரியப்பிரானுக்கு என் இனிய காணிக்கையாக மகிழ்ச்சியோடும், பெருமையோடும் இதனை வெளியிடுகிறேன்.

Koviloor Digital Library

சொல்லாக்குவது எளிய செயலன்று; புதிய சொல்லாக்கங்களை உருவாக்குவது எல்லார்க்கும் இயல்வதும் அன்று; ஆக்கிய சொற்கள் வாழ்வு பெறுவதும் மிகக்கடினமான ஒன்று. எண்பதாண்டுகளுக்கு முன் ஆங்கிலச் சொற்களுக்கு ஈடான தமிழ்ச் சொற்களைப் படைக்க தமிழ்ப் பத்திரிக்கையாளர்கள் பட்டபாடு பெரும்பாடு. மெம்பர் என்னும் சொல்லை மொழிபெயர்க்க பாரதி பட்டபாடு நாம் அறிய வேண்டிய ஒன்று. 'சொல்லாக்கிகள் அன்று பட்டபாடும் இன்று படும் பாடும் எழுத இயலாதவை. அரியவற்றுள் அரிது புதிய சொற்களைப் படைப்பது; அவற்றுளும் அரிது தமிழ்நலம் சான்ற தூய இனிய எளிய சொற்களை உருவாக்குவது. அவ்வாறு நல்ல சொற்களை நாளும் உருவாக்குவோமேயானால் பாரதி பாடியபடி "சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே" என்றும், கவியரசு கண்ணதாசன் இசைத்தபடி "சொல்லெல்லாம் தூய தமிழ்ச் சொல்லாகுமோ" என நினைந்து நினைந்து தமிழ்ச் சொற்களின் அருமை பெருமைகளை, தலைமையினை, தாய்மையினை அறிந்து போற்றி நாம் தொழுது படித்திடுவோம்.

தீந்தமிழுக்குக் கதவைத் திறந்திடுமின்!

ஆக்கிய தமிழ்ச் சொற்களை ஆளவிடுமின்!

வடித்த கலைச்சொற்கட்கு வாய்ப்பு வழங்குமின்!

...

Koviloor Digital Library

மதிப்புரை

டாக்டர் செ. வை. சண்முகம்,
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.,
பேராசிரியர், மொழியியல் உயர் ஆராய்ச்சி மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மனிதன் மொழியை ஒப்புமையாக்கத்தாலும் போலச் செய்தலாலுமே கற்றுக்கொண்டு கையாளுகிறான் என்பது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து வந்த கொள்கை. அது மாறி, மனிதன் தான் வாழும் சூழலிலுள்ள மொழியைக் கேட்டுக் கேட்டு உள்நிலையாக இலக்கணம் ஒன்றை உண்டாக்கிக்கொண்டு அவ்வப்போது வாக்கியங்களையும் கிளவிகளைப் படைத்தே கையாளுகிறான் என்பது இப்பொழுதைய கருத்து. அதாவது மொழியைக் கற்றுப் பயன்படுத்துவதும் ஒரு படைப்பாற்றல் ஆகும்.

கலைச் சொல்லாக்கம் இந்த உண்மையை நன்கு தெளிவு படுத்துகிறது. எப்படியென்றால், சந்தர்ப்பம் ஏற்படும் பொழுதெல்லாம் மனிதன் பழைய கருத்துகளைப் பழகிய சொற்களால் கூறாமல் புதிய சொற்களாலும் புதிய கருத்துகளைப் புதிய சொல்லாக்கத்தாலும், கூறுகிறான். மொழி உயிரோட்டம் உடையது என்பதற்கு சொல்லாக்கம் ஒரு சாட்சி. சொல்லாக்கம் மொழிச் சமுதாயம் முழுமைக்கும் உரியது.

எப்படி மொழியைப் பயன்படுத்துவதில் சிலர் மிகத் திறமைசாலிகளாக இருக்கிறார்களோ, அதுபோலவே சொல்லாக்கத்திலும் சிலர் அதிகத்திறன் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

Koviloor Digital Library

மொழியின் அமைப்பு ஆராய்ச்சியில் சொல்லாக்க முறையும் ஒருபகுதியே என்றாலும் இன்று அறிவு வளர்ச்சி வேகமாக இருப்பதால் கலைச் சொல்லாக்க ஆராய்ச்சி தனி உட்துறையாய் வளர்ந்துள்ளது. எனவே சொல்லாக்கம் என்பது, பழைய கருத்துகளைக்கூறக் கையாளும் நெறிமுறைகளையும் கலைச் சொல்லாக்கம் என்பது, புதிய கருத்துகளைக் கூறுவதற்குப் பயன்படுத்தும் நெறி முறைகளையும் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம் போலத் தோன்றுகிறது.

தமிழில், எல்லா உலக மொழிகளைப் போலவே மிகப்பழங்காலம் தொட்டே சொல்லாக்கமும் கலைச் சொல்லாக்கமும் நடைபெற்று வந்திருக்க வேண்டும் என்பதற்குத் தொல்காப்பியம் நிறையச்சான்றுகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. இந்த உயிரூட்டப்பண்பு இன்றும் தொடர்ந்து திளைத்துப் படர்ந்து வந்திருக்கிறது என்பதற்கு இந்த நூல் நல்ல ஆதாரம்.

இன்றைய தமிழ் அறிஞர்களில் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் பலவகையிலும் முன்னிற்பவர். தன்னுடைய வாழ்க்கைப் பணி என்பது கற்றல், கற்பித்தல், ஆராய்தல், நூல் எழுதுதல் என்பது மட்டுமே என்று இடையறாது உழைத்துவரும் பேராசிரியரின் ஒரு கட்டுரையைக் கூட படிப்பவரின் கவனத்தை அவருடைய சொல்லாக்கம் இழுக்காமல் போகாது. எனவே அவருடைய நூல்கள் முழுமையும் படிப்பவர்கள் அவருடைய சொல்லாக்கத் திறமையையும், ஆற்றலையும், முறையையும் கண்டு வியப்படைவார்கள்.

டாக்டர் பழ. முத்துவீரப்பன் எல்லோரும் வியக்கும் பேராசிரியரின் சொல்லாக்கத்தைப் பற்றி ஆராய்ந்திருப்பது நல்ல பணியே ஆகும். தமிழ் உலகில் சிறப்பாகக் கருதிப்

Koviloor Digital Library

பேசப்படும் பல கருத்துக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து நூல் எழுத முன் வந்திருப்பது முத்து வீரப்பன் தமிழ் உலகின் நாடியை உணர்ந்த திறத்தைப் புலப்படுத்தும்.

இந்த நூல், சொல்லாக்கத்தை மொழி அமைப்பு நிலையில், தனிச்சொல்லாக்கம், கூட்டுச் சொல்லாக்கம் என்று இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்துக்கொண்டு அவைகளை விரிவாக விளக்குகிறது.

'சொல் எனப்படுப பெயரே, வினையே ஆயிரண்டு' என்ற தொல்காப்பியக் கருத்தை ஒட்டி எல்லாச் சொற்களையும் பெயர், வினை என்ற இரண்டு வகையில் விளக்குகிறது. அதனால் வல் என்ற அடியைப் பெயராகவும் (ப. 25, 31), தொல் என்ற அடியை வினையாகவும் (ப. 31) கொள்ளப்பட்டுள்ளது. இரண்டு அடிகளையும் குறிப்பு வினையாகவோ அடையாகவோ கொள்ள வேண்டும்.

ஒருவர் படைத்த சொல்லாக்கத்தின் நெறிமுறைகளை அறிந்து கொண்டால் மட்டும் போதாது. அந்த சொல்லாக்கங்களின் நோக்கங்களையும் அந்த ஆசிரியர் அடைந்த வெற்றி, தோல்விகளையும், மதிப்பீடு செய்வதே அந்தப் படைப்பாளியை முழுவதும் புரிந்து கொள்ள உதவும். ஆனால் இந்த நூலாசிரியர் சொல்லாக்கத்தின் மொழி அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து நோக்கத்தை முதல் இயலின் ஒரு பகுதியாக மட்டும் விளக்கி அங்குப் பேராசிரியரின் கலைச் சொல்லாக்கங்களில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டிச் சென்றுள்ளார்.

இது சொல்லாக்கயுகம் ஆனதால் இன்று நடைபெறும் சொல்லாக்கங்களின் நோக்கையும் போக்கையும் அறிந்து கொள்ளும் வகையில் ஒரு தனி ஆசிரியரின் சொல்லாக்கம் ஆராயப்படும்பொழுதே, இன்றைய மொழி வளர்ச்சி

Koviloor Digital Library

போக்கும், எடுத்துக் கொண்ட படைப்பாளியின் தனித் தன்மையும் வெளிப்படும்.

வளரும் தமிழின் ஒரு புதிய துறையில் அதுவும் ஒரு தனிப்பட்ட ஆசிரியர் செய்த நூல்களில் காணப்படும் சொல்லாக்கங்கள் பற்றி தனி ஒரு நூல் எழுதிய முத்துவீரப்பன் பாராட்டுதலுக்கு உரியவர். அவர் முயற்சி வெல்க! வாழ்க!! இன்னும் பல நூல்களைப் படைத்து ஆக்கப்பணியில் ஈடுபடும் வண்ணம் தமிழகம் ஆசிரியருக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

* * *

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
PHONE: 436846

ஆய்வுரை

பேராசிரியர் மு. வை. அரவிந்தன்
தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி,
கிருஷ்ணகிரி.

தமிழ்ச் சான்றோர் வ. சுப. மாணிக்கனாரின் சொல்லாக்கம் என்னும் நூல், நான் கற்று மகிழ்ந்த சிறந்த தமிழ் நூல்களுள் ஒன்று. இது என் சிந்தனைக்கு விருந்தாய் அமைந்தது; என் ஆய்வுக்குத் தூண்டுகோலாய் உதவியது.

இந்த நூல் அளவால் சிறியது; ஆனால், கூறும் பொருளால் பெரியது. தஞ்சாவூர்க் கோபுரத்தின் வடிவத்தை, அரிசி ஒன்றில் செதுக்கிக் காட்டிய கலைத்திறனை ஒரு சிற்பியிடம் நான் கண்டு வியந்தது உண்டு. அந்த வியப்பு மீண்டும் என்நெஞ்சில் ஏற்பட்டது, 'மாணிக்கனாரின் சொல்லாக்கம்' என்ற நூலைக் கற்று மகிழ்ந்தபோது! பல அரிய நுண்ணிய கருவிகளை உள்ளே அடக்கி வைத்துக் கொண்டுள்ள சிறிய கைக்கடிகாரம் போன்று, இந்தச்சிறு நூல் அமைந்துள்ளது.

இந்த நூலில், பக்கத்திற்குப் பக்கம் புதுமை ஒளி வீசுகிறது; பத்திக்குப் பத்தி கருத்துமின்னல் பளிச்சிடுகிறது; வாக்கியந்தோறும் ஆய்வுச்சிந்தனை நிரம்பியுள்ளது.

பகுப்பும் ஆய்வும்

நூலாசிரியர் டாக்டர் பழ. முத்துவீரப்பன், மாணிக்கனாரின் சொல்லாக்கத்தை,

Koviloor Digital Library

1. தனிச்சொல்லாக்கம்

என்றும்,

2. கூட்டுச்சொல்லாக்கம்

என்றும் இரண்டு வகையாகப் பாகுபாடு செய்துகொண்டு ஆய்கின்றார். ஒவ்வொரு வகையிலும் எத்தனை வகையான சொல்லாக்கங்கள் உள்ளன என்பதை அறிவியல் நோக்குடன் பகுத்து விளக்குகின்றார். ஆய்வுக்குத் தேவையான கோட்பாடுகளைத்தாமே உருவாக்கிக்கொண்டு அந்தக்கோட்பாடுகளை வாய்பாடுகளாக-அளவுகோலாக-எடைக்கற்களாகக் கொண்டு, மாணிக்கனாரின் புதிய சொற்களை அளவிட்டு மதிக்கின்றார்.

திட்டவட்டமான ஆய்வுநெறியை வலிமையான தடமாகக் கொண்டு, அசைக்க முடியாத சான்றுகளைக் கடைக்காலாக அமைத்து, சிறந்த விதிமுறைகளைப் பயன்படுத்தி உருவாக்கிய அருமையான நூல் இது.

இந்த வகையான நூல், தமிழுக்கு முற்றிலும் புதியது; மிகவும் தேவையானது. இதனைப் பின்பற்றி, இந்தத்துறையில் இனிமேல் பல புதிய நூல்கள் உருவாகிப் பயன் தரும்.

புதுமைக்காலம்

இருபதாம் நூற்றாண்டு, தமிழில் புதிய சொல்லாக்கங்கள் மலர்வதற்கு வழி வகுத்த புதுமைக் காலமாகும். புதுமைக்கவிஞர் பாரதியார், 'விடுதலை', 'பொதுவுடைமை', 'புரட்சி' முதலிய புதுச்சொற்களைப் படைத்து வழங்கினார். தமிழ்த் தென்றல் திரு. வி. க. காவியம் படைக்கும் புலவனைக் 'காவியன்' என்ற புதுச் சொல்லால் குறிப்பிட்டார்; மனித இயல்பை 'மனிதம்' என்றார். பாரதிதாசன், பளபளப்பு என்பதைத் 'தகத்தகாயம்' என்ற புதுச்சொல்லால் குறிப்பிட்டார்;

Koviloor Digital Library

தமிழன் என்ற ஆண்பாற் சொல்லுக்கு இணையாகத் 'தமிழச்சி' என்ற பெண்பாற் சொல்லைப் படைத்தார்; ஒருவன் என்ற ஆண்பாற் சொல்லுக்கு ஒப்ப 'ஒருவள்' என்பதைப் பெண்பாற் சொல்லாக்கி, அதனை வழங்கலாம் என்று புதுக் குரல் எழுப்பினார்.

'தமிழ்நாடு' நாளிதழ், பலாத்காரத்தை 'வன்முறை' என்று குறிப்பிட்டு அதை வழக்கிற்குக் கொண்டு வந்தது.

அறிஞர் அண்ணா, தேர்தல், வாக்குச்சீட்டு, வேட்பாளர், இடைவேளை முதலிய பல சொற்களைப் படைத்து வழங்கியுள்ளார்.

'பண்பாடு' என்ற சொல்லை, ரசிகமணி டி. கே. சி. உருவாக்கித் தந்துள்ளார்.

இவ்வாறு. புதுச்சொல்லாக்கப்பட்டியல் நீண்டு செல்கிறது.

தமிழில், சொல்லாக்கத்துறை கவர்ச்சி மிகுந்ததாய் - முதன்மை வாய்ந்ததாய் - பயன் உள்ளதாய் இருந்தும், ஆய்வாளர்களின் பார்வை இத்துறை மீது இன்று வரை படாமலே இருந்தது. அந்தக் குறையை, இந்த நூலின் வாயிலாகப் போக்கி நல்ல தொடக்கத்தை ஏற்படுத்தியுள்ளார், டாக்டர் பழ. முத்துவீரப்பன்.

நூலின் தொடக்கம்

"வளர் தமிழுக்கு வளஞ்சேர்க்கும் சான்றோர்களுள், தலையிடம் பெறுபவர் மூதறிஞர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார்" என்று கம்பீரமாய்த் தொடங்குகிறது, இந்த நூல். நாடகத்தில் மாமன்னரின் வருகைக்குக் கட்டியம் கூறுவதுபோல் அமைந்துள்ளது, நூலின் முதல் வாக்கியம்.

Koviloor Digital Library

நூல் இவ்வாறு தொடங்கிய பின், மாணிக்கனாரின் தமிழ்நடை அறிமுகப்படுத்தப் பெறுகின்றது:

''மாணிக்கனார் தனக்கெனத் தனி நடையுடையவர். அந்நடை, ஆற்றுப்படுத்தும் அறநடை; சிறு சிறு தொடர்களால் அமைந்த செறிநடை; மொழித்திறன் பெருக்கும் புறநடை; கவிநடை; சொல்லாக்கங்கள் நிரம்பிய சுவை நடை; எளிநடை; தெளிநடை.'' (பக். 1).

மாணிக்கனாரின் நடை நலனை அறிமுகப் படுத்திய பின், "இந்த அணிநடையில் அமைந்த புதுச்சொற் பூக்கள் இங்கே மாலையாக்கப் பட்டுள்ளன'' என்கிறார், இந்த நூலின் ஆசிரியர். இந்த வாக்கியம், மாணிக்கனாரின் தமிழ் நூல்களை எல்லாம் நம் கண் முன் கொண்டு வந்து, பல வேறு வண்ணமலர்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலைகளாக்கிக் காட்டுகின்றது.

கல்லாதவர் படைத்த நல்ல சொற்கள்

இதன்பின் நூலாசிரியர், ''சொல்லாக்கம் என்பது ஓர் அரியகலை'' என்று கூறி நம் சிந்தனையைத்தூண்டுகிறார்.

இதனை அடுத்து, ''இலக்கண இலக்கியப் புலமை உடையவர்களே இத்துறையில் வித்தகம் காட்டி விருந்து படைக்க முடியும்'' என்று நூலாசிரியர் கூறும் கருத்தை நாம் ஏற்பதற்குத் தயங்குகிறோம்! ஏன்?

புதிய சொற்களைக் கற்பனைஉள்ளம் படைத்த சிறுவர்கள் படைக்கின்றனர். ஏடும் எழுத்தும் அறியாத பாமர மக்கள் உருவாக்குகின்றனர். வெளி உலகத்தோடு மிகுதியாகத் தொடர்புகொள்ளாமல்,வீட்டிலேயேவாழ்ந்து வரும் பெண்கள் படைக்கின்றனர். இவர்களை, இலக்கண இலக்கியப் புலமை உடையவர்கள் என்று கூறமுடியுமா?

Koviloor Digital Library

மோட்டார் சைக்கிளைப் 'புடுபுடுமோட்டார்'என்கிறான் சிறுவன். வானவூர்தியைப் 'பறவைக்கப்பல்' என்கிறான் பாமரன். பிளாஸ்டிக் புட்டியை, 'ரப்பர் சீசா' என்கிறாள் வேலைக்காரி. நீளமானமெர்க்குரிவிளக்கை, 'வாழைத்தண்டு விளக்கு' என்கிறான் திருச்சி மாவட்டத்தமிழன். சிம்னி விளக்கை, 'முட்டை கிளாஸ் விளக்கு' என்கின்றனர் செட்டிநாட்டு ஆய்ச்சிமார்கள்.

இவ்வாறு இருக்க, "இலக்கண இலக்கியப் புலமை உடையவர்களே புதுச்சொல் படைக்கமுடியும்!" என்று நூலாசிரியர் கூறும் கருத்தை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை!

மாணிக்கனாரின் திறன்கள்

மாணிக்கனார் இலக்கண இலக்கியப் புலமை மட்டும் உடையவர் அல்லர்; அவர் நல்ல கவிஞர்; புதுமை நாட்டம் உடையவர். அவர் சிந்தனை புதிது. மேலும் அவர்களிடம் விழுமிய உணர்ச்சியும். உயர்ந்தகற்பனையும், சிறந்த படைப்பாற்றலும் நிரம்பி இருப்பதால்தான், அவர்களால் புதுச் சொல்லாக்கங்களைத் தமிழுக்குத் தரமுடிகின்றது.

அவர்களுடைய புதுச் சொல்லாக்கத்திற்கு இலக்கண இலக்கியப் புலமை துணை செய்திருக்கலாம்; வழிகாட்டி இருக்கலாம். ஆனால், புலமையால்தான் புதுச்சொற் களைப் படைக்கின்றார் என்று கூறமுடியாது!

தம்மை உணர்ந்த தக்கோர்

ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னை அறிந்து கொள்ள வேண்டும். தன்னை உணர்ந்தவனே உலகத்தை உணர்வான். அதனால்தான் கிரேக்கப் பெரியார் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனையும் நோக்கி, "உன்னையே நீ முதலில் உணர்ந்துகொள்!" என்ற

Koviloor Digital Library

தத்துவக்குரலை எழுப்பினார். நம் நாட்டுக் கடுவெளிச் சித்தர்,

"உன்னையே நீ எண்ணிப்பாரு!
யோசித்து அதன் பின்னே கூறு!"

என்று ஞானமுரசு கொட்டுகின்றார். வள்ளலார்,

"தன்னை அறிந்து இன்பமுற
வெண்ணிலாவே! —ஒரு
தந்திரம் நீ சொல்ல வேண்டும்,
வெண்ணிலாவே!"

என்று வெண்ணிலாவிடம் முறையிடுகின்றார்.

இத்தகைய ஞானிகளின் குரலிலிருந்து மனிதன், தன்னை உணர வேண்டியதன் அவசியத்தை நாம் உணரலாம்.

மாணிக்கனார் தம்மை—தம் திறனை நன்றாக உணர்ந்துள்ளார்:

"என் எழுத்துகள், கட்டளைச் சொற்களால்—கட்டளை நடையால் அமைந்தவை; சொற் பல்குதல் என்ற மிகைக்கு இடமில்லாதவை; செறிவு மிகுந்தவை; வேண்டுங்கால் புதிய சொல்லாக்கங்களும், புதியதொடராட்சிகளும் உடையவை" (திருக்குறட்சுடர், ப. x)

இவ்வாறு தம்மை மதிப்பிட்டுக் கூறிய உரையை, இந்த நூலின் ஆசிரியர் சரியான இடத்தில் மேற்கோள் தந்து நம்மை மகிழ்விக்கின்றார் (ப.13).

மாணிக்கனாரின் பொன்னுரை

புதுச் சொல் படைக்கும் வித்தகம் கைவரப் பெற்ற மாணிக்கனார், தமக்கென்று ஓர் அணியை உண்டாக்கி

Koviloor Digital Library

அந்த அணியின் கொள்கை முழக்கமாகப் பின் வரும் பொன்னுரையைப் படைத்து வழங்குகின்றார்:

"வளம் படைத்த தமிழ் மொழிக்குச் சொல்லாக்கிகள் மிகத் தேவை. அவ்வப்போது சொல்லை வடித்துக் கொடுக்காதவன் - வடித்துக் கொள்ளாதவன், மொழிக் கடன் ஆற்றாதவன் ஆகின்றான். வேற்றுச் சொல் வரவுக்கு இடங் கொடுப்பவன் ஆகின்றான்" (காப்பியப் பார்வை - ப. 194)

இந்தப் பொன்னுரையை இனங் கண்டு தனியே எடுத்துத் தம் நூலின் முதற் பக்கத்திலேயே அமைத்துப் போற்றிய இந்த நூலின் ஆசிரியரை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

சரியான மதிப்பீடு

பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன், மாணிக்கனாரின் சொல்லாக்கம் பற்றிக் 'காப்பியப் பார்வை'யின் பதிப்புரையில் (ப. vi) கூறியுள்ள கருத்து, சரியான மதிப்பீடாக அமைந்துள்ளது;

"மாணிக்கனாரின் புதிய சொல்லாக்கங்கள் தமிழுக்குப் புதுவரவும் ஆக்கமும் ஆம். இந்தத் தலை முறையில் இவரைப் போலப் புதிய சொற்களைப் படைத்தவர் இலர். வாழும் சொற்களைப் படைப்பதில் வல்லவர்; பழஞ்சொல் புதுப்பிப்பதிலும் வல்லவர். இவர் படைத்த பல சொற்கள் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நாளும் பயன்படுத்தப் பெற்று வருவது இவரது சொல்லாக்கச் செந்நெறிக்குச் சான்றாகும்".

இந்த மதிப்பீடு, இந்த நூலுக்கென்றே எழுதி வைத்த மணி மொழி போல் உள்ளது. இதனை இந்த நூலின்

Koviloor Digital Library

ஆசிரியர் கண்டெடுத்துத் தக்க இடத்தில் மேற்கோள் தந்துள்ளார் (பக். 13, 14).

மாணிக்கனாரின் புதுச் சொல்லாக்கத் திறனையும், அந்தத் திறனால் விளைந்த புதுச் சொல்லாக்கங்களையும், அவற்றின் பயன்பாடுகளையும் உற்று நோக்கிய பதிப்பாசிரியர், ச. மெய்யப்பன் அவற்றிற்கெல்லாம் ஒரு வடிவம் தந்து, ஒரு கொள்கையாக்கிப் புதியதோர் ஆய்வைத் தோற்றுவித்துப் புதிய பாதை அமைத்துத் தரத் திட்டமிட்டார். அந்தத் திட்டத்தைச் செம்மையாய்ச் செய்து முடிக்க வல்லவரைக் கண்டறிந்து, இந்த ஆய்வு நூல் வெளிவரக் காரணமாய் உள்ளார்.

ஒரு நல்ல பல்கலைக் கழகம் போல், செயலாற்றி வருகின்ற மணிவாசகர் பதிப்பகத்தின் சிறந்த வெளியீடுகளில் ஒன்றாக இந்த நூல் இடம் பெறுகின்றது. இந்த நல்ல நூல் சிந்தனையாளர்களின் கவனத்தைக் கவரும்; புதியன படைப்பவரை மகிழ்விக்கும்; அனைவருடைய பாராட்டையும் பெற்றுச் சிறக்கும்.

வினாவும் விடையும்

புதிய சொல்லாக்கங்கள் ஏன் ஏற்படுகின்றன? அவற்றின் தேவை யாது? அவற்றைப் படைப்பவரின் நோக்கம் என்ன? இத்தகைய வினாக்களுக்குத் தகுந்த விடையை இந்த நூலின் ஆசிரியர் தருகின்றார்.

''காலமாற்றத்திற்கேற்ப - அறிவியல் பெருக்கத்திற்கேற்ப-வாழ்க்கைத் தேவைகளுக்கேற்ப-நிறுவனப் பயன்பாடுகளுக்கேற்பத் துறைதொறும், துறை தொறும் புதிய புதிய சொற்கள் தேவைப்படுகின்றன'' (ப.2).

இந்தக் கருத்து, புதுச் சொல்லாக்கங்களை ஏளனம் செய்பவரை-ஏளனம் செய்து ஊக்கத்தைக் குறைப்பவரை-

Koviloor Digital Library

புதிய முயற்சியை மட்டந்தட்டி அடக்குபவரை, எதிர்த்து எழுப்பும் எச்சரிக்கைக் குரலாக உள்ளது.

சிந்தனையில் மலர்ந்த ஆய்வுரை

வளரும் தமிழுக்குப் புதுச் சொல்லாக்கங்கள் மிகவும் தேவை என்பதை நன்குணர்ந்த நூலாசிரியர், "தாய் மொழியை நேசிப்போர், பிற மொழியை யாசிப்போராக மாறிவிடாமல் இருக்க, இவை அவசியமாகின்றன" என்கிறார் (ப. 2). கவிதை நடையில் அமைந்த இந்த வாக்கியம், ஆழ்ந்த சிந்தனையிலும், தமிழ் காக்கும் பொறுப்புணர்ச்சியிலும் மலர்ந்த ஆய்வுரையாகும்.

ஊக்கவுரை

புதுச்சொல் ஆக்குவோரை மனம் உவந்து போற்றி அவர்களுடைய ஆக்கத்தை ஆர்வத்துடன் ஏற்று ஊக்கவுரை வழங்கும் பண்பு, இந்த நூலாசிரியர் முத்து வீரப்பனிடம் இயல்பாகவே அமைந்திருப்பது பாராட்டுதற்குரியது.

"எல்லா சொற்களுக்கும் எடுத்த எடுப்பில் சரியான சொல்லை எவரும் உருவாக்கி விட முடியாது" ப. 2) என்று கூறும் நூலாசிரியரின் மனப்பக்குவம், தாய்மையுள்ளத்தின் மறுவடிவமாக உள்ளது.

"தொடக்க முயற்சிகள், மொழி பெயர்ப்புகளாகக் கூட அமையலாம்; அதில் தவறில்லை" (ப. 2) என்று நூலாசிரியர் உரைப்பது, சிறுவர்களின் மணல் வீட்டைப் பாராட்டும் பெரியோர்களின் பெருந்தன்மையை நினைவூட்டுகிறது.

இதனைத் தொடர்ந்து, "பின்வருவோர் அவற்றை இழைத்து இழைத்துப் புதுவண்ணம் காண்பர்" (ப. 2)

Koviloor Digital Library

என்றும், "காலப்போக்கில் நீண்ட சொற்கள் செறிவு பெறும்" (ப. 2) என்றும், "சொல்லாக்கியின் அறிவுக் கூர்மைக் கேற்ப ஆளுமைத்திறனுக்கேற்ப இவை மெருகு பெறும்" (ப. 2) என்றும், பொருளுணர்த்தும் திறத்திற் கேற்ப-உச்சரிப்பெளிமைக் கேற்ப நிலை பெறும்"(ப. 2) என்றும் நூலாசிரியர் கூறியுள்ளார்.

இவை, சிறந்த தாய்மொழிப் பற்றிலிருந்தும், நன்மை விளையும் என்ற உறுதியான நம்பிக்கையிலிருந்தும், எதிர்காலத்தை இன்முகத்தோடு வரவேற்கும் கடமை யுணர்விலிருந்தும் தோன்றியுள்ளன.

புதுச் சொல்லாக்கப் பணிக்கு வரம்பு கட்டி, எல்லை வகுத்து எச்சரிக்கைக் குரல் கொடுக்கும் நூலாசிரியர் பின்வரும் கருத்தைக் கூறுகின்றார்:

"ஆக்கும் சொற்கள் இலக்கண ஒழுங்கிற்குக் கட்டுப் பட்டனவாக இருந்தால் மட்டும் போதா. அவை மர பொழுங்கிற்கு மாறு படாதவையாகவும், உச்சரிப்பு எளிமை உடையனவாகவும், பல்லாண்டுகளாக வழக்கில் உள்ள சொற்களுக்கு மாற்றுப் பொருள் தந்து குழப்பம் ஏற்படுத்தாதவையாகவும் இருக்க வேண்டும்" (ப. 3).

இந்த ஆய்வுரையைப் புதுச் சொல்லாக்கத்திற்கு ஓர் இலக்கணமாகவே அமைத்துப் போற்றலாம்.

விடுபட்ட சொல்லாக்கங்கள்

இந்த நூலாசிரியரின் நுண்ணியபார்வையில் படாமல் —வலிமைவாய்ந்த நினைவாற்றலில் பிடிபடாமல் தப்பி விட்ட இரண்டு புதிய சொல்லாக்கங்கள் (மாணிக்கனாரால் படைக்கப்பட்டவை) உள்ளன அவற்றைக் குறிப்பிடுவ தாலும், அவற்றின் சிறப்பைச் சுட்டுவதாலும், அவற்றின் வருங்காலவாழ்வை அறிமுகப்படுத்துவதாலும் பெரும்

Koviloor Digital Library

பயன் ஏற்படும். செம்பதிப்பு, தற்சிறுமை—ஆகிய இரண்டு சொற்களும் இந்த நூலில் இடம் பெறாமல் தப்பி விட்டன.

1. செம்பதிப்பு

'செம்பதிப்பு' என்பது, மாணிக்கனார் படைத்து வழங்கிய சிறந்த சொல்லாகும். இது, அவர்களுக்கு மிகுந்த புகழைத் தருவதாகும்.

மாணிக்கனார் இச்சொல்லைப் படைத்து வழங்குவதற்கு முன்,

சுத்தபதிப்பு
திருத்தியபதிப்பு
திருந்தியபதிப்பு
திருத்தமானபதிப்பு
நல்லபதிப்பு

முதலிய சொற்கள் வழங்கின. மாணிக்கனாரின் 'செம்பதிப்பு' தோன்றியபின் அவை வழக்கிழந்தன.

'செம்பதிப்பு'! எவ்வளவு அழகான பொருத்தமான— அருமையான சொல்லாக்கம்! செங்கோணம், செவ்வகம், செங்கோல், செம்பாகம், செவ்வெண் முதலிய தொடர்களுடன் 'செம்பதிப்பு' என்பதைச் சேர்த்து நோக்கும் போது அதன் அருமை தெரியும்.

பதிப்புக்கலையில் எத்தனை நற்கூறுகள் உண்டோ, அத்தனையும் செம்மையாய் அமைந்ததே 'செம்பதிப்பு'. இந்தச் சொல்லாக்கம் வருங்காலத்தில் பரவிவாழ்வுபெறும்; பெருவழக்காகி நிலைபெறும்; மாணிக்கனாரின் புகழைப் பரப்பிக் கொண்டு இருக்கும். ஆங்கில மொழியில் 'இரும்புத் திரை' என்ற சொல் வின்ஸ்டன் சர்ச்சிலின் பெயரையும், 'இமாலயத் தவறு' என்ற சொல் காந்தியடிகளின் பெயரையும் நினைவூட்டி நிலை பெற்றிருப்பது போல,

Koviloor Digital Library

'செம்பதிப்பு' மாணிக்கனாரின் பெயரைத் தமிழில் நிலை நிறுத்தும்.

இந்த நூலின் மறுபதிப்பில் 'செம்பதிப்பு' இடம் பெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

2. தற்சிறுமை

தற்பெருமை பேசும் மக்களை, அடியவர்களோடு ஒப்பிட்டு பார்த்த மாணிக்கனார்க்கு, ஒரு புதிய சொல்லைப் படைக்கும் நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. அடியவர்கள் அனைவரும் ஆண்டவன் முன்னால் நின்று, தம்மிடம் உள்ள சிறுமையை — குற்றங் குறைகளை எடுத்துக் கூறி முறையிடுவதை அவர்களின் பாடல்கள் வாயிலாக உணர்ந்த மாணிக்கனார், 'தற்பெருமை'க்கு எதிராகத் 'தற்சிறுமை' என்ற சொல்லை ஆக்கியுள்ளார்.

இந்தச் சொல்லும், இந்த நூலின் இரண்டாம் பதிப்பில் இடம் பெற வேண்டும்.

நூலாசிரியரின் நினைவுக்கு

சில சொற்களைப்பற்றி நூலாசிரியர்க்கு நினைவூட்டுவது பயன் தரும் என்பதால், அந்தச் சொற்களை இங்கே குறிப்பிடுகிறேன்.

1. அயன்மை

'அயன்மை' என்ற சொல்லை, மாணிக்கனாரின் புதிய சொல்லாக்கமாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார் (ப. 15). இது மிகவும் பழமையான சொல். தொல்காப்பிய உரையாசிரியர்களில் ஒருவரான நச்சினார்க்கினியர், தம் உரையில் 'அயன்மை' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். (தொல்: பொ. 147). இச்சொல்லைத் 'தமிழ் லெக்சிகனும்' (ப.110), மதுரைத்தமிழ்ச் சங்க அகராதியும் (ப. 120) எடுத்

Koviloor Digital Library

துக்காட்டிப் பொருள் தந்துள்ளன. ஆதலின், 'அயன்மை' என்பது மாணிக்கனாரின் புதுச் சொல்லாக்கம் அன்று.

2. கையேடு

'கையேடு' என்பது, மாணிக்கனாரின் புதுச்சொல்லாக்கமாக இந்நூலில் காட்டப்பட்டுள்ளது (ப. 48). ஆனால், இது மக்கள் பேச்சுவழக்கில் உள்ள பழைய சொல்லாகும்.

தொண்டை நாட்டுமக்கள், பாரத இராமாயணப் பிரசங்கிகளின் பக்கத்தில் அமர்ந்து ஏடுபடிப்பவரை, 'கையேடு படிப்பவர்' என்று இன்றும் கூறுகின்றனர்.

சிறிய அளவில், அடக்கமான அளவில் உள்ள சுவடியை- சிறு குறிப்புநூலைக் 'கையேடு' என்று கூறும் வழக்கம், தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ளது.

இவ்வாறு பழகுதமிழில் பெருவழக்காய் உள்ள 'கையேடு' என்ற சொல், தமிழ்லெக்சிகன் (ப. 119), மதுரைத் தமிழகராதி (ப. 171) ஆகியவற்றில் இடம் பெற்று, பொருள் விளக்கம் அடைந்துள்ளது. எனவே 'கையேடு' மாணிக்கனாரின் புதுச் சொல்லாக்கம் அன்று.

3. கழுத்தி

தொண்டை நாட்டில் மங்கல நாணுடன் (தாலியுடன்) வாழும் பெண்ணைக் 'கட்டுக்கழுத்தி' என்று கூறுகின்றனர். ஆதலின் 'கழுத்தி' என்ற சொல், மாணிக்கனாரின் புதுச் சொல்லாக்கத்தில் இடம் பெறுவது சரியன்று (ப. 19).

4. மனிதம்

'மனிதம்' என்ற சொல், தமிழ்த்தென்றல் திரு. வி. க. படைத்து வழங்கிய சொல்லாகும் ஆதலின் அதனை மாணிக்கனார் படைத்ததாகக் கருதுவது தவறு (ப. 25).

Koviloor Digital Library

மற்றொரு கோணம்

மாணிக்கனாரின் சொல்லாக்கங்களை மற்றொரு கோணத்தில் நோக்கி, பின்வருமாறு மூன்று வகையாகப் பாகுபாடு செய்யலாம்:

1. மொழிபெயர்த்தல் அல்லது தமிழாக்குதல்.
2. பழமையான சொற்களை மீண்டும் வழக்கிற்குக் கொண்டு வருதல்.
3. பழைய சொல் வடிவங்களைப் புதுக்கியும், உரு மாற்றியும் புதிய வடிவம் படைத்துக் கொள்ளுதல் (இதில் ஒப்புமையாக்கமும் அடங்கும்).

இந்த மூன்றின் அடிப்படையில் மாணிக்கனாரின் புதுச் சொல்லாக்கங்களைப் பட்டியல் அமைத்துக் காட்டினால் பெரும்பயன் உண்டாகும்; தெளிவு ஏற்படும்.

காந்தப் புலம்

இந்த நூலில் என் கருத்தைக் கவர்ந்து ஆழ்ந்து சிந்திக்க வைத்து, நூலாசிரியர் கருத்துடன் என் கருத்தை ஒன்றச் செய்த பகுதி, "இச்சொல்லின் பொருத்தம் ஆய்வுக் குரியது" என்று குறிப்பிடும் இடங்களாகும். அவை, என் கருத்தைக் கவரும் காந்தப்புலமாக உள்ளன. "இது, வெறும் பாராட்டு நூல் மட்டும் அன்று; ஆய்வுநூல்; வருங் காலத்தவர்க்கு வழி காட்டும் உயர்ந்த நூல்; குற்றங் குறைகளைச் சரியாக எடை போடும் "நக்கீரர் பார்வை கொண்ட தராசு நூல்" என்ற எண்ணத்தை என் நெஞ்சில் தோற்றுவித்த இடங்கள் அவை.

மாணிக்கத்தமிழ்

தமிழுடன் காலந் தோறும் தகுந்த அடைமொழிகள் சேர்ந்து, தமிழைச் சிறப்பித்துள்ளன. செந்தமிழ், சங்கத்

Koviloor Digital Library

தமிழ், தெய்வத்தமிழ், கன்னித்தமிழ் முதலிய தொடர்கள் சிறப்புவாய்ந்தவை. புலவர்களின் பெயருடன் சேர்ந்து, மூவர் தமிழ், கம்பர் தமிழ், ஆழ்வார் தமிழ், சேக்கிழார் தமிழ், அவ்வை தமிழ், பாரதி தமிழ் முதலிய தொடர்கள் வழங்குகின்றன.

இவற்றைப் போலவே மாணிக்கனாரின் புதிய சொல்லாக்கங்கள் 'மாணிக்கத்தமிழ்' என்ற பெயரைப் பெறும். வருங்காலம் அந்தத் தொடரைப் போற்றும்; போற்றி மதிக்கும். வருங்காலத்தவர்க்காகக் காத்திராமல் இன்றைய தலைமுறையினரும் மாணிக்கத் தமிழை அடையாளம் கண்டு போற்றி மதிக்கத்தொடங்கிவிட்டனர் என்பதை, டாக்டர் பழ. முத்துவீரப்பனின் ஆய்வு நூல் நமக்கு அறிவிக்கின்றது.

முத்துவீரப்பன், "சொல்லாராய்ச்சிக் கலைஞர்களும், வளர்தமிழ் ஆர்வலர்களும், கற்பிகளும், படைப்பிகளும், பிறதுறை வல்லாரும், **மாணிக்கத் தமிழுக்கு** மதிப்பாளர்; மகுடஞ் சூட்டுவர் என்பதில் எனக்கு ஐயமில்லை!" என்கிறார் (ப. 14).

ஆம்! மாணிக்கத்தமிழை இன்று இருப்போரும், இனி வருவோரும் மதிப்பர்; மகுடஞ் சூட்டுவர்! இதில் எனக்கும் ஐயமில்லை!

* * *

Koviloor Digital Library

வரலாற்றுரை

இலக்கியச் செம்மல்
இரா. இளங்குமரன்
பாவாணர் ஆராய்ச்சி நூலகம், திருநகர், மதுரை.

அரசு ஆல் வேம்பு வாகை; அவரை சுரை புடலை, பூசுணை; அல்லி தாமரை முல்லை மல்லிகை; - இன்னவை பெயர் சொல்லிய அளவானே அவற்றுக்குரிய பொருளை நம் நினைவில் நிறுத்துகின்றன. அவ்வாறே, அவற்றைப் பார்த்த அளவால் அவற்றின் பெயரை நினைவூட்டுகின்றன. இவற்றை எண்ணுங்கால் இப்பெயர்க் கொடையை அருளிய பெயரறியாப் பெருமக்களை நினைவுகூர்கின்றோமா? செயற்கரிய செய்த செம்மல்கள் எனப் போற்றுகின்றோமா? இல்லையே! ஏன்?

எள்தாகக் கிடைக்கும் பொருள் எத்தகைய அரியது எனினும் உரிய பாராட்டைப் பெறுவது இல்லை. உலகியல் பொது நிலை இது. இதற்குச் சொல்லாக்கப் படைப்பாளி களின் தொண்டும் விலக்காகி விடவில்லை!

செறிவுமிக்க ஒருகாட்டுள் நம்மைவிடுத்து, "இம்மரம் செடி கொடி புல் பூண்டுகளுள் ஒரு பத்தினுக்குப் பொருந்திய பெயரைப் படைத்துத் தருக" என்று ஒரு கட்டளை பிறந்தால் நாம் எப்படித் திக்கித் திணறுவோம்; திகைப்புறுவோம்; எத்தனை எத்தனை வகையாக எண்ணி எண்ணி இளைப்போம்!

"மெம்பர்" என்னும் சொல்லைத் தமிழாக்க நினைத்தேன்; அரைமணிநேரம் மண்டையை உடைத்துக்

Koviloor Digital Library

கொண்டதுதான் மிதம்! அவயவி, அங்கத்தான்," சபிகன், உறுப்பி எனச் சொற்கள் வந்தாலும் மனத்தோடு ஒட்ட வில்லை. இப்பொழுது மெம்பர் என்றே எழுதுகின்றேன். எவராவது நல்ல சொல் கண்டுபிடித்துத் தந்தால் பின்னே பயன் படுத்திக்கொள்கிறேன்'' என்று பன்மொழிப் பெரும் பாவலர், நாட்டியற் புலவர் பாரதியார் எழுதுகிறார் என்றால் சொல்லாக்கக் கலைத் திறம் பெறுதல் எளிதோ?

'பிரசங்கம்' என்பதற்குத் தமிழ்ச் சொல் இல்லை என்று புலவர்கள் திகைத்துக் கொண்டிருக்க— அதனைச் சுட்டிக் காட்டிப் புலவர் சிலர் எள்ளி நகைத்துக் கொண்டு இருக்க- "சொற்பொழிவாற்றுப் படை'' என ஒரு நூலையே தமிழ் உலகுக்குப் படைத்துத் தந்தாரே நெல்லை பால்வண்ணர்!

அச் 'சொற் பொழிவு' தமிழுலகை எப்படி யெல்லாம் ஆண்டு வருகின்றது! 'பொழிவு' என்ற அளவிலும் தன்னைக் குறுக்கிக் கொண்டு பொருள்வளம் புரிகின்றதே! இவற்றை எண்ணினால், புதுச்சொற் படைப்பாளரின் புலமைத் திறத்தை மெய்யாக உணர்ந்து போற்ற முடியும்!

"சொல் இறையோடு இருந்தது'' என்றும், "சொல் இறையாக இருந்தது" என்றும், "சொல்லே இறை'' என்றும் கண்டு போற்றிய தொன் முதுமக்கள் அச் சொற்பயன் உணர்ந்த உணர்வால்தான் அவ்வாறு போற்றினர். 'சொல்' என்பதற்கு 'நெல்' என்றும் 'சொன்றி' என்பதற்குச் 'சோறு' என்றும் பழந்தமிழ் உலகம் பொருள் கொண்டது எனின், அதன் அருமையும் பயனும் கண்டு கொண்டதன் விளைவேயாம்,

பல்லாயிரம் பல்லாயிரமாக நாம் பலுக்கிவரும் சொற்களைப் படைத்த படைப்பாளிகள் நம் வணக்கத்துக்கு உரியவர்கள். அவர்கள் பெயர்களை நாம்

Koviloor Digital Library

அறியக் கூடவில்லை எனினும், அவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். அவர்கள் பணித்திறம் இடையறவு படாமல் தொடர்ந்து தொண்டாற்றிவரும் பெருமக்களின் சொல்லாக்கப் படையல்கள் அவர்கள் நமக்கு அருளிய ஏடுகளின் வழியே அறிய வாய்த்துள்ளன. இன்னார் கொடை இன்னதென ஒராற்றான் அறிந்து கொள்ளவும் முடிகின்றன. "முரிவரி'' என்றால் எவர் முந்துகிறார்? சாழல், தெள்ளேணம், தோணோக்கம்- சொல்லியவுடனே எவர் சுடர்கின்றார்? இளங்கோவடிகளாரும், மாணிக்க வாசகரும் அல்லரோ! இவர்கள் இவ்வாட்சிகளை வழங்கி இசையெழுப்பா திருந்திருப்பரேல் நாம் அறிந்திருக்கக் கூடுமோ இவற்றை! ''கெடவரல் பண்ணை'' விளையாட்டுகளை ஆசிரியர் தொல்காப்பியர் சுட்டி இருந்தும் இன்ன விளையாட்டுகள் எனக்காண என்னென்ன பாடுகள் படுகின்றோம்? இதனால் தான் நான்முகன் படைப்பினும் நாவலன்படைப்புச் சிறந்தது என நயந்தார் ஒரு புலவர்.

வழிவழியாக வரும் சொல்லாக்கிகளுள் தமிழ்த் தென்றல் திரு. வி. க., தவத்திரு மறைமலையடிகளார், மொழிஞாயிறு பாவாணர் ஆகியவர்கள் இவ்விருபதாம் நூற்றாண்டொடு தொடர்புடையவர்கள். இவர்கள் வரிசையில் இந்நாளில் இத் தொடர்பணியை அருமை யாகவும் நயமாகவும் அதே பொழுதில் விரிவாகவும் செய்து வரும் ஏந்தல் மூதறிஞர் செம்மல் வ. சுப. மாணிக்கனார் ஆவர்.

மாணிக்கர் ஒரு பல்கலைக் கழகம்! தமிழ்வளப் பல்கலைக் கழகம்! துறைதோறும் துறைதோறும் துடிப் புடனும் துலக்கமுடனும் தொண்டாற்றி வரும் உயிர் வளப் பலகலைக் கழகம். அக்கழகம் செயலாற்றிவரும்

Koviloor Digital Library

அருமையும் பெருமையும், உரமும் ஊட்டமுமிக்க துறைகள் பலவற்றுள் ஒன்று சொல்லாக்கத்துறை. அத்துறை, அவரைப் படைப்பாக்க ஏந்தலாகப் பளிச்சிடக் காட்டுதல் வெள்ளிடை!

மாணிக்கர் சொல்லாக்க வளம் ஒரு நூலாக்க அளவுக்கு அமைந்துளதெனின், அஃதெளிதான செயலாமோ? அவ்வாறு தனிநூலாக்க அளவுக்குச் சொல்லாக்கம் செய்தார் பாவாணரும் மாணிக்கருமே எனின் தமிழுலகம் இவர்களை எப்படி யெல்லாம் தலைமேற் கொண்டு போற்ற வேண்டும்! ஆனால், "சொல்லாக்கிகள் புகழ் வேட்டுவர்களாக அமைவது இல்லை" என்பது அவர்களைப் புத்தம் புது மணிமேகலையராக மதிக்க ஏவுகின்றது! அம் மேகலையார் தாமே புகழும் வேண்டாப் புகழாட்டியாய், "ஆபுத்திரன் கை அமுதசுரபி" "யாவரும் வருக" எனக் கொடையாட்டியாகத் திகழ்ந்தார். "கனிதந்தால், கனியுண்ணவும் வல்லிரோ" எனக் கூவிக் கூவி அழைத்து அருட்கனிகளை வழங்கிய அப்பரடிகள் போல, "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனச் சொல்லாக்கிகள் இருப்பினும், அச் சொல்லாக்கங்களைப் பரப்பிகளாக எழுத்தாளர்கள் விளங்க வேண்டுதல் கடமையன்றோ! வளருந்தமிழுக்கு வளஞ் சேர்க்க மெய்யாகவே அரசு கருதுமானால் சொல்லாக்கிகளை எத்தனை எத்தனை வழிகளால் ஊக்கி வருதல் வேண்டும்! இவ்வகையான் எல்லாம் தமிழுலகு விழிப்புறும் நாளே பழிப்பறு நாளாம்!

ஒரு சிறு விழிப்பு முனைவர் பழ. முத்துவீரப்பருக்கு ஏற்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் வாசகராகப் பணியாற்றிவரும் அவர், மாணிக்கச் செம்மலின் நூல்களைக் கருத்துடன் கற்றுச்

Koviloor Digital Library

சொல்லாக்கப் படைப்புகளைத் தொகுத்து ஆய்வு நோக்கில் அடைவுறுத்தி அகராதி அமைப்பில் நூலாக்கியுள்ளார். ஆங்காங்குத் தனித்தனியே பளிச்சிடும் மணிகளைத் தொகுத்து ஒழுங்குபட மாலையாக்கித் தமிழன்னைக்கு மணிமாலையெனச் சூட்டி மகிழ்கின்றார். இச்சூட்டுதல் தமிழாய்ஞருக்கு அரியதோர் கருவிநூல் தந்த கடப் பாடாகச் சிறக்கின்றது.கருவிநூல் தருவாரே ஆய்வுலகுக்கும் ஆய்ஞருக்கும் வைப்பகர். இந்நூலாக்கப் பணியால் முத்து வீரப்பர் வைப்பகராம் பெருமை எய்துகின்றார். அவர்தம் உழைப்பும் உயர்நோக்கும் நாளும் சிறந்து நலம்பல நல்குவதாக!

நூன் முகப்பு, சொல்லாக்கக் கலைச்சிறப்பு, தனிச் சொல்லாக்கம், கூட்டுச் சொல்லாக்கம், சொல்லாக்க முறைகள் மேலாய்வு என அருஞ்செய்திகள் பலவற்றைக் கொண்டுள்ளது (1— 14).

நூல்; தனிச் சொல்லாக்கம் என்னும் பகுதியில் (15-36) பெயரிலிருந்து பெயர், வினையிலிருந்து பெயர், பெயரிலி ருந்து வினை, வினையில் இருந்து வினை, கூட்டுச் சொல்லில் இருந்து தனிச் சொல் என்பவை அடைவுறுத்தப் பட்டுள்ளன.

கூட்டுச் சொல்லாக்கம் என்னும் பகுதியில் (37 - 81) பெயரும் பெயரும் பெயராதல், பெயரும் வினையும் பெயராதல், வினையும் பெயரும் பெயராதல், வினையும் வினையும் பெயராதல் இன்ன பிறவும் அடைவு செய்யப் பட்டுள்ளன. நிறைவில் சொற்பட்டி இடம் பெற்றுள்ளது.

சொற்பொருள் விளக்கத் தொகுப்பா இது? அவ் வளவில் நிற்கவில்லை. அரிய ஆய்வும் மேற்கொண்டுளார் என்பது அடைவு வகைகளே காட்டி விடுகின்றன.

Koviloor Digital Library

ஒரு சொல்லை விளக்குங்கால், சொல்லைத்தந்து, அச்சொல் இடம் பெறும் தொடரைத்தந்து, அத்தொடர் இடம் பெறும் இடத்தைச் சுட்டி, அச்சொல்லுக்கு இன்றியமையாவிளக்கம் குறிக்கும் முறையைத் தொகுப்பாளர் மேற்கொண்டுளார். இவ்வமைதி பெருக்க சுருக்கங்கள் இன்றி ஒரொழுங்கில் சொல்விளக்கம் நடையுறச் செய்கின்றது.

தனிமாந்தருக்கு வரலாறு இருப்பது போலச் சொற்களுக்கும் வரலாறு உண்டு. அவ்வகையில் தனியே ஆய்வு மேற் கொள்ள இவ்வடைவு தூண்டும். அத்தூண்டல் தொகுப்பாசிரியர்க்கும் உண்டு என்பது 'மேலாய்வு' என்னும் முகப்பால் விளங்கும் ஈகம், உயிரி, உறுப்பி, மனிதன், குடும்பி, ஆடரங்கம் இன்னன சொல்வரலாற்றுப் போக்கில் ஆயப்படுமானால் இவ்வடைவினின்று விடுபாடு பெறக்கூடும். பழவழக்கில் உள்ளவை, புத்தாக்கப் படைப்பாளர் வழிப்பட்டவை, பழவழக்கில் இருந்து சார்புநிலையாக்கம் பெற்றவை என்றெல்லாம் ஆய்வுக்கு இவ்வடங்கல் இடந்தரும். சொல்லாக்கம் பழமையாய், பொருட்பேறு புதுமையாய் அமைதலும் இவ்வாய்வில் இடம்பெறக் கூடியதே!

'நீரி' என்பதைச் சித்தர் வழங்குகிறார். 'நீர்வாழ்வன' என்பதை மூன்றில் ஒன்றாய் முடித்துக் காட்டித் தெளிந்த இனிய சொல்லாட்சியாகக் கையாள்கிறார். 'நீர்வாழி' என்று ஒருவர் சுட்ட நேரினும் நீரிக்கு இணையாகாவாறு திறமாகப் படைக்கிறார். இப்படைப்புப்பயன் ஊர்வனவற்றை 'ஊரி' என நாம் படைத்துக் கொள்ளத் தூண்டுகின்றது. "சுடர் விளக்கெனினும் தூண்டுகோல் வேண்டும்" என்பது, சொல்லாக்கிகளுக்கு எத்தகு பொருந்த அமைந்து விடுகின்றது!

Koviloor Digital Library

'ஊரி' என்பதையும் முந்தையர் காணாமல் இலர். பாம்புக்கு, 'அகடு ஊரி' (அகடூரி) எனப் பெயரிட்டவர் (அகடு = வயிறு) அறியாமலா பெயரிட்டார்? கல்வி சுவருக்குள் அடங்காமல் அப்பாலுக்கு அப்பாலாய் ஊர்ந்து செல்லவேண்டும் என்பதால் 'கல்லூரி' கண்டார் திருத்தக்கதேவர். 'ஊரி' யாட்சி எவ்வளவு பழையது. 'அறையும் ஆடரங்கும்'—கம்பர் கொடை. "அங்கொரு குடும்பி தன்னை அடுத்தவன் பன்றி மேய்த்து" எச்.ஏ. கிருட்டினன் (இரட்சணிய யாத்திரிகம்) கொடை. இப்படி ஆய்வுக்குத் தூண்டும் அருங்கொடை அளித்த அறிஞர் முத்துவீரப்பர் பெரும் பாராட்டுக்கு உரியர். நன்றிக்கும் உரியர்.

நூல் தொகுத்தோ, இயற்றியோ, படைத்தோ ஆவதென்? தனியுடைமையைப் பொதுவுடைமையாக்கும் அரும்பணி அச்சிட்டில் தானே உள்ளது! அச்சீட்டிலும் மொழி நலங்காத்தலே 'வழி நலம்' எனக்கடப்பாடு கொண்டு கருவிநூல் வெளியீடு செய்வார் வேண்டுமே! ''கையைக் கடித்தாலும், மெய்யாக நலஞ்சேர்ப்பது மேதக்க கருவிநூலே'' எனக் கொண்டு வெளியிட்டு வரும் பதிப்புச் செல்வர் - பதிப்பாலே மொழி வரலாற்றில் தம்மைப் பதித்துக் கொண்டு வரும் பதிப்புச் செல்வர். பேரா. மெய்யப்பர் தமிழறிஞர்-தமிழார்வலர்-பாராட்டுக் குரியர். பழுத்தபழமாம் தாமரைச் செல்வர் - மேனாள் கழக அமைச்சர்-வ. சுப்பையா அவர்களின் வழிநலம் பாராட்டிக் கருவிநூல்களை வெளியிட்டு வரும் இளவள மெய்யப்பர் தொண்டு இனிது சிறப்பதாக!

* • •

Koviloor Digital Library

பாராட்டுரை

டாக்டர் இரா. மோகன்

இணைப் பேராசிரியர், தமிழியல்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

"நடுவிலே ஒரு ரசமான வார்த்தை. **'மெம்பர்'** என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் எனக்கு அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சர்யம். **'அவயவி'** சரியான வார்த்தையில்லை. **'அங்கத்தான்'** கட்டி வராது. **'சபிகன்'** சரியான பதந்தான்; ஆனால் பொதுஜனங்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன். **'உறுப்பாளி?'** ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனதிற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன்! கடைசியாக **'மெம்பர்'** என்று எழுதிவிட்டேன், இன்னும் ஆர, அமர யோசித்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொரு முறை சொல்லுகிறேன்" என்னும் கவியரசர் பாரதியாரின் அனுபவம், சொல்லாக்க முயற்சியில் உள்ள அரும்பாட்டையும் இடர்ப்பாட்டையும் தெள்ளிதின் உணர்த்தும். சரியான சொல்லாக இருக்க வேண்டும்; பொருந்திய சொல்லாக இருக்க வேண்டும்; பொது மக்களுக்குப் புரியும் சொல்லாக இருக்க வேண்டும்; நல்ல சொல்லாக இருக்க வேண்டும்; ஆழ்ந்து சிந்தித்து உருவாக்கிய சொல்லாக இருக்க வேண்டும் — இத்தனை கோணங்களில் இருந்து 'சொல்லாக்கம்' குறித்துச் சிந்திக்கின்றார் பாரதியார். 'சொல்லாக்கம் என்பது ஓர்

Koviloor Digital Library

அரிய கலை. ஆழ்ந்தகன்ற இலக்கண, இலக்கியப் புலமை உடையவர்களே இத்துறையில் வித்தகம் காட்டி விருந்து படைக்க முடியும்' என இந் நூலாசிரியர் டாக்டர் பழ. முத்துவீரப்பனும் பாரதியாரை வழிமொழிந்திருப்பது மனங்கொளத் தக்கதாகும்.

பாடலிபுத்திரம் பொன் மலிந்தது எனில், மூதறிஞர் வ சுப. மாணிக்கனாரின் மொழிநடை புதுச்சொல் மலிந்தது எனலாம். தமிழறிஞர்களுள் அவரளவு துறைதோறும் புதிய சொல்லாக்கங்களைப் படைத்தவர் எவரும் இலர் என்று கூடச் சொல்விடலாம். இந் நூலினைப் பயில்வோர் இம் முடிவுக்கே வருவர். இந் நூலாசிரியர், வ சுப. மாணிக்கனார் தம் நூல்களில் படைத்துள்ள சொல் லாக்கங்களை வகுத்தும் தொகுத்தும் தந்துள்ளார்; தனிச் சொல்லாக்கம், கூட்டுச் சொல்லாக்கம் என்ற இருபெருந் தலைப்புகளில் வ சுப. மா. வின் சொல்லாக்கங்கள் இந் நூலில் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

தேவையை நிரப்ப உருவானவை, புதுமை படைக்கும் ஆர்வத்தால் உருவானவை, தனித்தன்மை காட்டும் விழைவால் உருவானவை, ஒப்புமையாக்கமாக உருவானவை என வ. சுப. மாணிக்கனாரின் சொல்லாக்கங் களை நான்கு வகையாகப் பாகுபடுத்தித் தந்திருக்கும் இந் நூலாசிரியரின் முயற்சி போற்றத்தக்கதாகும்.

"**இலக்கிய மலோடிகள்** இலக்கியத்தை மேலோட்ட மாகப் படிப்பவர்களைச் சுட்ட மிகப் பொருத்தமான சொல். அருமையான சொல்லாக்கம்" என்றாற்போல் பொருந்திய, அரிய சொல்லாக்கத்தினைக் காணும் போது நெஞ்சாரப் பாராட்டியும், "**கல்வி திட்டர்கள்**; கல்வித் திட்டத்தர் என்று இருப்பின் தெளிவாகப் பொருள்

Koviloor Digital Library

விளங்கும். கல்வித் திட்டர் என்பது 'கல்வியைத் திட்டுபவர்' என்ற பொருளையும் தரும்'' என்றாற் போல் சொல்லாக்கம் தரும் பொருள் மயக்கத்தைச் சுட்டியும், ''**பேராசிரியம்:** பேராசிரியப் பதவி என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. பொருத்தம் ஆய்விற்குரியது. பேராசிரியம் என்பது 'பேராசிரியர் உரை'யைக் குறிக்கப் பயன்பட்டுள்ளது'' என்றாற் போல் சொல்லாக்கத்தின் பொருத்தத்தினை ஆய்விற்குரியதாக்கியும், ''**புரட்சியம்:** புரட்சி + இயல் > புரட்சியியல் > புரட்சியியம் என்று வருவதே சரியானது'' என்றாற் போல் சரியான சொல்லாக்கத்தினை எடுத்துக்காட்டியும், ''**நூலறை:** நூல் + அறை > நூலறை. 'நூலகம்' என்ற அருமையான சொல் வழக்கில் உள்ளது; **சீர்திருத்தி:** சீர்திருத்தம் + இ > சீர்திருத்தி. வழக்கில் உள்ள சீர்திருத்தவாதி என்பதை விட இச்சொல் மிகப் பொருத்தமானதாகும்'' என்றாற் போல் சொல்லாக்கத்தினை வழக்கொடு ஒப்பு நோக்கியும் பழ. முத்துவீரப்பன் இந் நூலை உருவாக்கியிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இந் நூலைப் பயில்வார் பல்வேறு ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை - வ. சுப. மா. உருவாக்கித்தந்துள்ள மொழியாக்கங்களைத் தெரிந்து கொள்ளலாம். சில சான்றுகள் வருமாறு:

Mike	— ஒலிப்பான் (ஒலிபெருக்கி)
Notes	— கையேடு
Soap	— நுரைப்பான், அழுக்கறுப்பான்
Fridge	— குளிரகம்
Side burn	— கன்னத் திண்டு
News reporter	— செய்தித்தாள் குறிப்பாளர், செய்திக் குறிக்குநர்

Koviloor Digital Library

Money order	— பொருளஞ்சல் (பணவிடை)
Manager	— மேலாள்
Sales Target	— விற்பனைக் குறி
Office	— வினைக்களம் (அலுவலகம்)
Deposit	— கட்டுத்தொகை
Brush	— பல்லுரசி
World map	— கைச்சிறு திணைப்படம்
Cigarette	— வெண் சுருள்
Ticket	— வழிச்சீட்டு (பயணச்சீட்டு)

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஓரிரு சொற்கள் வ.சுப. மாணிக்கனார் ஆளுவதற்கு முன்பே வழக்கிற்கு வந்து விட்டவை. அவற்றை வ.சுப. மாணிக்கனாரின் சொல்லாக்கங்கள் என்பது பொருந்தாது. 'அயன்மை', (பழைய உரையாசிரியரால் கையாளப்பட்டுள்ள சொல்லாட்சி) 'வினைச்சி' (பாரதியாரால் கையாளப் பட்டுள்ள சொல்லாட்சி), என்னும் இரு சொற்கள் இவ்வகையில் சிந்திக்கத்தக்கவை.

இந் நூல் மூதறிஞர் **வ. சுப. மாணிக்கனார்** குறித்து அவரது சொல்லாக்கம் குறித்து – வெளிவரும் முதல் நூல். அரிதின் முயன்று இந்நூலை உருவாக்கியுள்ள **பழ. முத்துவீரப்பன்** அவர்களும், அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து இந் நூலை அழகுற வெளியிட்டுள்ள பதிப்புச் செம்மல் **ச. மெய்யப்பனார்** அவர்களும் தமிழ் கூறு நல்லுலகின் பாராட்டிற்கும் வரவேற்புக்கும் உரியவர் ஆவர்.

* * *

Koviloor Digital Library

நன்றியுரை

சான்றோர் **மாணிக்கர்** சங்கத் தமிழனைய தூயர். வள்ளுவ நெறிகளை வாழ்ந்து காட்டும் வளர்புகழ் வாழ்வினர். இப் பெரியாரிடம் தமிழ்பயிலும் பேறு பெற்றவன் நான்.

என்னைப் போல இலட்சக் கணக்கான மாணவர்கள் நல்லறிஞர் பலரிடம் கல்வி ஒளி பெற வழி செய்தவர்கள் தன்னிகரில்லாத் தனிப்பெருங்கொடையாளர், செட்டி நாட்டரசர் **டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரும்** அவர்தம் குடும்பத்தினரும். பொது நிலையில் அன்றித் தனிநிலையில் படிப்புத் தந்து, பரிசுதந்து, பணிதந்து, பணியுயர்வுதந்து பெருமையும் பெருவாழ்வும் தந்தவர்கள் முன்னை இணைவேந்தர் **அரசர் முத்தையவேளும்,** இற்றை இணைவேந்தர் **'எண்ணிய முடிக்கும் எம். ஏ. எம்'** அவர்களும் ஆவார்கள்.

நூலை வெளியிட இசைவளித்தவர்கள் மதிப்பிற்குரிய ஆட்சிக்குழுவினர். ஆட்சிக்குழுவின் ஆற்றல் சான்ற தலைவர், ஆள்வினைச் செம்மல், என்னை வாழ்த்தி வளரச் செய்பவர்கள் மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் **இராம. சேதுநாராயணன்** அவர்கள்.

தொட்டதெல்லாம் பொன்னாக்கும் தொழில் முதல்வர், வித்தகத்தின் மொத்தஉரு, எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, எடுத்த காரியம் யாவினும் வெற்றி, என்ற புகழ்ப் பாட்டிற்குரிய **வெற்றிச் செல்வர் திருமிகு. ச.மெய்யப்பனார்**

Koviloor Digital Library

அவர்கள் என் பேராசிரியர். மாணவப் பருவத்திலேயே என்னிடம் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்கள். அவரவர் தகுதியறிந்து பணி கொள்ளும் தமிழ்நலம் சான்றவர். அவர்கள் வேட்கையே இன்று நூல் வடிவம் பெறுகிறது.

தொகை வகைப் படுத்துவதற்கு இன்முகத்தோடு நெறிப்படுத்தி உதவியவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியற்துறை இணைப் பேராசிரியர் (இப்போது தெலுங்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர்) டாக்டர் பாலசுப்பிரமணியம் அவர்கள்.

நூலைச்சிறப்புற—வனப்புற—வெளியிடுபவர்கள் மணிவாசகர் பதிப்பகத்தார். அதன் உரிமையாளர் இனிய நண்பர்-திட்டமிட்டுப் பணிமுடிக்கும் வெற்றித் தந்தையின் புகழ்மைந்தர்—திரு. மெ. மீனாட்சிசோமசுந்தரம் அவர்கள்.

இவர்கள் அத்துணை பேருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் உவகை அடைகிறேன்.

நாள் : 20—12—88 அன்பன்,

அண்ணாமலைநகர் பழ. முத்துவீரப்பன்

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

வ.சுப. மாணிக்கனாரின் சொல்லாக்கம்

வளர்தமிழுக்கு வளஞ்சேர்க்கும் சான்றோர்களுள் தலையிடம் பெறுபவர் **மூதறிஞர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார்.** பெருமையும் பெருமிதமும் நிரம்பிய பெரும் புலவர். தனக்கெனத் தனிநடை யுடையவர். அந்நடை ஆர்ப்பரிக்கும் அலைநடையல்ல; ஆற்றுப்படுத்தும் அறநடை. சிந்தனையைக் குழப்பும் சிக்கல் நடையல்ல. சிறுசிறு தொடர்களால் அமைந்த செறிநடை. முன்னை இலக்கியங்களையே மடுத்தெழுதும் முதுநடையல்ல; மொழித்திறன் பெருக்கும் பழநடை; கவிநடை. ஆங்காங்கே தனித்தன்மை காட்டுப் சொல்லாக்கங்கள் நிரம்பிய சுவைநடை. மொத்தத்தில் எளிநடை, தெளிநடை. இவர் நடை. இந்த அணிநடையில் அமைந்த புதுச்சொற் பூக்கள் இங்கே மாலையாக்கப்பட்டுள்ளன.

சொல்லாக்கம் - அரிய கலை:

சொல்லாக்கம் என்பது ஓர் அரியகலை. ஆழ்ந்தகன்ற இலக்கண இலக்கியப் புலமை உடையவர்களே இத்துறையில் வித்தகம் காட்டி விருந்து படைக்க முடியும். அடிப்படை அறிவில்லாதவர்கள் ஆக்கும் சொற்கோலங்கள் நீர்க்கோலங்களாக - ஏரல் எழுத்துக்களாக வீழ்ந்துபடும்.

'சொல்வளமும் பொருள் வளமும் சேர்ந்தே மொழிவளம் எனப்படும். சொல்வளம் தொடராத பொருள்வளம், உடல் நலம் இல்லா உளநலம் போன்றது. வளம்படைத்த தமிழ் மொழிக்குச் சொல்லாக்கிகள் மிகத் தேவை. அவ்வப்போது சொல்லை வடித்துக் கொடுக்காதவன், வடித்துக்கொள்ளாதவன் மொழிக்கடன் ஆற்றாதவன் ஆகின்றான்; வேற்றுச்சொல் வரவுக்கு இடங்கொடுப்பவன் ஆகின்றான்[1]' என்று அறிஞர் தம் தமிழ்க்கடன் சுட்டுவர் **பேராசிரியர்.**

*1 மாணிக்கம் வ சுப., காப்பியப் பார்வை, ப. 194.

Koviloor Digital Library

கால மாற்றத்திற்கேற்ப - அறிவியல் பெருக்கத்திற்கேற்ப - வாழ்க்கைத் தேவைகளுக்கேற்ப - நிறுவனப் பயன்பாடுகளுக்குக்கேற்ப - துறைதோறும் துறைதோறும் புதிய புதிய சொற்கள் தேவைப்படுகின்றன. தாய்மொழியை நேசிப்போர் பிறமொழியை யாசிப்போராக மாறிவிடாமல் இருக்க இவை அவசியமாகின்றன. பல்கலைக்கழக அளவிலேயே எண்ணிப் பார்ப்போமே! சர்வகலாசாலை என்றே சொல்லிச் சொல்லிப் பழகிவிட்டவர்கள் நடுவே தொடக்கத்தில் 'பல்கலைக்கழகம்' என்ற சொல் ஏளனப்படுத்தப்பட்டது. இன்றோ அச்சொல் முழுஅளவில் ஏற்கப்பட்டுவிட்டது. Syndicate, Senate என்பன தமிழெழுத்துக்களிலே எழுதப்பட்டு வந்த நிலை மாறி அவை 'ஆட்சிக்குழு'வாகவும், ஆளவை'யாகவும் மொழியாக்கம் பெற்றன. Faculty 'வளர்புலம்' ஆயிற்று. Dean 'புலமுதன்மையர்' ஆயிற்று. இவ்வாறு ஆங்கிலச் சொற்களுக்குரிய ஆயிரமாயிரம் தமிழ்ச் சொற்கள் சான்றோர்களால் எண்ணி எண்ணிச் செய்யப்பட்டன.

எல்லாச் சொற்களுக்கும் எடுத்த எடுப்பில் சரியான சொல்லை எவரும் உருவாக்கிவிட முடியாது. தொடக்க முயற்சிகள் மொழி பெயர்ப்புக்களாகக் கூட அமையலாம். அதில் தவறில்லை. பின் வருவோர் அவற்றை இழைத்து இழைத்துப் புதுவண்ணம் காண்பர்; காணவேண்டும். காலப்போக்கில் நீண்ட சொற்கள் செறிவுபெறும். கருத்தினை உணர்த்தும் வண்ணம் மொழியாக்கம் பெறும். சொல்லாக்கியின் அறிவுக் கூர்மைக்கேற்ப - ஆளுமைத் திறனுக்கேற்ப இவை மெருகுபெறும். பொருளுணர்த்தும் திறத்திற்கேற்ப - உச்சரிப்பெளிமைக்கேற்ப நிலைபெறும்.

கணிப்பொறி கணிப்பான் ஆகி இன்று கணிப்பி ஆகிவிடவில்லையா? புகைப்படம் நிழற்படமாகி இன்று 'ஒளிப்படம்' ஆகவில்லையா? முடி வெட்டுவோன், முடி திருத்துவோன் ஆகி முடிதிருத்தி என்று மாற்றம்

Koviloor Digital Library

பெறவில்லையா? இவ்வாறு காலத் தேவைகளுக் கேற்ப புதுச்சொற்கள் உருவாக்கப்படும்பொழுதே, பழஞ்சொற்களும் புதுக்கப்படுகின்றன. செலாவணி ஆக வேண்டும் என்றால் தேய்ந்த காசுகளை மூட்டைகட்டி வைத்து விட்டு, புதிய காசுகளை அச்சடித்தே ஆக வேண்டும். தின்றதையே தின்றுெ தவிட்டுவதில் புதுமையுண்டா? அன்றன்று புதுமைகள் காணும் ஆர்வம் வேண்டாமா?

புதுமை செய்யும் விழைவில் மரபுக்கு மாறுபட்ட சொற்களை உருவாக்குதல் பொருந்தாது. காட்டாக, பெண்பாற் சொற்கள் இகர விகுதி பெற்று வரும் என்பதற்காக, புலவன் என்ற சொல்லுக்குப் புலவி என்ற சொல் பெண்பாற் சொல்லாகாது. ஆண்பாற் சொற்கள் ஆன் விகுதி பெற்றுவரும் என்பதற்காக 'இல்லாள்' என்பதற்கு இல்லான் என்பது உரிய ஆண்பாற் சொல்லாகாது. எனவே, ஆக்கும் சொற்கள் இலக்கண ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டனவாக இருந்தால் மட்டும் போதா. அவை மரபொழுங்கிற்கு மாறுபடாதவையாகவும், உச்சரிப்பு எளிமை உடையவையாகவும், பல்லாண்டுகளாக வழக்கில் உள்ள சொற்களுக்கு மாற்றுப்பொருள் தந்து குழப்பம் ஏற்படுத்தாதவையாகவும் இருக்க வேண்டும். இன்றேல், இவற்றை ஆன்றோர் உலகம் ஏற்றுக் கொண்டாலும் அன்றாட உலகம் 'தள்ளி வைத்து' விடும். வாழாவெட்டிகளாக முடங்கிக் கிடக்க வேண்டியதுதான். ஒளிப்பறவைகளாக உலாவர முடியாது.

பழுத்த மொழிப் புலமையாலும் அளவான புதுமை ஆர்வத்தாலும் இன்றைய சொற்படைஞர் அணியில் முதலிடம் பெறுகிறார் மாணிக்கனார். தமிழ்ப் பேராசிரியர்களில் இவரளவு துறை தோறும் புதிய சொற்களைப் படைத்தவர் எவரும் இலர் என்று கூடச் சொல்லிவிடலாம். இனி, இவர் படைத்த சொல்லாக்கங்களை வகுத்தும் தொகுத்தும் காண்போம்.

Koviloor Digital Library

சொல்லாக்கம்

- 1. தனிச்சொல்லாக்கம்
- 2. கூட்டுச்சொல்லாக்கம்

1. தனிச்சொல்லாக்கம்

- பெயரிலிருந்து பெயர்
- வினையிலிருந்து பெயர்
- பெயரிலிருந்து வினை
- வினையிலிருந்து வினை
- கூட்டுச்சொல் லிலிருந்து தனிச்சொல் (பெயர்)
- கூட்டுச்சொல் லில் இருந்து தனிச்செ,ால் (வினை)

2. கூட்டுச் சொல்லாக்கம்

- பெயர்+ பெயர்> பெயர்
- பெயர்+ வினை> பெயர்
- வினை+ பெயர்> பெயர்
- வினை+ வினை> பெயர்
- வினையடி+ பெயர்> பெயர்
  - பண்படி+ பெயர்> பெயர்
- வினையடை+ பெயர்> பெயர்
- பெயர்+ வினை> வினை
- வினை+ வினை> வினை

Koviloor Digital Library

தனிச்சொல்லாக்கம், கூட்டுச் சொல்லாக்கம் என்ற இருபெருந் தலைப்புகளில் இவர்தம் சொல்லாக்கங்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

1. தனிச்சொல்லாக்கம்:

1 : 1 – பெயரிலிருந்து பெயர் (எ.டு.) கற்பு > கற்பி

1 : 2 - வினையிலிருந்து பெயர் (எ.டு.) ஆய் > ஆய்ஞர்

1 : 3 - பெயரிலிருந்து வினை (எ.டு.) நன்றி > நன்றியம்.

1 : 4 – வினையிலிருந்து வினை (எ.டு.) மெலி > மெலிக்காது

1 : 5 - கூட்டுச் சொல்லிலிருந்து தனிச்சொல் (பெயர்) (எ.டு.) அரசியல் > அரசியம்

1 : 5. 1 - கூட்டுச்சொல்லிலிருந்து தனிச்சொல் (வினை) (எ.டு.) வானொலி > வானொலிக்கின்றேன்.

இவ்வகையில் ஏறத்தாழ 173 சொற்கள் உருவாக்கப் பட்டுள்ளன. பெயர்ச் சொல்லிலிருந்து பெயர்ச்சொல் என்பதே எண்ணிக்கை யளவிலும் முதலிடம் பெறுகிறது. ஏறக்குறைய 96 சொற்கள் இவ்வகையில் உள்ளன. அடுத்த நிலையில் ஏற்கனவே பரவலாக வழக்கில் உள்ள கூட்டுச்சொற்களில் இருந்து தனிச்சொற்களை (பெயர்) மிகுதியாக உருவாக்கியிருக்கக் காண்கிறோம்.

கீழ்க்காணும் விகுதிகள் சேர்ந்து புதிய சொற்கள் உருவாகியுள்ளன:

1) மை விகுதி — தமிழ்மை, சமன்மை, அயன்மை, சங்கமை, மனமை, பாட்டுமை, வீண்மை.

Koviloor Digital Library

2) இகர விகுதி — குறிக்கோளி, உயிரி.
உகரம்கெட்டுஇகரம் — அன்பி
அம் கெட்டு இகரம் —இன்பி, இலக்கணி,
குடும்பி

3) அம் விகுதி — அரக்கம்
(அன் கெட்டு அம்)
அர் கெட்டு அம் — பேராசிரியம்
அம் + ஐ — குமரமை
அம் + அத்து + ஐ — மனிதத்தை
அம் + கள் — உத்தியங்கள்

4) அர் விகுதி — எதிரர், பிச்சையர்,
அம் கெட்டு அர் — இலக்கணர்
இலக்கியர், புதினர்,
பாரதர்

5) ஆர்விகுதி — திரையார்

6) அன் விகுதி — கல்வியன், கொலையன்,
கோடியன்

7) ஆன் விகுதி — நூலான்

8) ஞர் விகுதி — இசைஞர், முதிஞர்,
மொழிஞர்

9) அத்து + இ விகுதி — ஒழுக்கத்தி, கோலத்தி.
மானத்தி,பட்டத்தி,பருவத்தி,
மடத்தி

10) 'ச்சி' விகுதி — சைவச்சி, வினைச்சி.

Koviloor Digital Library

கூட்டுச் சொல்லிலிருந்து உருவான தனிச்சொற்கள் (பெயர்) பெரும்பாலும் 'அம்' விகுதி பெற்றுள்ளன. அரசியம், அழிப்பியம், ஒப்பியம், நடப்பியம், கம்பனியம், காதலியம், சால்பியம், சமனியம், சமவியம், படைப்பியம், பொதுவியம், மக்களியம், மொழியியம், வாழ்வியம் என்ற சொற்களைக் கருதலாம்.

2. கூட்டுச்சொல்லாக்கம்

2.1. பெயர் +பெயர் > பெயர் —(எ. டு)— அரசாழி
2.2. பெயர் +வினை > பெயர் —(எ. டு.)—இசைபாடி
2.3. வினை +பெயர் > பெயர் —(எ. டு.)— எழுதுகையர்
2.4. வினை +வினை > பெயர் —(எ. டு.)—ஆய்முனை
2.5. வினையடி +பெயர் > பெயர்—(எ.டு) — அறப்பிழை
2.5.1 பண்படி +பெயர் > பெயர்—(எ.டு) — அல்உலகியல்
2.6. வினையடை+பெயர் > பெயர்—(எ.டு) —இரு பேரொலிஞர்
2.7. பெயர் +வினை > வினை —(எ.டு) — காதலாடுகிறேன்
2.8. வினை +வினை > வினை –(எ.டு) — விலக்குண்ணா

இவ்வகையில் ஏறத்தாழ 338 சொற்கள் ஆக்கப் பட்டுள்ளன. பெரும்பாலும் விகுதி பெற்றும், இடைச் சொல் பெற்றும், சிறுபான்மை எதுவும் பெறாமலும் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பெயர்+பெயர்> பெயர் என்ற பிரிவில்தான் மிகுதியான சொற்களைக் (254) காண முடிகிறது. தொடக்க கால முதல் இவ்வகைச் சொற்களே மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

Koviloor Digital Library

தனியார் மருத்துவ நிலையம் என்பதில் உள்ள பொருள்தெளிவு தனிமருத்துவ நிலையம் (Private Hospital) என்பதில் தென்படுகின்றதா? 'விலகற்கடிதம்' (Resignation Letter) என்று வழக்கில் இருப்பதை விலகல் முடங்கல் என்று மாற்றுவதில் சிறப்பென்ன? ஒப்பாளர் (Sensor) என்பதில் தணிக்கை செய்பவர்கள் என்ற பொருள் வருகிறதா? குளிரகம், மனைவிவிலக்கு என்பனவும் சிந்தனைக்குரியன. நடைமுறைக்கண்ணாளர் என்பது மொழிபெயர்ப்பாகத் தெரிகிறது. (High Heels) என்பதற்கு உயர்செருப்பு, குதிமிதி என்று மொழி பெயர்த்துள்ளார். முன்னதில் பொருள் விளக்கம் போதாது. பின்னது ஓரளவு ஏற்கக் கூடியது. குதியுயர் செருப்பு என்றிருக்கலாம்.

தனித்தன்மை காட்ட (அ) புதுமையாக்க விழைவால் ஆக்கப்பட்டவை:

சங்க இலக்கியம், சங்கப் பாடல்கள் என்ற சொற்களுக்கு அவைய இலக்கியம், அவையப் பாடல்கள் என்ற சொற்களை ஆக்கியுள்ளார். சுருட்டப்பட்டிருக்கும் சான்றிதழ்களைக் குறிக்கச் சான்றுச்சுருள்கள் (Certificates) என்பது பொருத்தமாகவும் புதுமையாகவும் விளங்குகிறது. நீதிமன்றம் என்பதை அறமன்றம் என்றும், இலக்கியப் படைப்பாளரை இலக்கியக் கண்ணோடிகள் என்பதும் இவர்தம் புதுமையார்வத்தைப் புலப்படுத்தும்.

தேவை கருதி உருவாக்கப்பட்டவை:

இடைக்காலத்தில் வடமொழிக் கலப்பு மிகுந்திருந்தது போல இன்று அன்றாடப் பேச்சுவழக்கில் ஆங்கில மொழிக்கலப்பு கற்றவரிடையே யன்றிக் கல்லாத வரிடையேயும் மிகுந்திருக்கக் காண்கிறோம். பொருத்த மான சொற்கள் ஆக்கி அளிக்கப்படாவிட்டால்

Koviloor Digital Library

விரைவில் மொழியூனம் ஏற்பட்டுவிடும். இதனால் நாள் வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களைப் படைத்துள்ளார் பேராசிரியர். அவ்வகையில் உறிஞ்சி(straw)நுரைப்பான் (soap) பல்லுரசி (Tooth brush), வாயுறிஞ்சி (Nipple), விற்பனைக்குறி, (sales Target), கழிவூதியம் (Commission) ஆட்சான்று (eye witness), தைஅஞ்சல் (parcel) பொருளஞ்சல் (M.O) கையேடு (Notes), கட்டுத்தொகை (Deposit), செய்திக் குறிக்குநர் (Reporter), தலையுரை, உயிர்க்காப்புக்கழகம் (L.I C) இசையிருக்கை (musical chair) போன்ற பல சொற்கள் பொருட்பொருத்தத்தோடும் உச்சரிப்பெளிமை யோடும் விளங்கக் காண்கிறோம்.

சில மொழியாக்கங்கள் பொருளை உணர்த்துவதில் குறையுடையதாக உள்ளன. கூலிவழக்காடி (Advocate) என்ற பெயர்ப்பு வழக்குரைஞர் தொழிலைப் பெருமைப் படுத்துவதாக அமையவில்லை. வழக்கில் உள்ள ஒலிபெருக்கி என்ற சொல்லை விட ஒலிப்பான் (Mike) என்பது சொற் சுருக்கமுடையதாக இருக்கிறது. ஆனால் பொருள்? மெய்ப்பொறி (weighing machines) என்பது உடம்பை நிறுக்கும் பொறி என்ற பொருளை விளக்குவதில் குறை யுடையதாக உள்ளது. இவ்வாறே மாட்டி (Hearing aid), அடக்கி (Break) என்பனவும் கருதிய பொருளை விளக்கு வதில் குறையுடையனவாக அமைந்துள்ளன.

அடிச்சொல் ஒன்று - ஆக்கச் சொல் பல:

ஒரு சில குறிப்பிட்ட அடிச்சொற்களிலிருந்து பல புதிய சொற்களைப் படைத்துள்ளார். (எ.டு)

உரை : உரையாளி, உரைக்கிளை. உரைக்குறுக்கு, உரைத்திரை, உரைநிறை, உரைப்பழி, உரைப்பிசிர், உரைப்புரை, உரைமருள், உரைமுடி, உரைவிளக்கி.

Koviloor Digital Library

மொழி : மொழியியம், மொழியொலிஞர், மொழிஞர், மொழிப்பரத்தமை, மொழிப்பலியர்கள், மொழி பெயர்ப்பி, மொழிமுதலி.

நிலை : நிலையறம், நிலையியம், நிலையிலிகள், நிலை நாடி, நிலைமகள், நிலைமகன்.

கற்பு : கற்புக்கேடி, கற்புச்சாவி, கற்புப்பதடி, கற்பிலி, கற்புடையாட்டி.

திரை : திரையகம், திரையார், திரையுத்தி, திரைஞர், திரைப்படுவது.

அற : அறக்கீழ், அறக்குருடு, அறப்பிழை.

வல் : வல்லழுத்தம், வல்லியக்கம், வல்லிலக்கியம், வல்லுரை.

வரன் : வரன்காணிக்கை, வரன்விலைக்கொடுமை.

புலமை : புலமை மதுகை, புலமைக்கிளிகள், புலமையமனம்.

வரவு : வரவுப்பரிசு, வரவுப்புலவன்.

ஆய் : ஆய்ஞர், ஆய்முனை, ஆய்வுடை-நூல்

உறுப்பு : உறுப்பி, உறுப்பிலி, உறுப்பரசு

குடும்பம்: குடும்பக்கடமி, குடும்பி, குடும்பியல்.

வாழ்வு : வாழ்வுநோக்கி, வாழ்வுமுடங்கி, வாழ்விலி வாழ்வுப்பிடி

பதிப்பு : பதிப்பளிப்பு, பதிப்பாடை, பதிப்புப்பொறுப்பர்.

நெறி : நெறிமை, நெறியங்கள்.

ஒப்புமையாக்கம் (Analogical creations)

வழக்கில் நிலைபெற்றுள்ள அல்லது இலக்கிய ஆட்சி பெற்றுள்ள சில சொற்களை எடுத்துக்காட்டாகக் கொண்டு அவற்றைப் போன்ற புதிய சொற்களை உருவாக்கியுள்ளார்.

Koviloor Digital Library

கலைஞர், கவிஞர் அறிஞர்	}	குடிஞர், இசைஞர், ஒலிஞர், திரைஞர், கதைஞன், இழிஞன்.

தொல்காப்பியம் : வள்ளுவம், இளங்கோவம், கண்ணதாசம்,
இருக்கை : அமர்கை.
அமுதசுரபி : சோற்றுச்சுரபி

அன்பளிப்பு பரிசளிப்பு நிதியளிப்பு	}	பதிப்பளிப்பு

ஒருமைப்பாடு : இருமைப்பாடு
சிறுமுதுகுறைவி : சிறுமுதுநூல்கள்
மார்க்சியம் : கம்பனியம்
அல்வழக்கு : அல்உலகியல், அல்சங்கநடை, அல் தமிழர், அல்நாகரிகம், அல்நெறி.

'கொள்கை வேறாயின் செல்கையும், 'கையூட்டுப் பையூட்டுப் பெற்றும்' என்னும் இடங்களில் செல்கை, பையூட்டு என்பன தொடையார்வத்தால் விளைந்த ஒப்புமையாக்கங்கள் ஆகும்.

பெண்பாற் சொற்கள்

இகர விகுதி சேர்த்துப் பல புதிய பெண்பாற் சொற்களைத் தந்துள்ளார்.

(எ.டு) அன்பி செயலி

நண்பி ஏசுபெருமாட்டி
கயத்தி சைவச்சி
வேந்தி நடிகச்சி
இளைஞீ கனத்தி*
கோவலி தொண்டி*

Koviloor Digital Library

ஒரே பொருளில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கம்

ஒரே பொருளைக் குறிப்பிட பல புதிய சொற்களைப் படைத்துள்ளமை இவரது சொல்லாக்க ஆர்வத்தை நன்கு புலப்படுத்துகிறது எனலாம். சான்றாக,

இலக்கண ஆசிரியர்	— இலக்கணர், இலக்கணி, இலக்கண நெறிஞர், இலக்கணப் படைப்பி.
இலக்கிய ஆசிரியர்	— இலக்கியர், இலக்கியக்கண்ணோடிகள்*, இலக்கிய முதல்வர்கள், இலக்கியப் படைப்பி.
எழுத்தாளர்	-- எழுத்தாண்மையர், எழுத்தாள்வார்கள், எழுத்தாளி, எழுத்தாளுநர், எழுத்துவல்லுநர், எழுதுகையர்.
இதழ்ச்செய்தியாளர்	— செய்திக்குறிக்குநர், செய்தித்தாள் குறிப்பாளர்.
பாடத்திட்டக் குழுவினர்	— கல்வித்திட்டர்கள்*, கல்விவகுப்பிகள், கல்விவரைவார்.

மேலாய்விற்குரியவை—பொருத்தமற்றவை

கல்வித்திட்டர்கள் என்ற சொல் கல்வியைத் திட்டமிடுபவர்கள் என்ற பொருளில் ஆளப்பட்டிருக்கிறது. இச்சொல் கல்வியைத் திட்டுபவர்கள் என்ற பொருளையும் தருமல்லவா?

கனவான் என்ற பிறமொழிச் சொல்லை ஒப்புக்கொண்டால் தானே 'கனத்தி' என்ற சொல்லை ஆக்க முடியும்?

வழக்கில் நிலை பெற்றுள்ள தந்தி என்ற சொல்லிலிருந்து உருவாக்கியுள்ள 'தந்திப்பேன்' என்பது தந்தியடிப்பேன் என்ற பொருளைத் தருகிறதா?

Koviloor Digital Library

அரசு + இயல் = அரசியல் என்பது சரிதான். இலக்கியம் + இயல் = இலக்கியவியல் என்று தானே சேரும்? இலக்கியல் என்பது சரிதானா?

உரைக்குறுக்கு என்பது உரையைக் குறுக்காமல் என்ற பொருளையும் தரவில்லையா?

இலக்கியக் கண்ணோடிகள் என்ற சொல் இலக்கியப் படைப்பாளர்கள் என்ற பொருளைத் தெளிவு படுத்த வில்லையே! இவ்வாறே மின் ஆற்றலைக் கம்பிப்படுத்தி என்று எழுதும் போது கம்பியின் கண் செலுத்தி என்ற பொருள் வரவில்லை.

சுடுசொல்லுவேன், பழமொழிகின்றோம், இடிப்பறிஞர், இருட்படை, இருட்புகழ், கணவபதவி, வாழ்வுப்பிடி போன்ற சொற்களும் மேலாய்விற்குரியன.

நிறைவுரை:

மாணிக்கனாரின் சொல்லாக்கச் செந்நெறியில் சொற் செறிவு என்பது தலையிடம் பெறுகிறது.

என் நடை பற்றிய குறிப்பு: 'என் எழுத்துக்கள் கட்டளைச் சொற்களால் கட்டளை நடையால் அமைந்தவை; சொற்பல்குதல் என்ற மிகைக்கு இடமில்லாதவை; செறிவு மிகுந்தவை; வேண்டுங்கால் புதிய சொல்லாக்கங்களும் புதிய சொல் வடிவுகளும் புதிய தொடராட்சிகளும் உடையவை'* என்ற பேராசிரியர் தன் மதிப்பீடும் இதனை உணர்த்தும்.

'மாணிக்கனாரின் புதிய சொல்லாக்கங்கள் தமிழுக்குப் புதுவரவும் ஆக்கமும் ஆம். இந்தத் தலைமுறையில் இவரைப் போல புதிய சொற்களைப் படைத்தவர் இலர். வாழும் சொற்களைப் படைப்பதில் வல்லவர்; பழஞ்சொல் புதுப்பிப்பதிலும் வல்லவர். இவர் படைத்த பல சொற்கள்

* மாணிக்கம், வ.சுப. திருக்குறட்சுடர், ப. X

Koviloor Digital Library

பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நாளும் பயன்படுத்தப் பெற்று வருவது இவரது சொல்லாக்கச் செந்நெறிக்குச் சான்றாகும்.'† என்ற பேராசிரியர் ச. மெய்யப்பனாரின் மதிப்பீடும் பாராட்டி ஏற்கத்தக்கதேயாகும்.

சொல்லாராய்ச்சிக் கலைஞர்களும் வளர்தமிழ் ஆர்வலர்களும், கற்பிகளும் படைப்பிகளும் பிறதுறை வல்லாரும் மாணிக்கத் தமிழுக்கு மதிப்பளிப்பர், மகுடஞ்சூட்டுவர் என்பதில் எனக்கு ஐயமில்லை.

குறிப்பு: சொற்கள் கையாளப்படும் இடத்திற்கேற்பப் பொருள்தரும் என்பதால், பயின்று வரும் தொடர்கள் முழுமையாகவோ தேவையான அளவோ தரப்பட்டுள்ளன. பெரும்பாலும் அடிச்சொல் கட்டப்பெற்றுள்ளது. தொடர்புடைய செய்திகள் ஆங்காங்கே குறிக்கப் பெற்றுள்ளன.

————

† ச. மெய்யப்பன், பதிப்புரை, காப்பியப்பார்வை, ப. VI

Koviloor Digital Library

1. தனிச்சொல்லாக்கம்

1:1 பெயரிலிருந்து பெயர்

அயன்மை:- 'அங்ஙனம் வரும் சில கிளவிகள் தம் அயன்மையை விட்டுத் தமிழ்மை பெற்று ஒன்றிவிட வேண்டும்'. (காப்பியப் பார்வை ப. 182). அயல்+மை > அயன்மை. தேவையை நிரப்ப உருவானது.

அரக்கம் : 'நல்ல தமிழ்க் கிளவிகள் கூட வாழ வாய்ப்பும் உரிமையும் தமிழெழுத்தாளர்க்ளே வழங்கா திருப்பது அரக்கமாகும்'. (இலக்கியச்சாறு ப. 22). அரக்கன் > அரக்கம்.

அன்பி: 'நல்லன்பீர், உங்கள் ...அன்பி' (ஒரு நொடியில் ப. 5). அன்பு+ இ > அன்பி. அன்பன் என்பதன் பெண்பாற் சொல்லாக ஆக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலர் : 'ஆங்கிலர் ஆயினும் அல்லாதவர் ஆயினும்' (சங்கநெறி ப. 174). ஆங்கிலம் > ஆங்கிலர்.

ஆணவி : 'அவருடைய பெண் மிக்க ஆணவி' (ஒரு நொடியில் > ப. 23). ஆணவம் > ஆணவி கர்வி என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது. தேவையை நிரப்ப உருவானது.

இசைஞர் : 'இசைஞரும் படைஞரும் ஆகிய இன்ன பொதுவான மக்களின் வாழ்க்கைகளைப் பாடலாம்'. (தொல்காப்பியப் புதுமை ப. 156). இசை+ஞர் > இசைஞர் கலைஞர் என்பதன் ஒப்புமையாக்கம்.

Koviloor Digital Library

இருமைப்பாடு: 'ஒருமைப் பாட்டுக்கு எதிராக இருமைப்பாடும் பன்மைப்பாடும் கிளர்ந்து விடும்'. (புதிய கல்விக் கொள்கையா, புதிய ஒதுக்கற் கொள்கையா? காரைக்குடி தமிழ்ச்சங்க வெளியீடு ப. 4). இருமை + பாடு > இருமைப்பாடு. ஒருமைப்பாடு என்பதன் ஒப்புமையாக்கம்.

இலக்கணர்: 'உரையாசிரியர்களும் பின்வந்த இலக்கணர்களும்......'. (சங்க நெறி ப. 119). இலக்கணம் > இலக்கணர். இலக்கண ஆசிரியர் என்ற பொருளில் வந்துள்ளது. தேவையை நிரப்ப உருவான சொல் எனலாம். இதே பொருளில் இலக்கணி என்ற சொல்லையும் இவரே ஆண்டுள்ளார்.

இலக்கணி: 'இலக்கணிகள் வேறுபடக் காரணம் யாது?' (தொல்காப்பியக்கடல், ப. 139; ப. 342 வள்ளுவம் ப. 361). இலக்கணம் > இலக்கணி. அம் கெட்டு இகர விகுதி சேர்ந்துள்ளது. தேவையை நிரப்ப உருவானது.

இலக்கியர்: (இரட்டைக்காப்பியங்கள், ப. 130). இலக்கியம் > இலக்கியர்.

இழுக்கி: 'இழுக்கியின் மகள் என்று உன்னைத் தூற்றும்'. (ஒருநொடியில் ப. 58). இழுக்கு + இ > இழுக்கி.

இளங்கோவம்: 'முறை பிறழ்ந்தலனும் பிறழ்வதற்குக் காரணமாக இருந்தவனும் அழிவான்; ... ... பிறரால் அழிவான்; தன்னாலும் அழிவான் என்பது இளங்கோவம்'. (காப்பியப் பார்வை ப. 51 எ. சிலம்பு). இளங்கோ + அம் > இளங்கோவம். தொல்காப்பியம் என்பது போல. வள்ளுவம், கண்ணதாசம் என்ற சொற்களையும் காண்க.

இளிமை: 'தேவர்களை மணிவாசகர் இளிமை பேசுகின்றார்'. (சிந்தனைக்களங்கள் ப. 337). இ + ளிமை > இளிமை.

Koviloor Digital Library

இளிவு என்ற சொல் இகழ்ச்சி என்ற பொருளில் வழக்கில் உள்ளது.

இளைஞி: (ஒரு நொடியில், ப. 126; உப்பங்கழியில், ப. 53). இளை + ஞி > இளைஞி. இளைஞன் என்ற சொல்லின் ஒப்புமையாக்கம்.

இன்பி: (ஒரு நொடியில், ப. 106). இன்பம் + இ > இன்பி (அம் கெட்டு இகர விகுதி).

ஈகம்: 'வசதியை ஈகம் செய்து கொள்ளும் காதற் சிந்தனையையும் அறிகின்றோம்'. (சங்கநெறி, ப. 21). பங்கு என்ற பொருளில் வந்துள்ளது.

ஈகி: '...... ஈகிகளுக்கு வளர்ந்த பண்பியல்'. (காப்பியப் பார்வை, ப. 113). ஈகை > ஈகி. ஈகையாளன், கொடையாளன், கொடையன் என்ற சொற்கள் வழக்கில் உள்ளன.

உத்தியங்கள்: 'நம் பண்டை இலக்கியங்கள் காலக்கோட் படாத உத்தியங்கள் கொண்டவை'. (இலக்கியச் சாறு, ப. 17). உத்தி + அம் + கள் > உத்தியங்கள்.

உயிரிகள்: 'அகப்பாடல் உயிரிகள் பிறந்ததற்கும் பிறப்பிப்பதற்கும் அடிப்படையான இன்ப உணர்வை ...'. (தமிழ்க் காதல், ப. 9; ஒரு நொடியில், ப. 12). உயிர் + இ > உயிரி.

உறுப்பி: '...... அன்னையர் கழகத்தில் ஓர் உறுப்பியாகச் சேர விரும்புகிறேன்'. (நெல்லிக்கனி, ப. 133).
உறுப்பு + இ > உறுப்பி.

எதிரர்: 'நிகழரும் எதிரரும் பயன்கொள்ள அச்சுயிர் ஏற்றி நூற்பிறவியாக்கி வாழ்விக்கின்றனர்'. (இலக்கியச்சாறு, 103). எதிர் + அர் > எதிரர்.

ஏசுபெருமாட்டி: 'ஏசுபெருமான் போல நீ ஏசு பெருமாட்டி'. (ஒரு நொடியில், ப. 140). ஏசுபெருமான் > ஏசுபெருமாட்டி.

Koviloor Digital Library

ஒலிஞர்: 'ஒலிஞர் பல்லோர் கோட்பாடாயினும்......' (தொல்காப்பியப் பார்வை, ப. 112). ஒலி+ஞர் > ஒலிஞர். கவிஞர், கலைஞர், அறிஞர் என்பன போல ஒப்புமை யாக்கத்தால் உருவானது

ஒலிப்பான் : '... வாய் பேசுவது போதாதென்று, ஒலிப்பான் வழியாகக் கத்துதல்' (நெல்லிக்கனி, ப. 155, 156). ஒலி > ஒலிப்பான். mike என்பதன் மொழியாக்கம். ஒலி பெருக்கி என்ற சொல் வழக்கில் உள்ளது.

ஒழுக்கத்தி : 'கணவனின்றிக் குழவி பெற்ற ஒழுக்கத்தி'. (ஒரு நொடியில் ப. 131). ஒழுக்கம் + அத்து + இ > ஒழுக்கத்தி வண்ணாத்தி, நாட்டாத்தி,

கண்ணதாசம்: '...என்பது கண்ணதாசம்'. (இலக்கியச்சாறு, ப. 131). கண்ணதாசன் > கண்ணதாசம். தொல்காப்பியம் என்பது போல வள்ளுவம், இளங்கோவம், கண்ணதாசம்.

கதைஞன் 'அச் சூழலை விடுத்து எழுதுபவன் கதைஞன்'. (கம்பர் ப. 44; ஒரு நொடியில் முன்னுரை). கதை + ஞன் > கதைஞன். கதாசிரியன், எழுத்தாளன் என்ற சொற்கள் வழக்கில் உள்ளன.

கயத்தி: 'இளம் பருவக்கணவனை......அச்சுறுத்தும் கயத்தி நான்'. (ஒருநொடியில்; ப. 137; ப. 53). கயம் + அத்து + இ > கயத்தி.

கருத்தகம் : '...என்பது பதிப்புக் குழுவின் கருத்தகம் ஆனாலும்...'. (காப்பியப்பார்வை, ப. 176). கருத்து + அகம் + கருத்தகம்.

கல்வியன் : 'கல்வியனோ வாயால் வழங்கப் பிறர் செவியால்' (திருக்குறட்சுடர், ப. 90). கல்வி + அன் + கல்வியன். கற்றவன் என்ற சொல் வழக்கில் உள்ளது.

Koviloor Digital Library

கழிச்சி: 'அந்தக் கழிச்சியைப் பற்றி இந்தக் கழியனுக்கு என்ன கவலை?' (ஒரு நொடியில், ப. 59). கழி + ச்சி > கழிச்சி. கழிசடை என்ற சொல் வழக்கில் உள்ளது.

கழியன்: (மேலது) கழி + அன் > கழியன்

கழுத்தி: 'தாலியற்ற கழுத்தியாக வேலியற்ற விளை நிலமாகத் திரிவாள். (ஒரு நொடியில், ப. 59).

கழுத்து + இ > கழுத்தி.

கற்பி: 'கற்பியை எல்லோரும் ஏத்துவர்'. இரட்டைக் காப்பியங்கள், (ப. 1). கற்பு + இ > கற்பி.

கனத்தி: 'கனவானுக்குத் தக்க கனத்திகள்' (ஒரு நொடியில் ப. 86). கன + அத்து + இ > கனத்தி.

குடிஞர்: 'எல்லாக் குடிஞர்க்கும் மதம் வழிபாடு மனச்சான்றில் தன்னுரிமையுண்டு (திருக்குறட்சுடர், ப. 131) குடி + ஞர். குடிஞர். குடிமக்கள் என்ற சொல் வழக்கில் உள்ளது. தனித்தன்மை காட்டும் விழைவால் உருவான சொல்.

குடும்பி: 'ஒரு குடும்பி இடம் பரந்த நிலைவீடு கட்டுகிறான்...' (வள்ளுவம், ப. 251;). தில்லைச் சிற்றம் பலவன் பெண்பால் உகந்து குடும்பியாக விளங்கிக் காட்டு கின்றான். (இலக்கியச்சாறு, ப. 82) குடும்பம்+இ >குடும்பி.

குமரமை: 'மகள் குமரப்பருவம் — குமரமை — எய்திய பின்' (தமிழ்க்காதல் ப.76). குமர் + அம் + ஐ > குமரமை

குறிக்கோளி: 'குணமே பற்றியொழுகும் குறிக்கோளிகள் ஆனோமல்லோம்.' (வள்ளுவம் ப. 377,. கொடை விளக்கு ப. 38) குறிக்கோள் + இ > குறிக்கோளி.

கொடைஞன் : 'துறவியும் கொடைஞனும் நிலையாமை உணர்ந்தவர்கள்' (தொல்காப்பியப்புதுமை, ப. 55). கொடை + ஞன் > கொடைஞன்.

Koviloor Digital Library

கொலையன்: 'கொலைய்னை விடப் பொய்யன் கொடியவன்'. ஒரு நொடியில், ப. 162). கொலை + அன் > கொலையன். கொலைகாரன், கொலையாளி என்ற சொற்கள் வழக்கில் உள்ளன.

கொலைவன்: 'கொலைவன் என்பதிலும் ஐயமில்லை'. (மனைவியின் உரிமை, ப.67). கொலை + அன் > கொலையன் என்றே வரவேண்டும்.

கோடியன்: 'திடீரெனக் கோடியன் ஆகலாம் என்ற பரிசுச் சீட்டு வேட்கை'... (திருக்குறட்சுடர், ப. 154). கோடி + அன் > கோடியன். கோடீஸ்வரன் என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது. இச்சொல் பல்லக்குச் சுமப்போன், கூத்தன் என்ற பொருள்களில் ஆட்சி பெற்றுள்ளது.

கோலத்தி: 'அவள்... வெள்ளுடைக் கோலத்தி'. (காப்பியப் பார்வை, ப. 47). கோலம் + அத்து + இ > கோலத்தி.

கோவலி: 'இவள் ஒரு கோவலி. நாள் தோறும் என்னைக் கொல்லுகிறாள்'. (ஒருநொடியில், ப.60). காவலன் > கோவலி. தனித்தன்மை காட்ட உருவானது எனலாம்.

சங்கமை: 'திருக்குறள் அதிகாரங்களும் ... உவமைகளும் இன்னபிறவும் சங்கமையுடையன'. (திருக்குறட்சுடர், ப.99; சிந்தனைக் களங்கள், ப.200). சங்கம் + ஐ > சங்கமை. சங்க இலக்கியப் பண்பு என்பது பொருளாகும்.

சமன்மை: 'மன்பதைக் குடிநலச் சமன்மை இந்திய அரசியலில் அடிமணையாகும்'. (திருக்குறட் சுடர், ப.132). சமம் > சமன் + மை > சமன்மை.

சீர்திருத்தி: '... ... சமுதாயம் வாழவேண்டும் எனக்கருதும் சீர்திருத்தி'. (காப்பியப் பார்வை, ப.145). சீர்திருத்தம்+ இ

Koviloor Digital Library

> சீர்திருத்தி. வழக்கில் உள்ள சீர்திருத்தவாதி என்பதை விட இச்சொல் மிகப் பொருத்தமானதாகும்.

சீர்திருந்தி: 'மாதவி மகள் மணிமேகலையோ ஓர் சீர் திருந்தியும் சீர்திருத்தியும் ஆவாள்'. (இரட்டைக் காப்பியங்கள், ப.62).

செயலி: 'புதிய ஆண்டுச் செயலி என்ற முறையில்...'. (நெல்லிக்கனி. ப.225). செயல் + இ > செயலி. செயலாளர் என்ற சொல் வழக்கில் உள்ளது.

செல்கை: 'கொள்கை வேறாகும் போது செல்கையும் வேறாகத்தானே இருக்கும்'. (காப்பியப்பார்வை, ப.221). செல் + கை > செல்கை. இச்சொல் செல்லும் நெறி என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. செல்கை என்பது செல்வாக்கு என்ற பொருளில் முன்பே ஆட்சி பெற்றுள்ளது.

சைவச்சி: 'தலைவியைச் சைவச்சியாகக் காட்டினாலும்...'. (இலக்கியச்சாறு, ப. 101). சைவம் > சைவச்சி. சைவன் என்ற ஆண்பாற் சொல்லின் எதிர்ச்சொல்லாகக் கருதலாம். செட்டிச்சி, தச்சச்சி என்பனவற்றைக் கருதுக.

தடிமை: 'தன் குடும்பம் பேணும் தடிமை தான்...'. (வள்ளுவம், ப.219). தடி + மை > தடிமை.

தமிழ்மை: 'கம்பர், வில்லிபுத்தூராழ்வார் ... ... எல்லாம் தமிழ்மை குன்றாத பாடல்கள் ஆயிரமாயிரம் எழுதினர். (தொல்காப்பியக்கடல், ப. 108). 'அயல்மதக் கிளவிகளை எவ்வாறு தமிழ்மை செய்வது என்று சாத்தனார் வழிகாட்டியிருந்தும் ...' (காப்பியப் பார்வை, ப. 199). இச்சொல் தமிழின் ஒலிப்பண்பு, தமிழ்ப்படுத்துவது என்ற பொருள்களில் இங்கு ஆளப்பட்டுள்ளது. தமிழ் + மை > தமிழ்மை.

Koviloor Digital Library

தவத்தி: '......உதயகுமரன் களவிற்போய்த் தவத்தியைக் காமுறாதே...' (இரட்டைக்காப்பியங்கள், ப. 59). தவம் > தவத்தி.

திரையார்: 'திரையாரைக் காண்பதுவும் தீதல்லவா'? (ஒரு நொடியில். ப. 26). திரை + ஆர் > திரையார்.

திரைஞர்: 'கதைஞர்கள் திரைஞர்கள்......தம் படைப்புக் களை...' (ஒருநொடியில், முன்னுரை; நெல்லிக்கனி ப. 38). திரை+ஞர் > திரைஞர். நடிகர், என்ற சொல் வழக்கில் உள்ளது.

துறத்தி: (உப்பங்கழி ப. 58). துற > துறத்தி.

துறவன்: '...எல்லாவற்றையும் பாழாக்கிய ஒரு துறவனைப் பெற்றேன்' (நெல்லிக்கனி. ப 129), துறவு+அன் > துறவன்.

துறவாட்டி: 'நீங்கள் அறிவு முதிர்ந்த துறவாட்டி' (நெ.கனி. ப. 170). துறவு > துறவாட்டி

தொண்டி: 'நான் முழுவதும் தொண்டியாகிவிட வேண்டுமென்று'(நெ. கனி. ப.223) தொண்டு+இ > தொண்டி

நடுவன்: 'நான் நடுவனாக இருந்தால்......' (நெல்லிக்கனி. ப.44). நடு+அன் > நடுவன்.

நண்பி: 'அப்பெண் நண்பிகளில் சிலர்' (ஒருநொடியில், ப.37; நெல்லிக்கனி, ப.17) நள் > நண்பு+இ > நண்பி. (நண்பன் என்பதன் பெண்பால்).

நிற்பு: 'ஐந்நிலம் இறுதியதாகவும் நிற்பு பெறுகின்றன'. (தொல்காப்பியக்கடல், ப. 182). நில்+பு > நிற்பு. வரிசை என்ற பொருளில் வந்துள்ளது.

நூலவன்: '...நூலவன் கருத்துக்குஅத்துணை முரணிப்போகா என்றும் நம்பலாம்' (திருக்குறட்சுடர் ப 81) நூல்+அவன் >

Koviloor Digital Library

நூலவன். நூலாசிரியன் என்ற சொல் வழக்கில் உள்ளது. சொற்சுருக்கம் கருதி உருவாகியுள்ளது.

நூலான்: (எந்தச்சிலம்பு, ப. 36, 39) நூல்+ஆன் > நூலான்

நெறிமை: 'நம் அரசியலமைப்பின் கண் கோட்பாடுகளும் நெறிமைகளும் ஆட்சிப் பிரிவுகளும்...'. (திருக்குறட்சுடர், ப. 143). நெறி + மை > நெறிமை.

நெறியம்: 'முதலெழுத்துக்கோள் பற்றிச் சில நெறியங்களை அவர்தம் கருத்தாகக் கொள்ளலாம்' (தொல்காப்பியக் கடல்,ப. 142).இந்நெறியம் தனிப்பாடலுக்கும் பொருந்தும் காப்பியப்பார்வை, ப. 160). நெறி + அம் > நெறியம். விதிகள் என்று பொருள் கொள்ளலாம்.

பட்டத்தி: 'மனைவி அமுதி தமிழ்ப் பட்டத்தி' (ஒரு நொடியில். ப 98). பட்டம் + அத்து + இ>பட்டத்தி. பட்டதாரி என்ற கலப்புச்சொல் வழக்கில் உள்ளது.

படைஞர்: 'இவள் தந்தை முன்னாட் படைஞர்.' (ஒரு நொடியில் ப. 148, இரட்டைக்காப்பியங்கள்,ப. 4). படை +ஞர் > படைஞர். படைவீரர் என்ற சொல் வழக்கில் உள்ளது.

பண்பர்: 'மலையர்தான் என்ன? நல்ல பண்பர்'. நெல்லிக்கனி ப. 27) பண்பு+அர்>பண்பர்.

பணிப்பு: 'துறைத் தேவைகளைச் சுட்டி முன்னரே செய்த பணிப்புக்களைக் காட்டி வைப்பேன்.' (ஒரு நொடியில் ப. 113) பணி+ப்பு > பணிப்பு.

பணிவன்: 'உன்னைப் போல் பணிவனை உலகத்திற் கண்டதில்லை'. (ஒரு நொடியில் ப. 10). பணிவு+அன் >பணிவன்.

Koviloor Digital Library

பருவத்தி: பருவம் + அத்து + இ > பருவத்தி. பருவப் பெண் என்ற சொல் வழக்கில் உள்ளது.

பாட்டுமை: 'இப் பேச்சுத் தன்மையில் என்ன பாட்டுமை இருக்க முடியும்?' (சங்கநெறி, ப.83). பாட்டு + மை > பாட்டுமை.

பாரதர்: 'எதிர்காலப் பாரதர்கட்குச் சமவழி காட்டிச் சென்றிருக்கிறார்...'(இலக்கியச்சாறு, ப.221). பாரதம் > பாரதர்.

பாரதீயம்: '--- ஓர் ஆராய்ச்சிப்பதிப்பு பாரதீயத்துக்கு வந்தால்...'. (தொல்காப்பியப் புதுமை, பக்.91). பாரதி + அம் > பாரதியம் > பாரதீயம். பாரதியார் படைப்புக்கள் என்ற பொருளில் வந்துள்ளது.

பிடிவாதி: 'நம் பையனும் ஒரு பிடிவாதி'. நெல்லிக்கனி, ப.28). பிடிவாதம் > பிடிவாதி.

பிச்சையர்: 'இப் பிச்சையர் செல்வ வாழ்வு கண்டு பொறாமைப் படுகிறேன்'. (ஒருநொடியில், ப.57). பிச்சை +அர் > பிச்சையர். ஏழையர் என்பதன் ஒப்புமையாக்கம்.

புதினர்: 'பெற்ற மனத்தின் புதினர்'. (இலக்கியச் சாறு, ப.14) புதினம் > புதினர்.

பேராசிரியம்: 'பேராசிரியம் தனக்குக் கிடைக்கும் என்று நம்பியிருந்த நிலையில்...'. (ஒரு நொடியில்,ப.98). பேராசிரியர்> பேராசிரியம். பேராசிரியப் பதவி என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. பொருத்தம் ஆய்விற்குரியது. பேராசிரியம் என்பது 'பேராசிரியர்' உரையைக் குறிக்கப் பயன்பட்டுள்ளது.

பொருளன்: 'பொருளன் கையால் வழங்குகின்றான்'. (திருக்குறட்சுடர், ப.90). பொருள் + அன் > பொருளன். செல்வன் என்ற சொல் வழக்கில் உள்ளது.

Koviloor Digital Library

1799
031
கோவிலூர்-630

மடத்தி: 'அதனைக் காத்துக் கிடக்கும் மடத்தி நான்'. (ஒரு நொடியில். ப. 75). மட + அத்து + இ > மடத்தி. மடைச்சி என்ற சொல் வழக்கில் உள்ளது.

மனமை: 'ஈட்டிய எல்லாம் எனக்கே போதா என்ற மனமை ஊறிப் பீறுகின்றது'. (திருக்குறட்சுடர். ப. 67). மனம் + ஐ > மனமை. அருமையான சொல்லாட்சி.

மனிதம்: 'நபிகள் நாயகத்தின் இயல்பான மனிதத்தை இறுதியில் வெளிப்படுத்துகிறார்'. (காப்பியப் பார்வை ப. 7). மனிதன் + மனிதம் + அத்து + ஐ > மனிதத்தை.

மானத்தி: 'மனைவி வள்ளி மானத்தி'. (ஒருநொடியில் ப. 91). மானம் + அத்து + இ > மானத்தி.

முதிஞர்: 'துறைப்பொறுப்பினை முதிஞராக இருந்த நெடுமுடியினைப் பார்க்கப் பணித்தனர்'. (ஒருநொடியில் ப. 98). முது + இ + ஞர் > முதிஞர். முதியவன், முதியவள், முதியோன், முதியோள், முதியோர், முதியவர் என்ற சொற்கள் வழக்கில் உள்ளன.

மொழிஞர்: 'உலக மொழிஞர்கள் நம் தொல்காப்பியத்தை உலகமொழிப் பேரிலக்கணமாக மதிக்கின்றனர்'. (தொல்காப்பியக்கடல். ப. IX). மொழி + ஞர் + கள் > மொழிஞர்கள். மொழியியலறிஞர்கள் என்ற பொருளில் பயின்றுள்ளது. தேவையை நிரப்ப உருவானது.

வல்லி: '...யார் மனத்தையும் மாற்றக்கூடிய வல்லி'. (நெ.கனி. ப. 131). வல் + இ > வல்லி. வல்லவள் என்ற சொல்வழக்கில் உள்ளது.

வள்ளுவம்: 'வள்ளுவம் எனப் பெயரிய நூல்'. (வள்ளுவம், முன்னுரை). வள்ளுவன் > வள்ளுவம். இளங்கோவம், கண்ணதாசம் என்பதன் ஒப்புமையாக்கம்.

Koviloor Digital Library

வாணிகி: '...காய்கறி வாணிகி மூக்காயி அம்மை ....' நெல்லிக்கனி. ப. 154) வாணிகம்+இ>வாணிகி.

விளம்பரத்தான்: (உப்பங்கழி ப: 29) விளம்பரம்+அத்து+ஆன்>விளம்பரத்தான்.

வினைச்சி; 'சூர்ப்பனகை இராவணனுக்கு வினைச்சி யானாள், (கம்பர். ப. 42), வினை+ச்சி>வினைச்சி.

வீண்மை: '...என்று வீண்மை பேசுபவர்கள் தாம்' (திருக் குறட்சுடர், ப. 142). வீண்+மை>வீண்மை.

வெறிஞர்: 'பாரதியார் ஒரு வெறிஞர்'. (தொல்காப்பியப் புதுமை, ப. 113). வெறி+ஞர்>வெறிஞர்.

வேந்தி: 'வேந்தியின் சிலம்போடு கண்ணகி சிலம்பு மோதிய அரிய நிகழ்ச்சியினாற்றான்...,(காப்பியப்பார்வை. ப . 94). வேந்து+இ>வேந்தி. அரசன். அரசி என்பனபோல வேந்தன் என்பதன் வெண்பாலாக உருவானது.

Koviloor Digital Library

1:2 வினையிலிருந்து பெயர்

அடக்கி: 'கார், மிதிவண்டி முதலிய ஊர்திகளில் உள்ள அடக்கியின் பயன் என்னை?' (வள்ளுவம், ப. 203). அடக்கு + இ > அடக்கி. Break என்பதன் தமிழாக்கமாகக் கையாளப்பட்டிருக்கிறது. அடக்கி என்பதற்கு அடக்கமுள்ளஆள் என்பது பழைய பொருள். இங்குப் பழைய சொல் புதிய பொருளில் ஆளப்பட்டுள்ளது. இச்சொல்லின் பொருத்தம் ஆய்வுக்குரியது.

அமர்கை: 'அவனும் உள்ளேவந்து அமர்கையில் இருந்தான்'. (ஒரு நொடியில், ப. 128). அமர்+கை > அமர்கை. இருக்கை என்ற சொல் வழக்கில் உள்ளது.

ஆய்ஞர்: 'மொழியியல் ஆய்ஞரும் ஒருவகை இலக்கண நூல்களுக்கே பட்டியலில் ... ... '(தொல்காப்பியக்கடல், ப. 313). 'எதிர்கால ஆய்ஞருக்குத் தக்க புலமை விருந்தும்' (காப்பியப் பார்வை, ப. 230). ஆய் + ஞர் > ஆய்ஞர். ஆய்வாளர், ஆராய்ச்சியாளர் என்ற சொற்கள் வழக்கில் உள்ளன. சொற்சுருக்கம் கருதியும் தனித்தன்மை காட்டவும் ஆக்கப்பட்டிருக்கலாம்.

இழிஞன்: 'பயனில் சொல்வானை ... இழிஞன் என்ற...' (வள்ளுவம், ப. 312). இழி+ஞன் > இழிஞன்.

உறிஞ்சி: 'நீரை உறிஞ்சி வழிக் குடிப்பதைக் காட்டிலும்...' (திருக்குறட்சுடர், ப. 17). 'straw' என்பதன் மொழியாக்கம். பொருத்தமான சொல்லாட்சி.

Koviloor Digital Library

கன்றியவர்: 'இவர் இந்நடையிற் கன்றியவர் என்பது...'. (சங்கநெறி ப. 200). கன்று > கன்றியவர்.

கற்பி : 'தொல்காப்பியக் கற்பிகட்கு உரைத்திறனாய்வும் கூடவே வேண்டும்'. (தொல்காப்பியக்கடல் ப. 217). கற்றல் + இ > கற்பி. கற்புடையவள் என்பதையும் கற்பி என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளார். இச்சொல் 'கற்பிக்க' என்ற பொருளில் வழக்கில் உள்ளது. எனவே கற்பவர் என்றே குறிப்பிடலாம்.

குறைப்பு : 'இடைச்செருகல் என்று கூறி முதலுக்கே குறைப்புத் தேடக்கூடாது'. (தொல்காப்பியக்கடல் ப. 92). குறை > குறைப்பு.

நடிகச்சி: 'பொது நடிகச்சியைக் காதலிப்பது...'. (ஒரு நொடியில் ப. 26). நடி > நடிகச்சி.
நடி என்ற சொல் நாட்டியப் பெண்ணையும் குறித்திருக்கிறது. நடிகன் என்பதற்கு பெண்பாற்சொல்லாக இச்சொல் உருவாக்கப்பட்டுள்ளது.

நிகழர்: 'நிகழரும் எதிரரும் பயன்கொள்ள'. (இலக்கியச் சாறு, ப. 103). நிகழ் + அர் > நிகழர்.

நுரைப்பான்: 'நுரைப்பான் இன்றிக் குளித்தாலும்...' (ஒரு நொடியில். ப. 22). நுரைத்தல் > நுரைப்பான். 'Soap' என்பதன் மொழியாக்கம்.

பயில்வு: 'விரிவுரையாளர் இருபது ஆண்டுகள் பயில்வுடையவர்'. (ஒருநொடியில், ப. 98; சங்கநெறி ப. 6). பயில்வு > பயில்வு.

பருமன்: 'ஐம்பது வயதில் ஒருவன் மரப்பாவை வைத்துப் பருமன் ஊதி விளையாடலாமா'? (இலக்கியச்சாறு,ப. 82). பரு+அன் > பருமன்.

Koviloor Digital Library

பறிஞன்: 'உலக வழிப்பறியில் பறிஞன் நடையாளியைத் தொல்லைப்படுத்திப் பொருள் வாங்குவான்'. (இலக்கியச் சாறு, ப. 90). பறி + ஞன் > பறிஞன்.

பறைஞன்: 'பறைஞன் வச்சிரக் கோட்டத்து முரசை யானைப் பிடரியில் ஏற்றி...'. (இரட்டைக் காப்பியங்கள் ப. 19). பறை + ஞன் > பறைஞன்.

புழங்கி: 'பழம்பட்ட கட்டிடங்கள், நகரங்கள், புழங்கிகள் இனையவை காலத்தால் வரலாற்று மதிப்புப் பெறுகின்றன'. (தொல்காப்பியக் கடல் ப. 363). புழங்கு + இ > புழங்கி. புழங்கிய பொருள்கள் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

பூசையாட்டி: '...தேவந்தியைப் பூசையாட்டியாக அமர்த்தினான்'. (இரட்டைக் காப்பியங்கள். ப. 18). பூசை > பூசையாள் >பூசையாட்டி.

மறைப்பு: 'மறைப்புக் கலக்கத்தில் திரியும் எண்ணெயும் குச்சியும் இல்லா விளக்கையும்'. (ஒரு நொடியில் ப. 76). மறை + ப்பு > மறைப்பு

மாட்டி: 'செவி கெட்டால் மாட்டியுண்டு'. (ஒரு நொடியில் ப. 176). மாட்டு + இ> மாட்டி. Hearing aid என்பதன் மொழியாக்கம். இதன் பொருத்தம் ஆய்விற்குரியது.

வழங்கி: 'இத்தகைய வழங்கிகளை...... வள்ளுவர் வணங்குவர்'. (காப்பியப் பார்வை ப. 112). வழங்கு + இ> வழங்கி. இச்சொல் இன்று வரை வினையெச்சமாகவே பயன்பட்டு வருகிறது.

விளங்கி: 'அவ் விளங்கிக்குத் துன்பம் இல்லை என்பர்'. (திருக்குறட்சுடர் ப. 29). விளங்கு + இ> விளங்கி. மேலது;

விளையாடி; 'தென்னிசு...விளையாடி ...பந்து போல்'. (ஒருநொடியில். ப. 105). விளையாடு + இ > விளையாடி. மேலது.

Koviloor Digital Library

1:3 பெயரிலிருந்து வினை

அட்டவணைப்பர்: 'ஒப்புமைகளுள் பத்தினை அட்டவணைப்பர் அறிஞர் திருநாவுக்கரசு'. (திருக்குறட்சுடர், ப. 124). அட்டவணை+பர்> அட்டவணைப்பர். அட்டவணைப்படுத்துவர் என்ற சொல்லாட்சி வழக்கில் உள்ளது. சொற்சுருக்கம் கருதி உருவாக்கப்பட்டுள்ளது. பொருட்பொருத்தம் ஆய்விற்குரியது.

இலக்கணித்தனர்: '...என்று திரிதற்கு இலக்கணித்தனர்'. (தொல்காப்பியக் கடல், ப. 322). இலக்கணம்> இலக்கணித்தனர்.

ஒப்பாரிக்கும்: 'ஒப்பாரிக்கும் விசயை பழைய தன் மனப் போராட்டத்தை' (...காப்பியப் பார்வை, ப. 32).ஒப்பாரி> ஒப்பாரிக்கும். ஒப்பாரி வைக்கும் என்ற சொல் வழக்கில் உள்ளது.

தந்திப்பேன்: 'நாளை வந்து சேர்வேன் என்று அங்கு தந்திப்பேன்'. (ஒருநொடியில், ப. 117). தந்தி>தந்திப்பேன் தந்தியடிப்பேன் என்ற சொல் வழக்கில் உள்ளது.

நன்றியம் : 'புலவர்கட்கும் குழுவினர்க்கும் நன்றியம்'. (காப்பியப் பார்வை, ப. 11 நெ.கனி,ப. 153). நன்றி+அம்> நன்றியம். நன்றி உடையேம் என்ற பொருளில்.

நன்றியன்: 'அச்சகத்தார்க்கு நன்றியன், (நெல்லிக்கனி முன்னுரை) நன்றி+அன்>நன்றியன்.

பழமொழிகின்றோம்: '...மனம் போல வாழ்வு என்று பழமொழிகின்றோம்'. (காப்பியப் பார்வை, ப. 38). பழமொழி >பழமொழிகின்றோம்.

Koviloor Digital Library

புராணிப்பார்கள் ; 'நான்முகன் பிறந்தது கொப்பூழ்த் தாமரை என்று புராணிப்பார்கள்' (ஒருநொடியில்,ப.120). புராணம் > புராணி > புராணிப்பார்கள்.

மழலும்: 'குழந்தை அவரைக் கண்டு சிரிக்கும், ஓடும், மழலும்'(ஒருநொடியில், ப. 131). மழலை>மழலும்.

முத்தினாள்: (உப்பங்கழியில், ப. 189) முத்தம்+இன்+ஆள் >முத்தினாள்.

வல்லாதபடி: 'செய்யுட்களைப் பிரித்துப் படிக்கக் கூட வல்லாதபடி நற்றமிழரிடை...' (தொல்காப்பியக்கடல், ப.23) வல் > வல்ல > வல்லாதபடி

விளம்பரித்தார்கள்: 'மற்ற துறை மேலவர்கள் போன போது விளம்பரித்தார்களா?' (ஒரு நொடியில், ப.99). விளம்பரம்> விளம்பரித்தார்கள்.

வெடுக்கிடுகிறாள்: '...என்று வெடுக்கிடுகிறாள்'. (ஒரு நொடியில், ப.51). வெடுப்பு > வெடுக்கிடுகிறாள்.

1:4 வினையிலிருந்து வினை

தொல்லிது: 'தமிழிலக்கியம் மிகத் தொல்லிது'. (சிந்தனைக் களங்கள், ப.379). தொல் + து > தொல்லிது. வினையடி + விகுதி>குறிப்பு வினை. மெல்லிது என்பது போல.

பறைப்பு: பறை + ப்பு > பறைப்பு.

மெலிக்காது: 'அதனை மெலிக்காது...வலுவாக்க வேண்டும்' (ஒப்பியல் நோக்கு, ப.163) மெலி > மெலிக்காது.

Koviloor Digital Library

1:5 கூட்டுச் சொல்லில் இருந்து தனிச் சொல்லாக்கம் (பெயர்)

அரசியம். (எந்தச்சிலம்பு. ப. 29).

அரசு + இயல் > அரசியல் > அரசியம்.

அழிப்பியம்: 'இவர்கள் செய்வது அழிப்பியம், வற்றியம்'. (ஒரு நொடியில். ப. 82). அழிப்பு + இயல் > அழிப்பியல் > அழிப்பியம்.

அறக்கற்பி: 'தூதையை அறக்கற்பியாகச் சூத்திரகரும் ......'. (காப்பியப் பார்வை. ப. 239). அறம் + கற்பு + இ > அறக்கற்பி.

ஈடுபாடன்: 'ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் இசைப் பாடலில் ஈடுபாடன்'. (சங்கநெறி, ப. 137). ஈடு + பாடு > ஈடுபாடு + அன் > ஈடுபாடன்.

உணர்ச்சிப் பிண்டர்: '... உணர்ச்சிப் பிண்டர்களுக்கும் நேர்வழி தோன்றவில்லை ...'. (ஒரு நொடியில், முன்னுரை). உணர்ச்சி + பிண்டம் > உணர்ச்சிப்பிண்டம் > உணர்ச்சிப்பிண்டர்.

உரையாசிரியங்கள்: 'வழுவமைதி கூறும் உரையாசிரியங் களை ஒத்துக்கொண்டால்...'. (சிந்தனைக் களங்கள், ப. 72. 73). உரை + ஆசிரியர் > உரையாசிரியர் > அம் + கள் > உரையாசிரியங்கள்.

எழுத்துத்திருத்தி: (மலேசியாத்தமிழ் மாநாட்டுக்கட்டுரை, 1988). எழுத்து + திருத்தம் > எழுத்துத்திருத்தம் + இ >

Koviloor Digital Library

எழுத்துத்திருத்தி. தேவையை நிரப்ப உருவான சொல். எழுத்துச்சீர்திருத்தி என்று குறிப்பிடாமல் எழுத்துத்திருத்தி என்று குறிப்பிடுவதே இவர் நோக்கத்தைத் தெளிவாக்கும்.

ஒப்பியம்: 'தந்தை மகள் பாசுரங்களை ஒப்பியம் செய்யின் ...'. (இலக்கியச்சாறு, ப. 143). ஒப்பு + இயல் > ஒப்பியல் > ஒப்பியம்.

ஒழுக்கக்குறைவி: 'தன் மனைவி ஒழுக்கக்குறைவி என்று தெரிந்த கணவன்'. ... (ஒருநொடியில், ப. 137). ஒழுக்கம்+ குறைவு > ஒழுக்கக்குறைவு + இ > ஒழுக்கக்குறைவி.

கம்பனியம்: (காப்பியப் பார்வை, ப. 163). கம்பன் + இயல் > கம்பனியல் > கம்பனியம்.

கல்வித்திட்டர்கள்: 'கல்வித்திட்டர்கள் எவ்வகுப்புக்கும் திட்டம் வகுப்பரேல்'. (திருக்குறட்சுடர், ப. 89; எந்தச் சிலம்பு ப. 45.). கல்வி + திட்டம் > கல்வித்திட்டம். கல்வித் திட்டர். கல்வித்திட்டத்தர் என்று இருப்பின் தெளிவாகப் பொருள் விளங்கும். கல்வித்திட்டர் என்பது கல்வியைத் திட்டுபவர் என்ற பொருளையும் தரும்.

கற்புடையாட்டி: 'பாரியின் அருமைத் துணைவியாகிய கற்புடையாட்டிநல்லாள் ......'(சங்கநெறி, ப.110). கற்பு+ உடையாள் > கற்புடையாள் + இ > கற்புடையாட்டி. மனையாட்டி, பெருமாட்டி என்ற சொற்களின் ஒப்புமையாக்கமாகக் கருதலாம்.

காதலியம்: 'தன் அலுவலகத்தில் வேலை பார்ப்பதால் தனக்கு உரியவளாம். என்ன காதலியம் பேசினான்?' (ஒருநொடியில், ப.150; இலக்கியச்சாறு, ப. 9). காதல் + இயல் > காதலியல் > காதலியம்.

சமவியம்: 'சமவியம் மிக நல்ல தேவையான கொள்கை தான்'. (ஒரு நொடியில், ப. 82). சமம் +இயல் > சமவியல் > சமவியம்.

Koviloor Digital Library

சமனியம்: 'ஆண் பெண் சமனியம் தொல்காப்பியர் காலத்தில் ... பதிந்து கிடந்தது' (தொல்காப்பியக் கடல், ப. 69). சமன் + இயல் > சமனியல் > சமனியம்.

சால்பியம்: 'சால்பியம், புரட்சியம், பொதுவியம்... ...என எண்ணப்படும் பல்லியங்களும் உள்ளடங்கிய காந்தியத்தின் வழிகாட்டி' (இலக்கியச்சாறு, ப. 173). சால்பு + இயல் > சால்பியல் > சால்பியம்.

செய்துகொடுப்பி: செய்து + கொடு > செய்துகொடுப்பி > செய்துகொடுப்பி.

சொல்லாக்கிகள்: 'தமிழ்மொழிக்குச் சொல்லாக்கிகள் மிகத் தேவை' (காப்பியப் பார்வை, ப. 94.). சொல் + ஆக்கம் > சொல்லாக்கம் + இ > சொல்லாக்கி.

தட்டெழுத்தி: 'அரசு வங்கியில் தட்டெழுத்தியாகப் பணியாற்றுபவள்...' (ஒரு நொடியில், ப. 149). தட்டு + எழுத்து > தட்டெழுத்து+இ > தட்டெழுத்தி. தேவையை நிரப்ப உருவானது- Typist என்பதன் மொழியாக்கம்.

தற்கொலைஞன்: '......தற்கொலைஞனும் நானே'. (ஒரு நொடியில், ப. 157). தன் + கொலை > தற்கொலை + ஞன் > தற்கொலைஞன்.

நடப்பியம்: 'கருத்துக்கள்தாம் புலப்படுத்தப்படுமேயன்றி அவ்வம்மொழிகள் தழுவப்படுவதில்லை என்பதுவே நடைமுறை நடப்பியம்'. (இலக்கியச்சாறு, ப. 20). நடப்பு + இயல் > நடப்பியல் > நடப்பியம்.

படைப்பியம்: 'நுண்ணிய உத்திகட்குக் கால அடைப்பான் இல்லை என்ற படைப்பிய வரலாறு பெறப்படும்'. (இலக்கியச்சாறு, ப. 18). படைப்பு + இயல் > படைப்பியல் > படைப்பியம்.

படைப்பிலக்கியர்: 'கட்டுரைகள் படைப்பிலக்கியர்க்கு வழிகாட்டும் என எதிர்பார்க்கிறேன்'. (காப்பியப்பார்வை,

Koviloor Digital Library

ப. X). படைப்பு + இலக்கியம் > படைப்பிக்கியம் > படைப்பிலக்கியர். இலக்கியங்கள் அனைத்தும் படைக்கப் படுபவைதாம். படைப்பிலக்கியங்கள் என்பதே பொருத்த மற்றதாகும்.

புரட்சியம்: 'காந்திக் கவிதை என்னும் இப்படைப்பு நூல் சால்பியம், புரட்சியம், பொதுவியம், மக்களியம் என எண்ணப்படும் பல்லியங்களும் உள்ளடங்கிய காந்தியத்தின் வழிகாட்டி...' (இலக்கியச்சாறு, ப. 173). புரட்சி + இயல் > புரட்சியியல் > புரட்சியியம் என்று வருவதே சரியானது.

புரையோடிகள்: 'வஞ்சகன் போலும் என்று கிளறிப் பார்த்து ஐயுற்றுத் திரியும் புரையோடிகளே நம்முட் பலர்'. (வள்ளுவம், ப. 336). புரை + ஓடு > புரையோடு. புரையோடு + இ + கள் > புரையோடிகள்.

பொதுவியம்: (இலக்கியச்சாறு, ப. 173). பொது + இயல் > பொதுவியல் > பொதுவிடம்.

மக்களியம்: (இலக்கியச்சாறு, ப. 173). மக்கள் + இயல் > மக்களியல் > மக்களியம்.

மறக்கற்பி: 'கண்ணகியை மறக்கற்பியாக இளங்கோவும்...' (காப்பியப்பார்வை, ப. 239) மறம்+கற்பு>மறக்கற்பு+இ> மறக்கற்பி.

மாறுவேடி: 'மக்கள் நலத்துக்கெனப் பூண்ட மாறுவேடி அவன்'. (திருக்குறட்சுடர், ப. 62). மாறு + வேடம் > மாறுவேடம் + இ > மாறுவேடி.

மொழியியம்: 'தொல்காப்பிய மொழியியத்தைத் தெரிந்து கொள்வோமாயின் ...' (தொல்காப்பியக்கடல், ப. 169). மொழி + இயல் > மொழியியல் > மொழியியம்.

மொழி பெயர்ப்பி: 'மொழி பெயர்ப்பிகளைப் பெருங்குறை கூறுதற்கும் இல்லை'. (தொல்காப்பியக்கடல்.ப.341). மொழி + பெயர்ப்பு > மொழிபெயர்ப்பு + இ > மொழிபெயர்ப்பி. தேவையை நிரப்ப உருவானது.

Koviloor Digital Library

வற்றியம்: 'இவர்கள் செய்வது அழிப்பியம், வற்றியம்...' (ஒரு நொடியில், ப.82). வற்றம்>வற்று+இயல்>வற்றியல் >வற்றியம்.

வாதீடு: 'இவ்வுரை முறை பற்றி வாதிடு இல்லை'. (தொல்காப்பியக்கடல். ப.24). வாதிடு>வாதீடு.

வாழ்வியம்: 'அது மக்கட்குப் பொது வாழ்வியம்'. (ஒரு நொடியில், ப 82). வாழ்வு + இயல் >வாழ்வியல்> வாழ்வியம்.

வானொலிப்பு: (இலக்கியச்சாறு, ப.50). வான் + ஒலி> வானொலி+ப்பு>வானொலிப்பு.

1:5:1 கூட்டுச் சொல்லில் இருந்து தனிச் சொல் (வினை)

சொல்லாற்றுவேன்: '... முதற்கண் சொல்லாற்றுவேன்' (வள்ளுவம், ப. 9). சொல் + ஆற்று > சொல்லாற்று > சொல்லாற்றுவேன். உரையாற்றுவேன் என்ற சொல் வழக்கில் உள்ளது.

சொற்பொழிந்தேன்: 'நெருநல் ... சொற்பொழிந்தேன்'. (தொல்காப்பியக்கடல், ப. 297). சொல் + பொழிவு > சொற்பொழிவு > சொற்பொழிந்தேன். சொற்பொழி வாற்றினேன், உரைநிகழ்த்தினேன் என்ற சொற்கள் வழக்கில் உள்ளன.

தற்பெருமையாடலாம்: '... பலர் தற்பெருமையாடலாம்'. (திருக்குறட்சுடர், ப. 6). தற்பெருமை + ஆடல் > தற்பெருமையாடல் + ஆம் > தற்பெருமையாடலாம்.

வானொலிக்கின்றேன்: '...முடிபுகளில் மூன்றினை இங்கு வானொலிக்கின்றேன்'. (சங்கநெறி, ப. 3). வானொலி > வானொலிக்கின்றேன் (கின்று+ஏன்).

Koviloor Digital Library

கூட்டுச் சொல்லாக்கம்

2:1 பெயர்+பெயர்>பெயர்

அணியநாடு: 'அணியநாடுகளின் பகை கூடாது'. (திருக்குறட்சுடர், ப. 6). அண்மை நாடு என்ற சொல் வழக்கில் உள்ளது.

அணுக்குவியல்: 'இருவல்லரசுகளும் ... அணுக்குவியல் வைத்திருப்பதால்...' (திருக்குறட்சுடர், ப. 148). அணு+குவியல் > அணுக்குவியல்.

அரசாழி: 'அச்சான்றோன் அறவாழியை நம் அரசாழியாக ஏற்றுக் கொண்டோம்'. (வள்ளுவம், ப. 187). அரசு+ஆழி> அரசாழி. அறவாழி என்பதன் ஒப்புமையாக்கம்.

அலுவற்களப்பெண்: 'மாலைப்பூ என்ற என் அலுவற்களப் பெண்ணை நான் காதலித்து...' (ஒருநொடியில், ப. 153). அலுவல்+களம் +பெண்>அலுவற்களப்பெண்.

அழுக்கறுப்பான்கள்: 'துவைத்தல் பரிசு–அழுக்கறுப்பான்கள்' (நெல்லிக்கனி, ப. 218). அழுக்கு+அறுப்பான்>அழுக்கறுப்பான்கள். Soap என்பதன் மொழியாக்கம்.

அவைய இலக்கியம்: 'தொல்காப்பியத்துக்குப் பின் அவைய இலக்கியத்தில் ...' (காப்பியப்பார்வை, ப. 202). அவையம்+இலக்கியம்>அவையஇலக்கியம்.

அவையப்பாடல்கள்: '...அவையப் பாடல்களிலும் இல்லை', (காப்பியப் பார்வை, ப. 204). அவையம் + பாடல்கள்> அவையப்பாடல்கள்.

அறப்பெண்கள்: 'அறப்பெண்கள் கூந்தலைக் காதில் செருகியும் ...' (ஒருநொடியில், ப. 72). அறம் + பெண்கள் > அறப்பெண்கள்.

அறமன்றம்: 'அறமன்றத்தில் என்னை விடுதலை செய்ய என்பெற்றோர்...' (ஒரு நொடியில், ப. 168). அறம்+மன்றம் > அறமன்றம். நீதிமன்றம் என்ற சொல் வழக்கில் உள்ளது.

அறிவடியர்: 'தாய்மொழிக்குக் கல்வித்துறைக்கண் அடிமையிருக்கும்வரை ... நாடு அரசுரிமை பெற்றபோதும் மக்கள் மீளா அறிவடியர் நினைவடியர் ஆவர் என்பது

Koviloor Digital Library

திண்ணம்'. (வள்ளுவம், ப. 200). அறிவு + அடியர் > அறிவடியர்.

அறிவுக்களரி: 'நூல்கள் பிறப்பதற்கு முன்பே கருத்துத் தடை செய்யாது அறிவுக்களரியில் பயில விடுவோமாக'. (தொல்காப்பியக்கடல், ப. 346). அறிவு + களரி > அறிவுக் களரி. களரி என்ற சொல் நாடகம், கல்வி முதலியன பயிலும் அரங்கு, அரங்கேற்றும் இடம் என்ற பொருளில் முன்பே பயின்றுள்ளது.

அறிவுநாடிகள்: 'நாட்டு நாடி ஓடாத அறிவுநாடிகள் நாட்டுக் கேடிகளாக மாறத் தயங்கார்'. (காப்பியப் பார்வை, ப. 51.). அறிவு + நாடிகள் > அறிவுநாடிகள்.

ஆட்சான்றுகள்: 'ஒவ்வொரு காரியத்துக்கும் கையெழுத் துக்களும் ஆட்சான்றுகளும்...... வைத்துக்கொண்டு'. (திருக்குறட்சுடர், ப. 42). ஆள் + சான்று > ஆட்சான்று. eye witness என்பதன் மொழியாக்கம்.

ஆட்சியாளி: 'ஆட்சியாளிகட்கும் உண்மை நெறி காட்டி'. (திருக்குறட்சுடர், ப. 129). ஆட்சி + ஆள் + இ > ஆட்சியாளி. ஆட்சியாளர் என்ற சொல் வழக்கில் உள்ளது.

ஆய்வுடைநூல்: 'தமிழ்க் காதல் என்னும் என் ஆய்வுடை நூலின்கண்...'(சங்கநெறி, ப. ix). ஆய்வு + உடை + நூல். ஆய்வுடை நூல்'. ஆய்வுநூல் என்பதே வழக்கில் உள்ளது.

ஆள்கட்சி: 'ஆள் கட்சியாகி விட்டால் பரமபதம் அடைந்து விட்டான் என்று குளிரப் பேசுவார்கள்'. (ஒருநொடியில், ப. 175). ஆள் + கட்சி > ஆள்கட்சி.

இசையிருக்கை: '...நொண்டியடித்தல், இசையிருக்கை, பந்தெறிவு ...' (நெல்லிக்கனி, ப. 188). இசை + இருக்கை > இசையிருக்கை - musical chair என்பதன் தமிழாக்கம்.

Koviloor Digital Library

இடிப்பறிஞர்: ‘குடிப்பெரியோரையும் இடிப்பறிஞரையும் கேண்மை கொள்க...’ (வள்ளுவம், ப. 272). இடிப்பு + அறிஞர் > இடிப்பறிஞர்.

இடைக்காலோர்: ‘அகத்திணைக்கு விளக்கஞ் செய்தனர் இடைக்காலோர்’. (சங்கநெறி, ப. 2; காப்பியப்பார்வை, ப. 89). இடை+காலம்+அத்து+ஓர் > இடைக்காலத்தோர் என்றே வரும். அத்துப் பெறாமல் அம் கெட்டு வந்துள்ளது. இதன் பொருத்தம் ஆய்விற்குரியது.

இணைநோக்கம்: ‘பொருளோடு செய்யுளை மறவாது தொகுத்துச் சொல்லும் முறையிலிருந்து செய்யுளின் இணைநோக்கம் பெறப்படும்’. (தொல்காப்பியக்கடல், ப. 231;232). இணை+நோக்கம். > இணை நோக்கம். இணை என்பது இரட்டை என்ற பொருளில் ஆளப் பட்டிருக்கிறது.

இந்திய ஒதுக்கியம்: Indian apartheid (புதிய கல்விக் கொள்கையா, புதிய ஒதுக்கற் கொள்கையா? காரைக்குடி தமிழ்ச்சங்கத்தின் வெளியீடு, ப. 10). இந்தியா + ஒதுக்கியம் > இந்திய ஒதுக்கியம்.

இருட்புகழ்: ‘இளங்கவிஞர்கள் ... இருட்புகழில் வீழாதும் இதுகாறும் நற்கவிதைச் செய்யில் தொண்டு செய்திருந்தால் ...’. (ஆ. பழநியின் சாலிமைந்தன், முன்னுரை ப. 30). இருள் + புகழ் > இருட்புகழ். இருள் என்பது குற்றம், மயக்கம் என்ற பொருளில் வந்துள்ளது எனக் கருதலாம். தனித்தன்மை காட்டும் விழைவால் உருவான சொல். இதன் பொருட்பொருத்தம் ஆய்விற்குரியது.

இருமதி வணிகம்: ‘...என்று சோழநாட்டின் இருமதி வணிகத்தை...’ (திருக்குறட்சுடர், ப. 39). இருமதி+வணிகம் > இருமதிவணிகம். ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் என்பதை முதற்குறையாக இவ்வாறு குறிக்கிறார்.

இல்லற உறுப்பி: ‘அன்னையர் கழகத்தின் இல்லற வுறுப்பியாக என்றும் இருப்பேன்’. (நெல்லிக்கனி, ப. 224). இல்லறம் + உறுப்பு + இ > இல்லற உறுப்பி,

Koviloor Digital Library

இல்லறக்கொலைச்சி: 'இல்லறக் கொலைச்சியை வாழவைக்க நினைக்கிறார்'. (ஒருநொடியில், ப, 129). பெயர் + ஆக்கப்பெயர் + விகுதி > பெயர். இல்லறம்+ (கொல் + ஐ) கொலை + ச்சி > இல்லறக் கொலைச்சி. கொலைகாரி என்பது வழக்கில் உள்ளது. வீட்டுக்காரி, கைகாரி, வேலைக்காரி போன்ற சொற்களையும் கருதலாம். 'ச்சி' விகுதி சேரும் சொற்கள் சாதிப்பெயராகவோ தொழிற் பெயராகவோ உள்ளன, (எ,டு) வலைச்சி,புலைச்சி, தச்சச்சி.

இல்லாளி: இல் + ஆள் + இ > இல்லாளி. பொருளாளி என்ற சொல் ஒப்புநோக்கத்தக்கது.

இலக்கண நெறிஞர்கள்: 'இலக்கண நெறிஞர்கள் இத் தடத்தின் வழி மேலும் ஏகுவராயின் ...'.(தொல்காப்பியக் கடல், ப, 172). இலக்கணம் + நெறிஞர்கள் > இலக்கண நெறிஞர்கள்.

இலக்கணப்படைப்பி: 'இதுவே எதிர்காலத் தமிழிலக்கணப் படைப்பியின் குறிக்கோள்'. (தொல்காப்பியக்கடல், ப,337), இலக்கணம் + படைப்பு + இ + இலக்கணப்படைப்பி,

இலக்கியக் கண்ணோடிகள்: 'அவ்வண்ணம் கண்டு எழுதவல்ல இலக்கியக் கண்ணோடிகள் அல்லது இலக்கிய முதல்வர்கள் காலந்தோறும் தோன்றுவதில்லை'. (காப்பியப் பார்வை, ப. 57). இலக்கியம் + கண்ணோடி + கள் > இலக்கியக் கண்ணோடிகள். இங்குக் கருதிய பொருளைப் புலப்படுத்துவதில் மயக்கம் உள்ளது. படைப்பாளி என்ற சொல் 'கண்ணோடி' என்ற சொல்லில் வெளிப்பட வில்லை. அதனால் தான் பேராசிரியரே 'அல்லது இலக்கிய முதல்வர்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். இச்சொல் தனித் தன்மை காட்டும் விழைவால் உருவானது எனலாம்.

Koviloor Digital Library

இலக்கியப் படிப்பி: 'இலக்கியப் படிப்பிகளும் பிற மதத்தாரும் எளிதில் படிக்கும்படியாக...'. (காப்பியப் பார்வை, ப. 14; சிந்தனைக் களங்கள், ப. 308). இலக்கியம் + படிப்பு + இ > இலக்கியப் படிப்பி. வாசகர், படிப்பவர் என்ற சொற்கள் வழக்கில் உள்ளன.

இலக்கியப் படைப்பி: 'இதுவே எதிர்காலத் தமிழிலக்கியப் படைப்பியின் குறிக்கோள்'. (தொல்காப்பியக்கடல், ப.33). இலக்கியம் + படைப்பு + இ > இலக்கியப் படைப்பி.

இலக்கியல்: 'தன்மையை அணியாக மாற்றல் இலக்கியல்'. (திருக்குறட்சுடர், ப. 38). இலக்கியம் + இயல் > இலக்கியவியல் என வரவேண்டியது அரசியல், அறிவியல், பொருளியல் என்பன போல ஒப்புமையாக்கத்தால் உருவாகியுள்ளது. பொருள் மயக்கம் தரும் கூட்டுச் சொல்லாக்கம்.

இன்மைக்கோளிகள்: 'கடவுள் இல்லை என்ற இன்மைக் கோளிகளும்...' (திருக்குறட்சுடர், ப. 136). இன்மை + கோள் + இ + கள் > இன்மைக் கோளிகள்.

உடைமைமுறிகள்: 'உடைமை முறிகள், ஒற்றியாவணங்கள் சட்டநடைகள் வரைய எல்லார்க்கும் இயலா'. (சிந்தனைக் களங்கள், ப. 178). உடைமை + முறிகள் > உடைமை முறிகள்.

உடலறையாளர்: 'இன்ன உடலறையாளர் வாழ்க்கை இழந்தவர்தாம் எனக் கருதுவது மானிடப் பிறப்பையே அவமதிப்பது ஆகும்'. (வள்ளுவம், ப. 162). உடல் + அறையாளர் > உடலறையாளர்.

உடற்கழகம்: 'கல்விநிலையம், நூல் நிலையம், ஏழை விடுதி......' (வள்ளுவம், ப. 115). உடல் + கழகம் > உடற்கழகம்.

Koviloor Digital Library

உண்டிச்சாலை: 'உண்டிச் சாலையில் ஒரு மாம்பழத்தை ஆளுக்குப் பாதி கடித்து...'. (ஒரு நொடியில், ப. 150; நெல்லிக்கனி, ப. 20). உண்டி + சாலை > உண்டிச்சாலை.

உணர்ச்சிக்கொல்லி: 'எண்ணைச்சுமை அம்மம்ம! உணர்ச்சிக் கொல்லி. (நெல்லிக்கனி, ப. 78). உணர்ச்சி + கொல் + இ > உணர்ச்சிக்கொல்லி.

உணவுச்சாலையாளர்: 'உணவுச் சாலையாளர்களையும் தொந்தரைசெய்வார்கள் நம் காவலர்கள்'. (ஒருநொடியில், ப. 161). உணவு + சாலையாளர் > உணவுச் சாலையாளர்.

உயிராயத்தொண்டு: 'உயிராயத்தொண்டு என்பது யாரோ பெரியவர்கள் செய்ய வேண்டிய செயல்'. (திருக்குறட்சுடர், ப. 27). உயிராயம் + தொண்டு > உயிராயத்தொண்டு.

உரையாளி: '...... இலக்கணிகளாலும் சில உரையாளிகளாலும் தமிழுக்கு விளைந்த அவமதிப்பு'. (தொல்காப்பியக்கடல், ப. 332). உரை + ஆள் + இ > உரையாளி.

உரைக்கிளை: 'இவற்றையெல்லாம் உரைக்கிளைகள் என்று கொள்ளவேண்டுமேயன்றி......'. (திருக்குறட்சுடர், ப. 14). உரை + கிளை > உரைக்கிளை.

உரைத்திரைகள்: '...... மூலத்தை மறைக்கும் உரைத் திரைகள் அல்லது உரை மூடிகள் என்று பெரிதுபடுத்த லாகாது'. (திருக்குறட்சுடர், ப. 14).
உரை + திரைகள் > உரைத்திரைகள். அருமையான சொல்லாட்சி.

உரைநிறை: 'பண்டிதமணியின் உரைநிறை இல்லை என்பது நம் தவக்குறையேயாயினும் ...'. (இலக்கியச்சாறு, ப. 86). உரை + நிறை > உரைநிறை(வு) (completion).

Koviloor Digital Library

உரைப்பழி: 'உரைப்பழி அடுக்குவார் இன்று பலர்'. (சிந்தனைக்களங்கள், ப. 8). உரை + பழி > உரைப்பழி.

உரைப்பிசிர்: 'உரையெழுதிய இவர்களும் இலேசு என்னும் உரைப்பிசிரைப் பின்பற்றினார்களே'. (தொல் காப்பியக்கடல், ப. 317). உரை + பிசிர் > உரைப்பிசிர் அருமையான சொல்லாக்கம்.

உரைப்புரை: 'உண்மைகளைக் கீழறுத்து அறை செய்யும் உரைகளை உரைப்புரைகளெனத் துணிந்து தள்ள வேண்டும்'. (தொல்காப்பியக்கடல், ப. 307) உரை +புரை > உரைப்புரை.

உரைமருள்: '... என்று பொருள் கொள்வது உரை மருளாகும்'. (காப்பியப்பார்வை, ப. 84). உரை + மருள் > உரைமருள்.

உரைவிளக்கிகள்: '... இயல்பின்மை காட்டுவர் உரை விளக்கிகள்'. (இலக்கியச்சாறு, ப. 142). உரை+விளக்கிகள் > உரை விளக்கிகள். (விளக்கு + இ + கள்)

உலகந்தாங்கி: '...... இவளே உலகந்தாங்கி'. (ஒருநொடியில், ப. 86) உலகம் + தாங்கி > உலகந்தாங்கி.

உல்காயம்: 'அது கூறும் உலகாயங்களும் வாழ்க்கைக் கூறுகளும் ...... பலப்பல'. (தொல்காப்பியக்கடல், ப. 10). உலகு + ஆயம் > உலகாயம். உலக நெறிமுறை அல்லது உலகியல் என்ற பொருளில் பயின்றுள்ளது

உள்ளக்காவலி: 'ஊர்க்காவலர்க்குத் தெரியாவிட்டாலும் என் உள்ளக்காவலிக்குத் தெரியும்'. (ஒருநொடியில், ப. 155). உள்ளம் + காவல் + இ > உள்ளக்காவலி.

உறுப்பரசு: 'நம் இந்தியத் தலையரசும் உறுப்பரசுகளும் '......'. (திருக்குறட்சுடர், ப. 55) உறுப்பு + அரசு > உறுப்பரசு.

Koviloor Digital Library

உறுப்பிலி: '...... உழைக்கும் உறுப்பிலிகட்கும் உணவு இலவசமாகலாம்'. (ஒருநொடியில், ப. 184). உறுப்பு + இலி > உறுப்பிலி.

ஊடல்முடக்கு: 'கானல்வரிப் பாடலால் தோன்றிய ஊடல் முடக்கை அகற்றுவதற்குக் ......' (காப்பியப் பார்வை, ப. 116). ஊடல் + முடக்கு > ஊடல் முடக்கு.

ஊராயத்தொண்டு: 'வீட்டில் கூட்டிய குப்பையை ...... வீதித் தொட்டியிற் போடுவதும் ஊராயத் தொண்டு'. (திருக்குறட் சுடர், ப. 27). ஊராயம் + தொண்டு > ஊராயத் தொண்டு.

எடுப்படிகள்: 'பதிற்றுப்பத்தில் ஈர்க்கும் எடுப்படிகள் பலவுள்ளன'. (சங்கநெறி, ப. 146). எடுப்பு + அடிகள் > எடுப்படிகள்.

எழுத்தாண்மையர்: 'தமிழ் வளம் பெருக்கும் எழுத் தாண்மையர் தாமும் வளமாக வாழ வேண்டும்' (இலக்கியச்சாறு, ப. 5). எழுத்து + ஆண்மையர் > எழுத்தாண்மையர்.

எழுத்தாள்வார்கள்: 'தமிழ் எழுத்தாள்வார்களான நாம் யார்?' (இலக்கியச்சாறு, ப. 2). எழுத்து + ஆள்வார்கள் > எழுத்தாள்வார்கள்.

எழுத்தாளி: 'எழுத்தாளி மறைந்த ஐம்பதாண்டுக்குப் பின் உலகவுடைமைகள் ஆகிவிடுகின்றன' (இலக்கியச்சாறு, ப. 5). எழுத்து + ஆளி > எழுத்தாளி. பொருளாளி என்ற சொல்லை ஒப்பு நோக்கலாம். எழுத்தாளர் என்ற சொல் வழக்கில் உள்ளது.

எழுத்தாளுநர்: 'தமிழ் மரபைத் தமிழ் எழுத்தாளுநர் உளங் கொள்ள வேண்டும்' (இலக்கியச்சாறு, ப .9; காப்பியப் பார்வை, ப. 125). எழுத்து + ஆளுநர் > எழுத்தாளுநர்.

Koviloor Digital Library

எழுத்து வல்லுநர்: 'எழுத்து வல்லுநர்க்கு இக்காலம் பக்குவமான உரிமைக்காலம்'. (இலக்கியச்சாறு, ப. 9). எழுத்து + வல்லுநர் > எழுத்துவல்லுநர்.

ஒப்பறிவு : 'இவ்விரு நூல்களையும் ஒப்பறிவுக்காகப் பயில்வதனால் ...'. (தொல்காப்பியக் கடல், ப. 333). ஒப்பு + அறிவு > ஒப்பறிவு.

ஒப்பாயம் : 'மிருச்சகடிகமும் சிலப்பதிகாரமும் என்ற கட்டுரைகள் ஒப்பாயத்தின் பாலன ......'. (காப்பியப் பார்வை, ப. X). ஒப்பு+ஆயம் > ஒப்பாயம். ஒப்பாய்வு என்ற பொருளில். பொருட்பொருத்தம் ஆய்விற்குரியது.

ஒப்பாளர்: 'திரைக்காட்சிக்குக் கூட ஒப்பாளர் குழுவுண்டு'. (இலக்கியச்சாறு, ப. 9). ஒப்பு + ஆளர் > ஒப்பாளர். தணிக்கைக் குழுவினர் என்ற சொல் வழக்கில் உள்ளது.

ஒலிக்கற்பு: 'ஒலிக்கற்பில் பிறழவில்லை நல்லிடைக் காலத்தார்'. (இலக்கியச்சாறு, ப. 49). ஒலி+கற்பு > ஒலிக் கற்பு.

ஒலிப்பாடு 'அஃது இஃது முதலிய சொற்கள் என்ன ஒலிப்பாடு பெறுமோ?' (தொல்காப்பியக்கடல், ப. 155). ஒலி + பாடு > ஒலிப்பாடு. பாடு என்பது நிலை என்ற பொருளில் ஆட்சிபெற்றுள்ளது.

கணவபதவி: 'கணவ பதவி மனைவி பதவிகள்தான் நிலையான பதவிகள் ... ...' (ஒரு நொடியில், ப. 103): கணவன் > கணவம் + பதவி > கணவபதவி.

கதைதிருத்தி: 'இராமன் கதை திருத்தி என்று கம்பரைத் திருத்தினார் தமிழ்க்கடலார்'. (இலக்கியச்சாறு, ப. 173). கதை + திருத்தம் + இ > கதைதிருத்தி. சீர்திருத்தி என்பது போல.

கயத்தந்தை: '... வறுமைக்கு விடுதலை என எண்ணிக் களித்தேன் கயத்தந்தை...'. (ஒருநொடியில், ப. 94). கயமை + தந்தை > கயத்தந்தை.

Koviloor Digital Library

கல்விவகுப்பி: (எந்தச்சிலம்பு, ப.43) கல்வி + வகுப்பு + இ + கள் > கல்விவகுப்பிகள். (ஒப்பு நோக்குக 1:5. கல்வித் திட்டர்கள்.)

கலைப்பொறி: (கொடைவிளக்கு, ப.26) கலை + பொறி > கலைப்பொறி.

கழிவூதியம்: 'தரகர் கழுவூதியம் பெறுவதொப்ப ...' (வள்ளுவம், ப 337). கழிவு + ஊதியம் > கழிவூதியம். Commission என்பதன் மொழியாக்கம்.

கற்புக்கேடி: 'கற்புக் கேடியும் கணவன் பேடியும் என்ன அழகு.' (ஒரு நொடியில், ப. 60). கற்பு + கேடு + இ > கற்புக்கேடி.

கற்புச்சாவி: '... கொடிய பாவியே கற்புச் சாவியே என்று வையார்...' (ஒருநொடியில், ப. 143). கற்பு + சாவு + இ > கற்புச்சாவி.

கற்புப்பதடி: '... கற்புப் பதடியைத் தொடுகிறாரே ... (ஒருநொடியில், ப. 129). கற்பு + பதடி > கற்புப்பதடி.

கற்பிலி: 'அபஞ்சிகன் கொண்ட இச் சோதிடப்பிடிதான் சாலியைக் கற்பிலியாக்கிற்று...' (சாலிமைந்தன், முன்னுரை ப. 27). கற்பு + இலி > கற்பிலி.

கன்னத்திண்டு: 'கன்னத்திண்டும் வேகமுடியும் வளர்ப்பர்'. (ஒரு நொடியில், ப. 148). கன்னம் + திண்டு > கன்னத்திண்டு Side burn என்பதன் மொழியாக்கம்.

காலஅடைப்பான்: 'இதனால் நுண்ணிய உத்திகட்குக் கால அடைப்பான் இல்லை என்ற படைப்பிய வரலாறு பெறப் படும்.' (இலக்கியச்சாறு, ப. 18). காலம் + அடைப்பான் > காலவடைப்பான்.

Koviloor Digital Library

காலவளைவு: 'அவ்வக் காலத்து வந்த உரையாசிரியர்கள் தொல்காப்பியத்தைக் காலவளைவு செய்வாராயினர்'. (தொல்காப்பியக்கடல், ப. 306). காலம்+வளைவு>கால வளைவு.

குடியாள்: 'ஒவ்வொரு குடியாளின் திறன் வளர்ச்சிக்கு இவ்வேழு அடிப்படை உரிமைகளும்...' (திருக்குறட்சுடர், ப. 132). குடி+ஆள்>குடியாள். குடிமகன் என்ற சொல் வழக்கில் உள்ளது.

குடும்பக்கடமி: குடும்பக் கடமிகளைக் குடும்பத் தொண்டர் கள் என்று புகழ்வதுண்டா?' (இலக்கிய விளக்கம், ப. 50). குடும்பம் + கடமை + இ> குடும்பக்கடமி, (1:5 பிரிவிலும் அடக்கலாம்)

குடும்பியல்: '... மதவியல், சடங்கியல், சமூகவியல், குடும்பியல் எனவாங்கு ...' (வள்ளுவம், ப.346). குடும்பம் + இயல்>குடும்பவியல் என்று வரவேண்டும். ஆய்விற்குரியது.

குதிமிதி: '... குதிமிதிகளோ வேண்டாம் ...' (ஒரு நொடி யில், ப. 84) குதி+மிதி>குதிமிதி.

குமரிக்கொள்ளிகள்: 'எனக்கு விரைவில் திருமணம் ஆனது பொறாது குமரிக்கொள்ளிகள் ... கல்லூரித் தோழிகள் ...' (ஒருநொடியில், ப. 74). குமரி + கொள்ளிகள் > குமரிக் கொள்ளிகள்.

குழும நலம்: 'இதனை மேலும் வளரவிடுவது குழும நலமாகாது'. (இலக்கியச்சாறு, ப. 11). குழுமம்+நலம்> குழுமநலம்

குழுவாயம்: 'சீரழிந்த நிகழ்காலக் குழுவாயத்தைப் புனைதல் நசிவிலக்கியம்... ...' (இலக்கியச் சாறு, ப. 11). குழு + ஆயம் >குழுவாயம். (குழுத்தன்மை)

Koviloor Digital Library

குளிரகம் : 'ஒருவர் குளிரகத்து வைத்துக் குளிரக் குடிப்பர்... ...' (திருக்குறட்சுடர், ப. 60). குளிர் + அகம்> குளிரகம். Fridge என்பதன் மொழியாக்கம்.

குற்றக்காசுக்கணக்கு : 'மாணவர்கள் தேர்வெழுதாக் குற்றக்காசுக்கணக்கை ஒப்பிப்பேன்... ...' (ஒருநொடியில், ப. 112). குற்றம் + காசு+கணக்கு> குற்றக்காசுக்கணக்கு. தேவையின் பொருட்டு உருவான சொல். அபராதக் கணக்கு என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது. இதே பொருள் இம் மொழியாக்கத்தில் வருகிறதா என்பது ஆய்விற்குரியது.

குறையறவுகள்: 'இங்ஙனம் கொள்வதில் வரும் குறையறவுகள் என்ன?' (காப்பியப் பார்வை, ப. 118). குறை+அறவு>குறையறவு (குறைபாடுகள் — குற்றங்கள்)

கூத்துத்தாள்: 'கூத்துத்தாள் வாங்கும் குழந்தையுணர்ச்சியே அவர்கட்குத் தோன்றும் ... ...' (வள்ளுவம், ப. 121). கூத்து + தாள் > கூத்துத்தாள். Notice என்பதன் மொழி யாக்கம்.

கூலிவழக்காடி: 'கூலிவழக்காடிகள் மானமின்றி எல்லாம் கேட்பார்கள் ... ...' (ஒரு நொடியில், ப. 59) கூலி +. வழக்கு + ஆடு + இ > கூலிவழக்காடி. Advocate என்பதன் தமிழாக்கம்.

கையேடு: 'கையேடுகளும் களை போல பெருகவே செய்யும்' (காரைக்குடி தமிழ்ச்சங்க வெளியீடு, ப. 4), கை + ஏடு > கையேடு. Notes என்பதன் மொழியாக்கம்.

கைந்நாழி: 'இக் கைந்நாழி தனக்கு அழகு செய்யாதெனின்' (திருக்குறட்சுடர், ப. 133). கை + நாழி> கைந்நாழி.

கொடுபோக்கு: 'இம் மறுமொழி பாரத மன்னாயத்தின் கொடுபோக்குக்கு நல்ல எடுத்துக்காட்டு. (இலக்கியச் சாறு, ப. 12). கொடுமை + போக்கு > கொடுபோக்கு.

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

கொல்லறிவு: 'அணி பல பூணுவார்க்குக் கொல்லறிவோ பயணஞ் செய்வார்க்கு ஊர்திகளின் அறிவோ தேவையா?' (காப்பியப் பார்வை, ப. 43). கொல் + அறிவு> கொல்லறிவு.

கோளாளர்: 'காப்பியர் காலத்திலேயே பாவினம் கூறும் கோளாளர்களும் இருந்தமை போதரும்...'. (தொல்காப் பியக்கடல், ப. 226). கோள்+ஆளர்+கள்>கோளாளர்கள். வேளாளர் என்பதன் ஒப்புமையாக்கம்.

சாவுநோக்கி: '...... அறிய வேண்டுமவற்றை அறியாது மடிதல் சாவு நோக்கியின் இயல்பு ...'. (வள்ளுவம், ப. 92). சாவு + நோக்கம் + இ > சாவுநோக்கி.

சான்றுச் சுருள்: '... ... என்று சான்றுச் சுருள்களை மலர்த்தினேன் ...'. (ஒரு நொடியில், ப. 102) சான்று + சுருள் > சான்றுச் சுருள். சான்றிதழ்கள் என்ற சொல் வழக்கில் உள்ளது. புத்தாக்க ஆர்வத்தால் தோன்றிய சொல்.

சிட்டை அரசுகள்: (நெல்லிக்கனி, ப. 56). சிட்டை+அரசு+ கள் > சிட்டை அரசுகள்.

சில்லாண்டு: '... ...சில்லாண்டுகளாக அறிந்து ......' (தொல்காப்பியக் கடல், ப. 55). சில + ஆண்டு > சில்லாண்டு. பல்லாண்டு என்பதன் எதிர்மறை.

சிமிந்திருக்கை: 'சிமிந்திருக்கையில் சாய்ந்து கொண்டு....' (ஒரு நொடியில், ப.48). சிமிந்து+இருக்கை>சிமிந்திருக்கை.

சிறுமுது நூல்கள்: 'திண்ணைப் பள்ளிகளில் இச்சிறு முதுநூல்களை ...'(திருக்குறட்சுடர்,ப.122).சிறுமை+முதுமை + நூல்கள் > சிறுமுதுநூல்கள். 'சிறுமுது குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்'(சிலம்பு) என்பதன் ஒப்புமையாக்க மாகத் தோன்றிய சொல்.

Koviloor Digital Library

சுரங்கநூல்: 'சுரங்கநூல் என்ற மனமையைத்தான்'. (திருக்குறட் சுடர், ப. 67). சுரங்கம் + நூல்>சுரங்கநூல்.

சுவைநீர்: 'சுவைநீர் குடிக்கிறாள்...' (வள்ளுவம், ப. 139). சுவை + நீர் > சுவைநீர்

சுழல்வேகம்: 'நம் எழுத்து முன்னோர்கள் யார் என்று சுழல்வேகமாக எண்ணினாலும், தொல்காப்பியர், சங்கச் சான்றோர் ...' (இலக்கியச்சாறு, ப. 2). சுழல்+வேகம்> சுழல்வேகம்.

சுழிநிலை: 'சூழ்நிலை பாராது தம் சுழிநிலை பார்ப்பாரும் ... ...' (வள்ளுவம், ப. 87). சுழி + நிலை > சுழிநிலை.

செந்தெளிவு: 'இவ்வகையான செந்தெளிவுக்கு ஆய்வு வழி காட்டி ......' (சங்க நெறி, ப. 211). செம்மை+தெளிவு> செந்தெளிவு.

செம்பொய்யன்: 'மெய்சுமந்த அன்னையிடமும் பொய் யெண்ணைச் சொல்லிவைத்த செம்பொய்யன் ...' (ஒரு நொடியில், ப. 116). செம்மை + பொய்யன் > செம் பொய்யன் (முழுப்பொய்யன்).

செய்தித்தாள் குறிப்பாளர்: 'செய்தித்தாள் குறிப்பாளர் சிலரும் உள்ளனர்.' (ஒரு நொடியில், ப. 182). செய்தித்தாள் +குறிப்பாளர்>செய்தித்தாள் குறிப்பாளர். News reporter என்பதன் மொழியாக்கம். நிருபர் என்ற பிறமொழிச் சொல் வழக்கில் உள்ளது.

சோற்றுச்சுரபி: 'சோற்றுச்சுரபி இருக்கக் கூடாதா?' (ஒரு நொடியில், ப. 180). சோறு+சுரபி>சோற்றுச்சுரபி. அமுத சுரபி என்பதன் ஒப்புமையாக்கம்.

தகவலியங்கள்: 'உடம்பும் ஐம்பொறிகளும், ஊர்திகளும், தகவலியங்களும் கருவிகள்தாம் ... ...' (இலக்கியச்சாறு, ப. 21). தகவல்+இயல்>தகவலியம் +கள்>தகவலியங்கள்.

Koviloor Digital Library

தகவற்கரணங்கள்: 'புதுக்கல்விக் கொள்கை உலகில் வளர்ந்து வரும் தகவற் கர்ணங்களையும் ...' (புதிய கல்விக்கொள்கை குறித்த காரைக்குடி தமிழ்ச்சங்க வெளியீடு, ப.9). தகவல்+கரணங்கள்>தகவற்கரணங்கள்.

தங்கத்தாள்: 'அரசினரின் தங்கத்தாள் தந்தாலும் தரு வேன் ... ...' (நெல்லிக்கனி, ப. 180). தங்கம்+தாள்> தங்கத்தாள்.

தடுப்பொளி: 'இந்தியாவும் ஒரு வல்லரசாகி ... ... தடுப் பொளி கொண்டதாக விளங்கியிருக்க வேண்டும்.' (திருக் குறட்சுடர், ப. 144.). தடுப்பு + ஒளி > தடுப்பொளி. Veto Power என்பதன் மொழியாக்கம்.

தடைவழக்கு: 'தடைவழக்குத் தொடுப்பேன் என்று எதிர்ப்புச் செய்திருக்கலாம்.' (ஒரு நொடியில், ப. 111). தடை + வழக்கு > தடைவழக்கு.

தமிழமுக்கம்: 'அயற்சொற்களின் தாக்கம் தமிழமுக்கமாகி விடாதா?' (தொல்காப்பியக்கடல், ப. 142). தமிழ் + அமுக்கம் > தமிழமுக்கம். ஒடுக்கம் என்ற பொருளில்.

தமிழாயம்: 'பண்டைத் தமிழாயக் கருத்து பல இலக்கியங் களில் விளக்கம் பெறுகின்றது.' (காப்பியப் பார்வை, ப. 29). தமிழ்+ஆயம் > தமிழாயம்.

தமிழ்க்கோள்: 'அதனைக் கண்டு தமிழ்க்கோள் கெடாத படி ..... என்று நடைதெரித்து ஓதினார்.' (தொல்காப்பியக் கடல், ப. 52). தமிழ் + கோள் > தமிழ்க்கோள்.

தமிழ்ப்பட்டத்தி: 'மனைவி அமுதி தமிழ்ப்பட்டத்தி' (ஒரு நொடியில், ப. 98). தமிழ் + பட்டம்+அத்து+இ > தமிழ்ப் பட்டத்தி. பட்டதாரி என்ற கலப்புச் சொல் இரு பாலாரையும் குறிக்க வழங்கி வருகிறது.

Koviloor Digital Library

தமிழ்ப்போலியன்: '... ... கூறிக் கழிக்கும் தமிழ்ப்போலியன் வள்ளுவர் நடைப்படி அவியினும் வாழினும் என்?' (சங்க நெறி, ப. 10). தமிழ் + போலி + அன் > தமிழ்ப் போலியன்.

தமிழ்வளர்ப்பிகள்: (இரட்டைக்காப்பியங்கள், ப. 88). தமிழ் + வளர்ப்பு + இ + கள் > தமிழ் வளர்ப்பிகள்.

தலையரசு: 'நம் இந்தியத் தலையரசும் உறுப்பரசுகளும் என்றும் மும்முரமாக ... ...' (திருக்குறட்சுடர், ப. 55). தலை + அரசு > தலையரசு. மத்திய அரசு என்ற கலப்புச் சொல்லும் நடுவணரசு, மையஅரசு என்ற தமிழ்ச் சொற் களும் வழக்கில் உள்ளன.

தலையுரை: 'மானமுடைய மாணவன் என்று தலையுரையும் வரும் ... ...' (ஒரு நொடியில், ப. 13). தலைமை + யுரை > தலையுரை. தலையங்கம் என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது.

தலைப்பகுதிகள்: 'செய்தித்தாள்கள் ... தலைப்பகுதிகள் எழுதியுள்ளன.' (நெல்லிக்கனி, ப.153). தலை + பகுதிகள் > தலைப்பகுதிகள். ஆசிரிய உரை என்பதே பொருத்தம்.

தற்கிழமைத்திறம்: 'செந்தமிழுக்கு எதனையும் நிறைவாகத் தூய்மையாகச் சொல்லவல்ல தற்கிழமைத் திறம் உண்டு.' (திருக்குறட்சுடர், ப. x). தற்கிழமை + திறம் > தற்கிழமைத் திறம். தற்கிழமைப் பொருள் என்பதன் ஒப்புமையாக்கம்.

தற்பெரியான்: 'தற்பெரியானுக்கு உள்ளதும் தோன்றாது.' (நெல்லிக்கனி, ப. 217). தன் + பெரியான் > தற்பெரியான்.

தன்னேய்ப்பு: 'குற்றத்தை வரவழைத்துக் கொண்டும் சுமக்கும் உரமுடையேன் என்று தருக்குவது தன்னேய்ப் பாகும்.' (வள்ளுவம், ப. 301—302). தன் + ஏய்ப்பு > தன்னேய்ப்பு.

Koviloor Digital Library

தனிஇழைத்தாள்: 'என் கட்டுரைகள் தனி இழைத்தாளாகக் கிடவாமல் ......' (தொல்காப்பியக்கடல், ப. viii). தனி + இழை + தாள் > தனி இழைத்தாள்.

தனித்தமிழ்க்கோளிகள்: 'தனித்தமிழ்க் கோளிகள் மறிக்காது என்றும் வரவேற்பர்.' (ஒப்பியல் நோக்கு, ப.166). தனி + தமிழ் + கோள் + இ + கள் > தனித்தமிழ்க்கோளிகள்.

தனிமருத்துவநிலையம்: 'கணவனும் தனி மருத்துவ நிலையத்திலிருந்து திரும்பும் நேரம் ... ...' (ஒரு நொடியில், ப.134). தனி + மருத்துவ நிலையம் > தனி மருத்துவ நிலையம். தனியார் மருத்துவ நிலையம் என்ற சொல் வழக்கில் உள்ளது. Private Hospital என்பதன் மொழியாக்கம்.

தனியகாலம்: 'எனவே எதிர்காலம் என்பது ... ... அறுந்து தோன்றும் தனியகாலமன்று.' (இலக்கியச்சாறு, ப.18). தனி + காலம் > தனியகாலம்.

தாள்விற்பி: 'தாள்விற்பி என்னைக் கண்டதும் ... ...' (ஒரு நொடியில், ப.7). தாள் + வில் > விற்பு + இ > தாள் விற்பி. 'பேப்பர் விற்பவன்' என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது. தேவை கருதி உருவாக்கப்பட்டது.

திரையகம்: 'ஒருசேரத் திரையகம் செல்வர் ... ...' (ஒரு நொடியில், ப. 148). திரை + அகம் > திரையகம். கொட்டகை என்ற சொல் வழக்கில் உள்ளது. Theatre என்பதன் மொழியாக்கம்.

திரைஉத்தி: 'இந்தத் திரையுத்தி பழைய இலக்கிய உத்தியின் மீட்சியாகும்.' (இலக்கியச் சாறு, ப.17). திரை + உத்தி > திரையுத்தி. Film Technique என்பதன் மொழியாக்கம்.

துணைச்செயலி: (உப்பங்கழியில், ப.15). துணை + செயல் + இ > துணைச்செயலி. செயலர் என்பதன் பெண்பாற் சொல்லாக உருவாக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

தெருவூதி: 'பீ பீ ஊதிக் கொண்டு செல்லும் தெருவூதி யல்லன்...'. (தொல்காப்பியப்புதுமை, ப. 98; இலக்கியச் சாறு, ப. 197). தெரு + ஊதி > தெருவூதி.

தேசிய வுணர்விலி: 'அத்துணைத் தேசிய வுணர்விலி களாகவும் திறமையும் கல்வித் தரமும்...' (காரைக்குடி தமிழ்ச்சங்கத்தின் புதியகல்விக்கொள்கை குறித்தவெளியீடு, ப. 4). தேசியம் + உணர்வு + இலி > தேசியஉணர்விலி.

தேர்ச்சிக்கடப்பு: 'தேர்ச்சிக் கடப்புக்கெனவே ஆசிரியர்களும் நிலையங்களும் பாடுபடுவ.' (வள்ளுவம், ப. 194). தேர்ச்சி +கடப்பு > தேர்ச்சிக்கடப்பு.

தேர்வுப்பயிற்சிப்பள்ளி: 'நுழைவுத்தேர்வு வைத்தால் இதற்குத் தேர்வுப் பயிற்சிப் பள்ளிகளும் ......' (காரைக்குடி தமிழ்ச் சங்க வெளியீடு, ப. 4). தேர்வு+பயிற்சி+ பள்ளி >தேர்வுப் பயிற்சிப் பள்ளி.

தேர்வுரியோர்: 'மாணாக்கரைத் தேர்வுரியோர் என்றும் ...' (வள்ளுவம், ப. 194). தேர்வு+உரியோர் > தேர்வுரியோர்.

தொகைப்பாடு: 'என் கட்டுரைகள் புதிய தொகைப்பாடு பெற வேண்டும் ...' (திருக்குறட்சுடர், ப. 11). தொகை + பாடு > தொகைப்பாடு. தொகைநிலை என்ற சொல் வழக்கில் உள்ளது.

தொடுப்புரை: 'இத் தொடுப்புரை எவ்வளவு கடுமையானது. ... ...' (தொல்காப்பியக்கடல், ப. 301). தொடுப்பு+உரை தொடுப்புரை. தொகுப்புரை என்பதன் ஒப்புமையாக்கம்.

தொழில் முதல்வோன்: 'ஒரு தொழில் முதல்வோன் பால் வேலைகேட்க ஒருவன் சென்றான்...' (வள்ளுவம், ப. 107). தொழில்+முதல்வோன் > தொழில் முதல்வோன். தொழி லதிபர் என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது. தேவை யின் பொருட்டு உருவானது.

Koviloor Digital Library

நடைப் பிணிப்பு: 'நாவலர் பாரதியார் உரை நடைப் பிணிப்பு உடையது.' (தொல்காப்பியக்கடல், ப. 285). நடை + பிணிப்பு > நடைப்பிணிப்பு.

நடைமுறைக்கண்ணாளர்: 'இப் பொதுநலப் பொய்ம்மை இன்றியமையாதது என்பது நடைமுறைக் கண்ணாளர்க்கு புலனாகும்.' (வள்ளுவம்,ப. 372) நடைமுறை+கண்ணாளர் >நடைமுறைக் கண்ணாளர்.

நடையாளி: 'உலக வழிப்பறியில் பறிஞன் நடையாளியைத் தொல்லைப்படுத்திப் பொருள் வாங்குவான்.' (இலக்கியச் சாறு, ப. 90). நடை + ஆள் + இ > நடையாளி.

நம்பிக்கைக்கேடி: 'இவ்வாறு நம்பிக்கைக் கேடியாகிய கட்டியங்காரனை...' (இலக்கியச்சாறு, ப. 66). நம்பிக்கை + கேடு + இ > நம்பிக்கைக் கேடி. நம்பிக்கைத் துரோகி என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது.

நாட்டுக் கேடி: (எந்தச்சிலம்பு, ப. 130) நாடு + கேடு + இ > நாட்டுக்கேடி. தேசத்துரோகி என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது.

நாணயக்கேடி: 'நாணயக்கேடி உலகப் பேடியாவான்'. (திருக்குறட் சுடர், ப. 42). நாணயம் + கேடு + இ > நாணயக்கேடி.

நிகழியம்: 'நம் கண்ணெதிரே நடந்து கொண்டிருக்கும் நிகழியங்களையும்...'. (திருக்குறட்சுடர், ப. 143) நிகழ் + இயல் + நிகழியல் > நிகழியம்.

நிலைத்தலைவி: 'வடிவழகியே நிலைத் தலைவியாக இருக்க வேண்டும்.' (நெல்லிக்கனி, ப. 154) நிலை + தலைவி > நிலைத்தலைவி.

Koviloor Digital Library

நிலையறம்: 'மனைவி என்பவள் நிலைமகள். கணவர் என்பவர் நிலைமகன். இல்லறம் என்பது நிலையறம்.' (ஒரு நொடியில், ப. 65). நிலை + அறம் > நிலையறம்.

நிலையியம்; 'ஒவ்வொன்றுக்கும் நிலையியம் உண்டு.' (தொல்காப்பியக்கடல், ப. vii). நிலை + இயம் > நிலையியம்.

நிலையிலிகள்: 'உண்மையையும் பொய்யையும் வேண்டுழி வேண்டுழித் தேர்ந்து கொள்ளும் நிலையிலிகளே மக்களுட் பலராவர்.' (வள்ளுவம், ப. 370). நிலை + இலி + கள் > நிலையிலிகள்.

நிலைநாடி: 'இவன் இன்னான் என்று சுட்டத்தக்க நிலை நாடியொன்று அவ் வெழுத்தாளன் படைப்பில் இழைந் தோடும்'. (தொல்காப்பியக்கடல், ப. vii). நிலை+நாடி > நிலைநாடி.

நிலைமகள்: (ஒரு நொடியில், ப. 65). நிலை + மகள் > நிலைமகள்.

நிலைமகன்: (மேலது) நிலை + மகன் > நிலைமகன்.

நிறவிளக்குகள்: '......கைகாட்டிகளும் நிறவிளக்குகளும் எவ்வளவு உள்ளன.' (தொல்காப்பியப் புதுமை, ப. 153). நிறம் + விளக்குகள் > நிறவிளக்குகள்.

நீர்க்கோள்: 'நீர்க்கோள் உடனே சினைப்பதில்லை.' (காப்பியப் பார்வை, ப. 20). நீர் + கோள் > நீர்க்கோள்.

நூலறை: 'பின்னடிகள் இரண்டனையும் நூலறைக் கதவில் சுண்ணாம்புக் கட்டியில் எழுதிவைத்து ... ...' (காப்பியப் பார்வை, ப. 20). நூல் + அறை > நூலறை. நூலகம் என்ற அருமையான சொல் வழக்கில் உள்ளது.

பட்டப்படிப்பிகள்: (உப்பங்கழியில், ப 12). பட்டம்+படிப்பு + இ + கள் > பட்டப் படிப்பிகள்.

Koviloor Digital Library

பணத்தூதகம்: 'அரசாட்சியின் கண்பட்ட இடமெல்லாம் பணத்தூதகமாக இருப்பின் மக்கள் யாது செய்வர்?' (வள்ளுவம், ப.278). பணம் + தூது + அகம் > பணத்தூதகம்.

பணித்தலைவர்: '... ... அதனால் பணித்தலைவர்களுக்கு இவ்விருவரிடமும் அன்பும் மதிப்பும் உண்டு.' (ஒரு நொடியில், ப.149). பணி + தலைவர் > பணித்தலைவர். துறைத் தலைவர், அவைத்தலைவர் என்பனவற்றின் ஒப்புமையாக்கம்.

பதிப்பளிப்பு: 'தில்லைக் கூத்தப்பெருமானுக்கு...'(காரைக்குடி தமிழ்ச்சங்க வெளியீடு, ப.4). பதிப்பு + அளிப்பு > பதிப்பளிப்பு. பரிசளிப்பு, அன்பளிப்பு என்பனவற்றின் ஒப்புமையாக்கம்.

பதிப்பாடை: '...பதிப்பாடை பெற்றுக் காப்புறுதி எய்தின.' (தொல்காப்பியக்கடல், ப.viii). பதிப்பு + ஆடை > பதிப்பாடை.

பதிப்புப் பொறுப்பர்: '...என்பர் பதிப்புப் பொறுப்பர்'. (காப்பியப் பார்வை, ப. 171), பதிப்பு + பொறுப்பர் > பதிப்புப் பொறுப்பர்.

பதிவிலக்கியங்கள்: 'கலையியலும் அறிவியலும் பின்னிப் பொலியும் பதிவிலக்கியங்கள்'. (சங்கநெறி, ப. 94) பதிவு + இலக்கியங்கள் > பதிவிலக்கியங்கள்.

பயிற்சிகாட்டிகள்: 'அயல்நாட்டவர்க்குக் கற்பிக்கும் பயிற்சிகாட்டிகளிலும் ... ...' (தொல்காப்பியக்கடல், ப.136). பயிற்சி + காட்டிகள் > பயிற்சிகாட்டிகள்.

பரதநடிகை: 'உடலைப் பரதநடிகை பொருளுக்குத்தக வளைப்பது போல ... ...' (இலக்கியச்சாறு. ப.51). பரதம் + நடிகை > பரதநடிகை.

பரிந்துரைமுகம்: '... ... வேறொருவரிடம் போ என்று பரிந்துரைமுகம் கொடுப்பதும் ... ...' (இலக்கியச்சாறு, ப.178). பரிந்துரை + முகம் > பரிந்துரைமுகம்.

Koviloor Digital Library

பல்வேறு போக்கர்கள்: 'பல்வேறு போக்கர்கள் தொல் காப்பியத்தை ஆராய்வது போல... ...' (தொல்காப்பியக் கடல், ப. 91). பல்வேறு+போக்கு+அர்+கள் > பல்வேறு போக்கர்கள் - போக்கினர்கள் என இன்சாரியை பெற்று வருவதே வழக்கில் உள்ளது.

பலிக்கொடையாளர்: 'அப்பலிக் கொடையாளருள் ... பேகன் என்ற பெரியவனைப் பரணர் பாடுவர் ... ...' (தொல் காப்பியப் புதுமை, ப. 51). பலி + கொடையாளர் > பலிக்கொடையாளர்.

பழவழக்கு: 'ஆய்தம் புள்ளிபெறல் ப ழ வ ழ க் கு' (தொல்காப்பியக்கடல், ப. 41). பழமை + வழக்கு > பழவழக்கு. இலக்கணப்படி சரியே. உச்சரிப்பு எளிமை இல்லை.புதுவழக்கு என்பதற்கு எதிர்ச்சொல்.தொல்வழக்கு என்பது எளிமையானது.

பாட்டாளி: 'புலவன் என்ற பாட்டாளி.' (சங்கநெறி, ப.143). பாடு + ஆளி > பாட்டாளி. இச்சொல் உழைப்பாளியைக் குறிக்க வழங்கி வருகிறது. எழுத்தாளி, பேச்சாளி என்ற சொற்களின் ஒப்புமையாக்கம்.

பாடப் போலி நூல்கள்: 'பாடநூல்களினும் பாடப்போலி நூல்கள்...' (வள்ளுவம், ப. 194). பாடம் + போலி நூல்கள் > பாடப்போலிநூல்கள்.

பாடம் அமைப்பிகள்: 'பாடம் அமைப்பிகள் இவ்வொழுங் கினைக் காற்றிற் பறக்கவிட்டு விட்டனர்.' (கம்பர் ப. 112). பாடம் + அமைப்பு + இ + கள் > பாட அமைப்பிகள்.

பாலிணைவு: 'ஆண், பெண் காதல் பற்றியும் பாலிணைவு பற்றியும்...' (சங்கநெறி, ப. 3). பால் + இணைவு > பாலிணைவு.

பிறப்பேடுகள்: 'இப்பெண் தன் பிறப்பேட்டிற்கு இசை யாள் எனில் பிறர் பிறப்பேட்டிற்குப் பொருந்தும்'.

Koviloor Digital Library

திருக்குறட்சுடர், ப. 133; நெல்லிக்கனி, ப. 126). பிறப்பு + ஏடுகள் > பிறப்பேடுகள். ஜாதகம் என்ற வட சொல்லின் தமிழாக்கம்.

புடவைக்கிழார்: 'புடவைக்கிழார் சீரனார் குடும்பம் என்று படுகிறது.' (நெல்லிக்கனி, ப. 96). புடவை + கிழார் > புடவைக்கிழார்.

புண்ணேடு: 'தமிழரின் போற்றாத் தன்மையைக் காட்டும் புண்ணேடாக நீளும்...'. (சங்கநெறி. ப. 117). புண் + ஏடு > புண்ணேடு.

புருடியம்: 'நான் காட்டும் அகவியம் புருடியம் அன்று'. (இலக்கியச்சாறு, ப. 10). புருஷம் + இயம் > புருடியம்.

புரைத்திறன்: 'எனவே உரையாசிரியர்கள் மூலநூற்கு புரைத்திறன் கூறுவதில்லை என்ற பண்புத்திறன்...' (தொல் காப்பியக்கடல், ப. 300). புரை + திறன் > புரைத்திறன்.

புலமைக்கிளிகள்: 'புலமைக்கிளிகள் இவ்விரண்டினையும் உரையாசிரியர்கள் சொல்லிய முறைப்படி சொல்லிவரக் காண்கிறோம்'. (தொல்காப்பியக் கடல், ப. 185). புலமை + கிளிகள் > புலமைக்கிளிகள்.

புலமை மதுகை: 'புலமை மதுகையால் புலப்படுத்துகின்றனர்'. (காப்பியப் பார்வை, ப. 154). புலமை + மதுகை > புலமை மதுகை.

புலமைய மனம்: 'மனித சமுதாயத்தோடு ஒன்றிப்பாடும் புலமைய மனம் இல்லை...' (காப்பியப்பார்வை, ப. 27). புலமை + அ + மனம் > புலமைய மனம்.

புழற்கவிதை: 'இளங்கவிஞர்கள் தம் ஆற்றலை எல்லாம் புழற்கவிதையில் செலுத்தாதும் ...'. (ஆ. பழநியின் சாலி மைந்தன் முன்னுரை, ப. 30) புழல் + கவிதை > புழற்கவிதை.

Koviloor Digital Library

பூசைமகள்: ‘அப்போது பூசைமகள் சாலினி ஆவேசங் கொண்டு ...’ (இரட்டைக்காப்பியங்கள், ப.8). பூசை + மகள் > பூசைமகள்.

பூதமுரண்கள் : ‘இப்பூத முரண்கள் பலர் அறிந்தவை.’ (தொல்காப்பியக் கடல், ப.13; ஒப்பியல் நோக்கு, ப.103). பூத + முரண்கள் > பூதமுரண்கள்.

பூவணிகி: ‘நான் பூவணிகி என்பதை நீங்கள் அறிவீர்கள்’. (நெல்லிக்கனி, ப 212). பூ + வணிகம் + இ > பூவணிகி.

பெற்றோரிலி : ‘மனைவ் பொன்னி... ... இசைபாடி பெற்றோரிலி ...’ (ஒருநொடியில், ப.48). பெற்றோர் + இலி > பெற்றோர் இலி (தாயுமிலி தந்தையிலி தான் தனியன் ...திருவாசகம்)

பேற்றறை : ‘... ... பேற்றறை விட்டுச் சென்றேன்.’ (ஒரு நொடியில், ப.125). பேறு + அறை > பேற்றறை.

பேறுவிடுதி : ‘சூல்கொண்ட பேடைக்குப் பேறுவிடுதி அமைக்க ஆண்குருவி ......’ பேறு + விடுதி > பேறுவிடுதி. மகப்பேறில்லம் என்ற சொல் வழக்கில் உள்ளது.

பைஞ்ஞிலம் : ‘... ... சாதியற்ற வருக்கமற்ற பைஞ்ஞிலத்தை உருவாக்குவதே...’ (திருக்குறட்சுடர், ப.132). பசுமை+நிலம் > பைஞ்ஞிலம். அருமையான சொல்லாட்சி.

பொதுவாயம் : ‘... ...தண்ணீரைக் காப்பது பொதுவாயத் தொண்டு.’ (திருக்குறட்சுடர், ப.27). பொதுவாயம் + தொண்டு > பொதுவாயத்தொண்டு.

பொருளஞ்சல் : ‘பொருளஞ்சல் வழிப் பணம் போக்கினால் ...’ (வள்ளுவம், ப 17). பொருள் + அஞ்சல் > பொருளஞ்சல். Money order என்பதன் மொழியாக்கம். தேவையை நிரப்ப உருவானது. பணவிடை என்ற சொல் வழக்கில் உள்ளது.

Koviloor Digital Library

பொருளடைவு : '...வழிவழிச் செய்வதற்கு வேண்டும் பொருளடைவும் வைத்திருக்கிறேன்'.(நெல்லிக்கனி, ப.213). பொருள் + அடைவு > பொருளடைவு.

பொன்னாண்டு : 'பொன்னாண்டு எய்திய கவிஞர்' (இலக்கியச்சாறு, ப. 134). பொன் + ஆண்டு > பொன்னாண்டு

மக்களவைப் பொருளமைச்சர் : 'சென்னை மக்களவைப் பொருளமைச்சர்...' (வள்ளுவம், ப .34). மக்கள் + அவை >மக்களவை +பொருள் + அமைச்சர் > பொருளமைச்சர் > மக்கள்அவைப் பொருளமைச்சர். நிதியமைச்சர் என்ற சொல் வழக்கில் உள்ளது.

மரபுக்கால் : 'அம் மரபுக்கால் சில நூற்றாண்டாக மரத்துப் போயிற்று ...' (தொல்காப்பியக்கடல். ப. 9). மரபு + கால் > மரபுக்கால்.

மரபுமறைவுகள் : 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டல் போன்ற மரபுமறைவுகள் உண்டு...' (திருக்குறட்சுடர், ப. 12). மரபு + மறைவு + கள் > மரபுமறைவுகள்.

மறந்தாங்கி : 'இந்த மறந்தாங்கிகளைப் பற்றி என்ன கவலை? (ஒருநொடியில், ப. 177). மறம் + தாங்கி > மறந்தாங்கி. சுமைதாங்கி என்பதன் ஒப்புமையாக்கம்.

மன்னாயம் : 'தனி மனிதனுக்கும் மன்னாயத்துக்கும் நச்சாவன'.... '(சங்கநெறி, ப. 3). மன் + ஆயம் > மன்னாயம்.

மன்பதைக்காட்டி : 'இலக்கியம் மன்பதைக்காட்டியாதலின் ...' (இலக்கியச்சாறு, ப. 116). மன்பதை + காட்டி> மன்பதைக் காட்டி. வழிகாட்டி என்பதன் ஒப்புமையாக்கமாகக் கருதலாம்.

Koviloor Digital Library

மனக்கூறு : 'காமத்தைப் பற்றி வெளிப்படையாக உரையாடல் ஆண் நண்பர்களின் மனக்கூறு ...' (தமிழ்க்காதல், ப. 49). மனம் + கூறு > மனக்கூறு.

மனப்படிகள் : 'தலைவி தோழி செவிலி நற்றாய் நால்வரும் பெண்பாலர் ஆதலின் சொல்லால் சொல்லிக் கொள்ளலாம் எனவும், தந்தையும் அண்ணனும் நெருங்கிய கேளிரேனும் ஆண்பாலர் ஆதலின் குறிப்பினால் உணரச்செய்தல்நல்லது எனவும், அகத்திணையிலக்கியம் மனப்படிகள் வகுத்துக் காட்டும்'. (தமிழ்க்காதல், ப.82) மனம் + படிகள் > மனப்படிகள்.

மனைவி விலக்கு: 'எனக்கு மனைவி விலக்கு அளியுங்கள்'. (ஒரு நொடியில், ப.13) மனைவி+விலக்கு>மனைவி விலக்கு. விவாகரத்து என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது.

மாற்றாளிகள்: 'அரசாற்றல் பொதுவாக மக்கள் பால் உண்டு. ஓரளவு கூடுதலாக நாம் பொறுக்கி விடுக்கும் மாற்றாளிகள் பால் உண்டு. (வள்ளுவம், ப. 248; ப. 276). மாறு+ஆள் > மாற்றாள் + இ + கள்>மாற்றாளிகள். மாற்றாள் என்ற சொல் ஏற்கனவே சக்கழுத்தி என்ற பொருளில் ஆட்சி பெற்றுள்ளது. பிரதிநிதிகள் என்ற கலப்புச் சொல் வழக்கில் உள்ளது.

முக அலகு: 'முகவலகால் நறுக்கிக் கூட்டின் வாயைத் திறந்தேன்'. (ஒரு நொடியில், ப. 6). முகம் + அலகு > முகஅலகு.

முகமா: 'கணத்துக்குக் கணம் முகமா அப்பிக் கூந்தலை நெறிப்படுத்தி......' (ஒரு நொடியில், ப. 141). முகம் + மா > முகமா... Talcum Powder என்பதன் மொழியாக்கம்.

முத்திரைக் கூடு: 'முகவரி எழுதிய முத்திரைக் கூட்டை உள்ளே வைத்தேன். (ஒருநொடியில், ப. 5). முத்திரை+கூடு >முத்திரைக் கூடு. Cover என்பதன் மொழியாக்கம். தேவையை நிரப்ப உருவான சொல்.

Koviloor Digital Library

முதலெடுப்பு: '... ... என்று முதலெடுப்பிலே சொல்லாள் ...' (காப்பியப்பார்வை, ப. 161). முதல்+எடுப்பு>முதலெடுப்பு.

மூதற்காலி: 'முதற்காலியை அவனுக்கு விட்டுக் கொடுத்து...' (ஒரு நொடியில், ப. 151). முதற்+காலி > முதற்காலி.

முயற்சிக்கொல்லி: 'நகரமக்கள் முயற்சிக் கொல்லிகளாய்ப் பெருகி வருகின்றனர் ......' (வள்ளுவம், ப. 147). முயற்சி+ கொல் + இ > முயற்சிக் கொல்லி. சினமென்னுஞ் சேர்ந் தாரைக் கொல்லி என்பதன் ஒப்புமையாக்கம். (குறள்–306).

முரண்பால் நோய்: 'இன்று ஞால முழுவதும் அஞ்சப்படும் (எயிட்சு) முரண்பால் நோய்க்கு மூலங்களைக் கிரேக்கத்திற் காணலாம்.' (இலக்கியச் சாறு, ப. 8). முரண்+பால்நோய் > முரண்பால்நோய்.

முறைக் கவிதை: '...உரைநடை திறனியல் முறைக் கவிதை புதுக்கவிதை இலக்கணம் ... ... எனப் பல்துறை ... ...' (இலக்கியச் சாறு, ப. 6). முறை+கவிதை>முறைக்கவிதை. புதுக்கவிதை. முறை மீறிய கவிதை என்பது பேராசிரியர் கருத்து. அதன் வெளிப்பாடே இச்சொல்லாக்கம்.

மெய்த்தாள்: 'இன்று பொய்த்தாளைப் பார்த்து மகிழும் என் அன்னை நாளை என் மெய்த்தாளைப் பார்த்து ... ...' (ஒரு நொடியில், ப. 13). மெய்+தாள் > மெய்த்தாள். பொய்த்தாள் என்ற சொல்லுக்கேற்ப மெய்த்தாள் என்று குறிப்பிட்டுள்ளார். உடம்பினைக் குறிப்பிடும் இச் சொல்லாட்சி பொருத்தமில்லாதது.

மெய்ப்பொறி; 'நிற்பவர் தம் உடற்கேற்ப, நிறுவை கட்டும் மெய்ப்பொறி நிகர்ப்பது திருக்குறள் ... ...' (வள்ளுவம், ப, 182). மெய் + பொறி > மெய்ப்பொறி. Weighing machine என்பதன் மொழிபெயர்ப்பு, இதன் பொருத்தம் ஆய்விற்குரியது.

Koviloor Digital Library

மேலவர்கள்: 'திட்டங்கள் ... ... உடனுக்குடன் செய்யப் படுகின்றனவா என்று மேலவர்கள் தம் கீழவர்களை நாள் தோறும் கவனிக்க வேண்டும்.' (திருக்குறட்சுடர், ப. 55). 'மற்ற துறை மேலவர்கள் ... ...' (ஒரு நொடியில், ப.99). மேலவன் என்ற சொல் அறிஞர், பெரியோர் என்ற பொருளில் ஆட்சி பெற்றுள்ளது. இங்கு மேலதிகாரிகளைக் குறித்து ஆட்சிபெற்றுள்ளது.

மேலாள்: 'ஒரு வினைக்களத்து மேலாள் முதலாக...' (வள்ளுவம், ப. 331). மேல் + ஆள் > மேலாள். Manager என்பதன் மொழியாக்கம்.

மைப்பால்: 'வழக்கம் போல் மைப்பால் சுரந்தாய்'. (ஒருநொடியில், ப . 10). மை + பால் > மைப்பால்.

மொழியொலிஞர்: 'தொல்காப்பியர் மொழியொலிஞர்'. (தொல்காப்பியக் கடல், ப. 111). மொழி + ஒலி + ஞர் > மொழியொலிஞர்.

மொழிப்பரத்தமை: '...இக்காலத் தமிழரிடையேதான் மொழிப்பரத்தமை அளவிறந்து காணப்படுகிறது'. (சிந்தனைக்களங்கள், ப. 422). மொழி + பரத்தமை > மொழிப்பரத்தமை.

மொழிப்பலியர்கள்: 'எவ்வளவு காலம் மொழிப்பலியர் களாக இருக்கமுடியும்?' (இலக்கியச் சாறு, ப . 5). மொழி+ பலியர் > மொழிப்பலியர்.

மொழிமுதலி: 'இன்னணம் பேரிலக்கியங்களில் வந்து கிடக்கும் பல்வேறு (யூ, யோ, ஞ, ஞி, ய) மொழி முதலிகளையும்...' (தொல்காப்பியக் கடல், ப . 140). மொழி + முதல்+இ>மொழிமுதலி. அகரமுதலி என்பது அகராதியைக் குறிக்கிறது. இங்கு மொழிமுதலி

Koviloor Digital Library

என்பது மொழிமுதலில் வரும் எழுத்துக்கள் என்ற பொருளில் ஆட்சி பெற்றுள்ளது.

வரவுப்பரிசு: 'நாள்தொறும் வரும் மாணாக்கன் ... வரவுப்பரிசு அளிக்கப்படுகின்றான்.' (வள்ளுவம், ப. 341). வரவு+பரிசு > வரவுப்பரிசு. வருகைப் பரிசு என்றிருப்பது இன்னும் பொருத்தமாகும்.

வரவுப்புலவர்: '...... என வரவுப் புலவர் நக்கீரரால் தெளிவாக்கப்பட்டுள்ளது.' (சங்கநெறி, ப. 97). வரவு + புலவர் > வரவுப்புலவர். வரலாற்றுப்புலவர் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. இதன் பொருத்தம் ஆய்விற்குரியது.

வரன்காணிக்கை: 'வரன்காணிக்கை, கைம்மைத்தமக்கை, தங்கையின் கொடுமை....' (இலக்கியச்சாறு, ப. 9). வரன் + காணிக்கை > வரன்காணிக்கை. வரதட்சணை என்ற கலப்புச்சொல் வழக்கில் உள்ளது.

வரன்விலைக்கொடுமை: 'பெண்கட்குச் சொத்துரிமை கொடுத்தாற் கூட வரன்விலைக் கொடுமை மாறிவிடும் ......' (இலக்கியச்சாறு, ப. 14). வரன் + விலை + கொடுமை > வரன்விலைக்கொடுமை.

வல்லழுத்தம்: 'ஓர் அறத்துக்கோ நயத்துக்கோ முடிபுக்கோ வல்லழுத்தம் கொடுப்பதற்காக ...' (காப்பியப் பார்வை, ப. 160). வல் + அழுத்தம் > வல்லழுத்தம். (வலிமையாக).

வல்லியக்கம்: 'இவ் வல்லியக்கம் இலக்கண நூல்களையும் உரைகளையும் ...... தாக்காமல் விடுமா?' (தொல்காப்பியக் கடல், ப. 330). வல் + இயக்கம் > வல்லியக்கம். கொடிய இயக்கம் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. வல்வரவு, வல்லடி வழக்கு என்ற சொற்களை ஒப்பு நோக்குக.

Koviloor Digital Library

வல்லிலக்கியம்: 'பதிற்றுப்பத்து நல்லிலக்கியம் எனினும் ஒரு வல்லிலக்கியம் என்பது புலவர்களின் மதிப்பீடு'. (சங்க நெறி, ப. 141). வல் + இலக்கியம் + வல்லிலக்கியம். கடினமான என்ற பொருளில் அமைந்துள்ளது.

வல்லுணவு: 'தாய்மாருக்கும் வல்லுணவும் நன் மருந்தும் விலையின்றி...' (நெல்லிக்கனி, ப. 153). வல் + உணவு > வல்லுணவு.

வல்லுரை: 'வலிந்து செய்யப்படும் வல்லுரையன்று'. (தொல்காப்பியக்கடல், ப. 26). வல் + உரை > வல்லுரை.

வழிச்சீட்டு: 'மகப்பேற்றுக்கும் மேலுலகத்துக்கும் வழிச்சீட்டு இல்லை ...' (சாலிமைந்தன், முன்னுரை; ப. 28). வழி + சீட்டு > வழிச்சீட்டு. பயணச் சீட்டு என்ற சொல் வழக்கில் உள்ளது.

வழித்தடநூல்: 'கலைஞர் நாடகம் அதன் வழித்தட நூலாகவும் எனக்குத் தோன்றவில்லை'. (காப்பியப் பார்வை, ப. 218). வழி + தடம் + நூல் > வழித்தட நூல். வழிநூல் என்பதன் மேல்வளர்ச்சியாக இச் சொல்லைக் கருதலாம்.

வாதாடுகளம்: 'அவற்றின் பெருமையும் தாக்கமும் வாதாடுகளத்துக்கு உரியவையல்ல'. (திருக்குறட்சுடர், ப. 133). வாது + ஆடு + களம் (பெயர் + குறைவினை + பெயர் > பெயர். போர்க்களம் என்பதன் ஒப்புமையாக்கம்.

வாயொலிஞர்: 'இவர் வாயொலிஞரும் ஆவார்.' (தொல்காப்பியக்கடல், ப. 111). வாய் + ஒலி + ஞர் > வாயொலிஞர்.

வாழ்க்கைக் கேடி: 'வாழ்க்கைக் கேடியைத் தீண்டுகிறாரே ......' (ஒரு நொடியில், ப . 129). வாழ்க்கை + கேடு + இ > வாழ்க்கைக் கேடி.

Koviloor Digital Library

வாழ்விலி : 'இரண்டுங் கெட்ட வாழ்விலி நோக்கி...' (வள்ளுவம், ப. 108). வாழ்வு + இலி > வாழ்விலி.

வாழ்வுப்பிடி : 'தீயவை தீய பயக்கும் என்பது பலர்தம் வாய்ச் சொல்லேயன்றி வாழ்வுப்பிடி இல்லை...' (வள்ளுவம், ப. 299). வாழ்வு + பிடி > வாழ்வுப்பிடி.

விடுதலைப் பலிஞர்கள் : 'விடுதலைப் பலிஞர்கள் போல எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் எவ்வளவு காலம் மொழிப்புலியர்களாக இருக்க முடியும்?' (இலக்கியச்சாறு, ப. 5). விடுதலை+பலி+ஞர்கள்>விடுதலைப் பலிஞர்கள்.

வித்தணு : 'நினைவென்னும் வித்தணு இல்லாதபோது வினைவுண்டாகுமா? (திருக்குறட்சுடர், ப. 158). வித்து+ அணு > வித்தணு.

விழிப்புரை : 'அவற்றைச் செய்யுளுட் பாடுதல் பழியாகும் என்பது இரண்டாம் நூற்பாவின் விழிப்புரை'. (தொல் காப்பியக்கடல், ப. 216). விழிப்பு + உரை > விழிப்புரை.

விற்பனைக்குறி : 'மூன்று கோடிக்கு மேல் விற்பனைக்குறி இராது'. (இலக்கியச்சாறு, ப. 5). விற்பனை + குறி > விற்பனைக்குறி. Sales Target என்பதன் மொழியாக்கம். அருமையான சொல்லாக்கம்.

வினைக்களம் : 'ஊர் சுற்றுங்கால் தந்துறை வினைக் களங்களில் நுழைந்து ...' (வள்ளுவம், ப. 279). வினை + களம் > வினைக்களம். Office என்பதன் அருமையான மொழியாக்கமாக அலுவலகம் என்ற சொல் வழக்கில் உள்ளது.

வீதிக்கல் : 'காப்பியம் வீதிக்கற்போல ஆங்காங்கே நினைவூட்டிச் செல்கின்றது' (காப்பியப்பார்வை, ப. 152). வீதி + கல் > வீதிக்கல்.

Koviloor Digital Library

வீற்றிலக்கியங்கள்: 'இன்ன அறிவு கைவரப்பெற்றவன் புதிய வீற்றிலக்கியங்களைத் தோற்றுவிக்க முடியும். (காப்பியப்பார்வை, ப. 44). வீறு + இலக்கியங்கள் > வீற்றிலக்கியங்கள்.

வெண்சுருட்டு: 'வெண்சுருட்டு ஊதிக்கொண்டு...' (நெல்லிக்கனி, ப. 20). வெண்மை + சுருட்டு > வெண்சுருட்டு.

வெண்சுருள்: 'வெண்சுருளை நெருப்போடு வீசியெறிந்தேன்'. (ஒருநொடியில், ப. 155). வெண்மை + சுருள் > வெண்சுருள். Cigarette என்பதன் மொழியாக்கம்.

வேடப்புனைவு: '...வேடப்புனைவு, கிட்டியடிப்பு, பல்லாங்கிச்சு...' (நெல்லிக்கனி, ப. 188). வேடம் + புனைவு > வேடப்புனைவு.

வேண்டுரை: 'இவை என் வேண்டுரை.' (ஒருநொடியில், முன்னுரை) வேள் > வேண்டல் > வேண்டு + உரை > வேண்டுரை.

வேதமுடி: 'கன்னத்திண்டும் வேதமுடியும் வளர்ப்போர்...' (ஒருநொடியில், ப. 148). வேதம் + முடி > வேதமுடி. தாடி என்ற சொல் வழக்கில் உள்ளது.

Koviloor Digital Library

2.2 பெயர் + வினை > பெயர்

அடிப்படைவேண்டுகை: 'மக்கட்கு அடிப்படை வேண்டுகை உணவு உடை வீடு என்ற மூன்றுமே.' (காப்பியப் பார்வை, ப. 147; இரட்டைக் காப்பியங்கள், ப. 65). அடிப்படை + வேண்டு + கை > அடிப்படை வேண்டுகை. அடிப்படைத் தேவை என்ற சொல் வழக்கில் உள்ளது.

இசைபாடி: 'பொருளியல் இளங்கலைப்பட்டத்தவள்; இசை பாடி'. (ஒருநொடியில், ப. 48). இசை + பாடு + இ > இசைபாடி...'. பாடகி என்ற சொல் வழக்கில் உள்ளது.

இயற்கையொட்டி: '... இ ய ற் கை க யெ ா ட் டி இல்லை.' (திருக்குறட்சுடர், ப. 20). இயற்கை + ஒட்டு + இ > இயற்கையொட்டி. இயற்கையையொட்டி வாழ்பவன் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

இயற்கைவிலகி: 'இயற்கை விலகியாக வளர்ந்துகொண்டே அகல்கிறான்.' (திருக்குறட்சுடர், ப. 20). இயற்கை + விலகு + இ > இயற்கைவிலகி.

இருட்படை: 'தம் கருத்துக்களை இருட்படை செய்யாமல் ஒளிப்படுத்தி நிற்கின்றனர்'. (திருக்குறட்சுடர், ப. 67). இருள் + படு + ஐ > இருட்படை. படு என்பதைத் துணைவினையாகக் கொள்வதை விட இருட்படு என்ற கூட்டு வினையடியுடன் ஐ விகுதி சேர்ந்து உருவானது என்பதே பொருத்தமானது. பிறவினைப் பொருளில் தன்வினை அமைப்பைக் கையாண்டுள்ளார். பொருத்தம் ஆய்விற்குரியது.

Koviloor Digital Library

இலக்கியப் படைஞர்: '...பண்பும் பகுத்தறிவும் இலக்கியப் படைஞர்களுக்குத் தேவை என்பதனை...'(தொல்காப்பியக் கடல், ப. 81). இலக்கியம் + படை.(த்தல்) + ஞர் > இலக்கியப் படைஞர்.

இலக்கியமேலோடிகள்: 'நகையாடக் கூடும் இலக்கிய மேலோடிகள்...' (திருக்குறட்சுடர், ப. 34). இலக்கியம் + மேலோடு + இ > இலக்கிய மேலோடிகள். இலக்கியத்தை மேலோட்டமாகப் படிப்பவர்களைச் சுட்ட மிகப் பொருத்தமான சொல். அருமையான சொல்லாக்கம்.

இளமுருகிகள்: 'மனைவிக் கனவே காண முடியாதிருக்கின்ற இளமுருகிகள் எவ்வளவு...' (ஒருநொடியில், ப. 71). இளமை+முருகு+இ>இளமுருகி. இளமை முதிர்ந்தவர்கள் என்பது பொருள்.

உயிர்க்காப்புக்கழகம்: 'உயிர்க்காப்புக் கழகத்தில் எழுத்தர் பணிபுரிபவன்...' (ஒருநொடியில், ப. 148; உப்பங்கழியில், ப. 163). உயிர் + காப்பு + கழகம் > உயிர்க்காப்புக்கழகம் (பெயர் + வினை + பெயர்). ஆயுட் காப்புக்கழகம் என்ற கலப்புச்சொல் வழக்கில் உள்ளது.

உயிரழித்தி: 'எண்ணச்சுமை.......உயிரழித்தி'. (நெல்லிக்கனி, ப. 78). உயிர் + அழி + த்தி > உயிரழித்தி.

உருமாறி: 'மருவிய உருமாறிகட்கு இலக்கண வீறு கொடுத்தால்...' (தொல்காப்பியக்கடல், ப. 142). உரு + மாறு + இ > உருமாறி.

உரைக்குறுக்கு: 'உரைக்குறுக்கின்றி ஆசான் உள்ளத்தே மாணவரை நேர்காண விடுவதே முறை'. (தொல்காப்பியக் கடல், ப. 22). உரை+குறுக்கு > உரைக்குறுக்கு. குறுக்கீடு என்ற பொருளில் வந்துள்ளது. இதன் பொருட்பொருத்தம்

Koviloor Digital Library

ஆய்விற்குரியது. பின்வரும் 'நேர்காண விடுவதே' என்ற சொல் இல்லையேல் பொருள் விளங்காது. உரையைக் குறுக்குதல் என்ற பொருளையும் தரும்.

உரைமூடிகள்: 'உரைத் திரைகள் அல்லது உரைமூடிகள்.' (திருக்குறட்சுடர், ப. 14). உரை + மூடு + இ + கள் > உரை மூடிகள். புதுப்புதுச் சொற்களைப் படைப்பதில் பேராசிரியர்க்குள்ள பற்றுதல், அல்லது என்று குறிப்பிட்டுக்கூறும் இது போன்ற சொற்களால் நன்கு புலனாகிறது எனலாம்.

ஒடேந்தி: 'கோயில்களில்...ஒடேந்திகளைக் காணுங்கால்...' (வள்ளுவம், ப. 139). ஒடு + ஏந்து + இ > ஒடேந்தி. புகழேந்தி என்பது போல.

கருத்துச்சொல்லி: 'தன் கருத்துச் சொல்லியாக யாரையும் பாத்திரப்படுத்துவது தானே ...' (காப்பியப்பார்வை, ப. 230; ஒப்பியல் நோக்கு. ப. 47). கருத்து+சொல்லு + இ > கருத்துச் சொல்லி.

கல்வி வரைவார்: 'கல்வி வரைவார்க்குப் பிறநாட்டு ஆய்வொடு தன்னாட்டு ஆய்வுத்திறமும் இன்றியமையாதது'. (வள்ளுவம், ப. 186). கல்வி + வரைதல் > கல்விவரைவார்.

கற்பறியாக் கலைச்சி: 'இவள் கவர்ச்சியறியாப் பேதை என்று கற்பறியாக் கலைச்சியை நாடிவிட்டார் போலும்'. (ஒரு நொடியில், ப. 72). கற்பு + அறியா + கலை + ச்சி > கற்பறியாக் கலைச்சி (பெயர் + குறைவினை + பெயர் + விகுதி)

கைச்சிறுத்திணைப்படம்: 'அகலிருஞாலத்தை அறிவான் கைச்சிறு திணைப்படமும்...' (வள்ளுவம், ப. 323). கை + சிறு + திணைப்படம் > கைச்சிறு திணைப்படம். World map என்பதன் தமிழாக்கம்.

Koviloor Digital Library

கைவரை மனைப்படம்: 'பெருங்கட்டடத்தைக் காண்பான் கைவரை மனைப்படமும் ......' (வள்ளுவம், ப. 323). கை + வரை + மனைப்படம் > கைவரை மனைப்படம்.

செய்திக்குறிக்குநர்: (உப்பங்கழி, ப. 62). செய்தி + குறி > செய்திக் குறிக்குநர். News reporter என்பதன் மொழியாக்கம். நிருபர் என்ற கலப்புச்சொல் வழக்கில் உள்ளது.

செயலுய்ப்பு: 'இவ்வனைய குறள்கள் செயலுய்ப்பு நடையன'. (வள்ளுவம், ப. 304). செயல் + உய்த்தல் > செயலுய்ப்பு.

தாமேயுண்ணிகள்: '...கேட்பித்தாலும் கற்பித்தாலும் தாமேயுண்ணிகள் திருந்தார்'. (வள்ளுவம், ப. 99). தாம்+ஏ+உண்+இ+கள் > தாமேயுண்ணிகள்'. (பெயர்+ சாரியை + வினையடி + விகுதி > பெயர்.

தொல்காப்பிய நீந்திகள்: 'இலக்கண நூலாசிரியர்களும் தொல்காப்பிய நீந்திகள் என்பது வெளிப்படை'. (தொல்காப்பியக்கடல் ப. 17). தொல்காப்பியம்+நீந்து+ இ + கள் > தொல்காப்பிய நீந்திகள்.

நேர்மைதவறி: 'பொதுத் தண்ணீர் நேர்மை தவறிகட்கு வெந்நீராக மாறிவிடும்'. (திருக்குறட்சுடர், ப. 42). நேர்மை + தவறு + இ > நேர்மை தவறி.

பந்தடிப்பிகள்: 'பரிசுகள்...பந்தடிப்பிகள்'. (நெல்லிக்கனி, ப 218). பந்து+அடி > பந்தடிப்பிகள்.

பல்லுரசி: 'பல்லுரசி மற்றொருவர் தேய்க்க நீட்டுவதில்லை'. (ஒரு நொடியில், ப. 56). பல் + உரசு இ + > பல்லுரசி. இச்சொல் Brush என்பதன் மொழியாக்கம்.

Koviloor Digital Library

புகையூதி: (உப்பங்கழியில், ப. 43). புகை + ஊது + இ + கள் > புகையூதிகள்.

பையூட்டு: 'கையூட்டுப் பையூட்டுப் பெறினும்...' (வள்ளுவம், ப. 89). பை + ஊட்டு > பையூட்டு. (பெயர் + குறைவினை). எதுகை, மோனை ஈடுபாட்டால் உருவான சொல் எனலாம்.

மணிகாட்டி: 'மணிகாட்டியின் பெரியமுள் இயங்காது'. (நெல்லிக்கனி, ப. 150). மணி+காட்டு+இ > மணிகாட்டி.

வளிதாங்கி: 'எச்சரிக்கை வளிதாங்கிகளையும்...' (திருக்குறட்சுடர், ப. 147). வளி + தாங்கு + இ > வளிதாங்கி.

வாயுறிஞ்சி: 'குழந்தைக்கு வாயுறிஞ்சியைச் சப்பும்படி செய்தாள்'. (ஒருநொடியில், ப. 129). வாய் + உறிஞ்சு + இ > வாயுறிஞ்சி.

வாழ்வுநோக்கி: 'உரம்பெற்று மலைபுரட்டும் முயற்சி கோடல் வாழ்வுநோக்கியின் துணிபு'. (வள்ளுவம், ப. 92). வாழ்வு + நோக்கு + இ > வாழ்வு நோக்கி.

வாழ்வுமுடங்கி: 'பாலைநிலக் குறும்புதர் போல வாழ்வு முடங்கியாக இருந்து மடிவான்.' (திருக்குறட்சுடர், ப. 24). வாழ்வு + முடங்கு + இ > வாழ்வுமுடங்கி.

Koviloor Digital Library

2:3 வினை + பெயர் > பெயர்

ஆடரங்கம்: 'ஆடரங்கம் அறிவரங்கம் ...... நடத்தலாம்'. (நெல்லிக்கனி, ப. 162). ஆடு + அரங்கம் > ஆடரங்கம்.

ஆடுபொருள்: 'அக்குழந்தைகளுக்கு நிறைய ஆடுபொருள் வாங்கிச் செல்ல வேணடும்'. (சிந்தனைக்களங்கள், ப. 433). ஆடு + பொருள் > ஆடுபொருள்.

உருளடி: 'உன் உருளடி பட வேண்டும் என்று துடித்து உன் தடத்தில் தலைசாய்த்து ......' (ஒரு நொடியில், ப. 13). உருள் + அடி > உருளடி.

உறிஞ்சுதரை:- 'அறிவு உறிஞ்சுதரை போல நிறை காண முடியாக் குறையுடையதாகவே இருக்கும்'. (திருக்குறட்சுடர், ப. 44). உறிஞ்சு + தரை > உறிஞ்சுதரை.,

எழுதுகையர்: 'உறுதியும் பயில்வும் இல்லா எழுதுகையர் குறைபாடு என்று உணர்வதே மெய்யுணர்வு'. (திருக்குறட்சுடர், ப. x) எழுது + கை + அர் > எழுதுகையர். 'சாத்தன் கையெழுதுமாறு வல்லன்' என்ற இலக்கண எடுத்துக்காட்டின் ஆளுமையால் உருவான சொல் எனக்கருதலாம். எழுத்தாளர் என்றசொல் வழக்கில் உள்ளது. எழுத்துத்திறன் இல்லாதவர்களை அச்சொல்லால் குறப்பிடுவது பொருத்தமில்லை என்பதால் ஆக்கப் பட்டிருக்கலாம்.

கட்டுத்தொகை: 'தேர்தலில் நின்று கட்டுத் தொகை இழக்கும் வேட்பாளர்கள் உயிர்விட்டாக வேண்டுமே'. (ஒருநொடியில், ப. 108). கட்டு + தொகை > கட்டுத் தொகை. Deposit என்பதன் மொழியாக்கம். தேவையை நிரப்ப உருவான சொல்.

Koviloor Digital Library

கட்டுத்தொடர்பு: 'பாடினார் என்ற கட்டுத்தொடர்பு தவிர.. சுட்டுத்தொடர்பு பொருத்தி...' (சங்கநெறி, ப. 7). கட்டு+ தொடர்பு + கட்டுத்தொடர்பு. (குறைவினை + பெயர் > பெயர்).

கொடாநோன்பி: 'இக்கொடா நோன்பிகளுக்கு, கயவர் என்று பெயர் பூட்டினர்'. (வள்ளுவம், ப. 99). கொடா+ நோன்பு + இ > கொடாநோன்பி. (எதிர்மறைவினை + பெயர் + விகுதி > பெயர்).

சாய்காலி: 'நான் சாய்காலியில் நடுங்கிக் கிடப்பதைப் பார்த்து...'. (ஒருநொடியில், ப. 129). சாய் + கால்+இ> சாய்காலி. (குறைவினை + பெயர் + விகுதி > பெயர்). Easychair என்பதன் மொழியாக்கம்.

செய்துணிக்கடை: 'செய்துணிக் கடையில் அளவுப்பல சட்டைகள் இருந்தாலும்...'. (திருக்குறட்சுடர், ப. 48). செய்+துணி+கடை > செய்துணிக்கடை. (வினையடி + பெயர் + பெயர் > பெயர்) ஆயத்த ஆடையகம் என்ற சொல்லும் சிலரால் ஆக்கப்பட்டுள்ளது.

செல்லுரிமை: 'இவ் வடக்கி இல்லா ஊர்திகளுக்குச் செல்லுரிமை அரசு வழங்காது'. (வள்ளுவம், ப. 205). செல்+உரிமை > செல்லுரிமை. (குறைவினை + பெயர் > பெயர்) License என்பதன் மொழியாக்கம்.

செல்மதிப்பு: 'ஓர் அரசுக்கு இளக்காரமில்லாத ஏற்றமும் ஒத்த செல்மதிப்பும்...' (திருக்குறட்சுடர், ப. 144). செல் + மதிப்பு> செல்மதிப்பு. (குறைவினை + பெயர் > பெயர்).

திணிசாக்கு: 'பிற்காலச் சூத்திரங்கள் திணிசாக்குப் போல' (தொல்காப்பியக்கடல், ப. 315). திணி + சாக்கு > திணிசாக்கு.

Koviloor Digital Library

தையஞ்சல்: 'ஒரு தையஞ்சல் வந்தது'. (நெல்லிக்கனி, ப. 23). தை + அஞ்சல் > தையஞ்சல்.

நுண்ணடுபடை: 'அதிக வளவில் நுண்ணடுபடைகளையும் ...'. (திருக்குறட்சுடர், ப. 147). நுண்மை + அடு + படை > நுண்ணடுபடை. (பண்படி + வினையடி + பெயர் > பெயர்).

பயிலறிவு: 'அறுபதாண்டு பழுத்த பயிலறிவு கதிர்மணி விளக்கத்தில்...'(இலக்கியச்சாறு, ப. 86; காப்பியப்பார்வை, ப. 27). பயில் + அறிவு > பயிலறிவு.

பறைநூல்: 'மணிமேகலை ஒரு பறைநூல்.' (இரட்டைக் காப்பியங்கள், ப. 65). பறை + நூல் > பறைநூல்.

பறைவுப்பாடல்: 'தேவாரம்... சைவத்தை நிலைநாட்ட வந்த பறைவுப்பாடல்'. (இலக்கியச்சாறு, ப . 62). பறை + வு+ பாடல்> பறைவுப்பாடல்.

புணர்த்த பதிப்பு: 'கல்வி நிலையங்களிற்கூடப் புணர்த்த பதிப்புக்கள் இல்லை'. (இரட்டைக்காப்பியங்கள், ப. 73).

புரநடை: 'அவை புறநடையல்ல. மொழியைத் தடை செய்யாது காக்கும் புரநடை என்று மதிக்கவேண்டும்'. (தொல்காப்பியக்கடல், ப. 18). புர + நடை > புரநடை.

மடிநாள்: 'ஈர்ப்புத் தன்மையை என்று இழந்ததோ அன்று அதன் மடிநாள்'. (காப்பியப் பார்வை, ப. 130). மடி + நாள் > மடிநாள்.

மறிக்கோடுகள்: 'மறிக்கோடுகளும் கைகாட்டிகளும் நிறவிளக்குகளும் எவ்வளவு உள்ளன?' (தொல்காப்பியப் புதுமை, ப. 153). மறி + கோடுகள் > மறிக்கோடுகள்.

Koviloor Digital Library

மாற்றுடைமை: 'அறிவு என்ற நிலையுடைமை இல்லாதவர் வறியவரே என்று மாற்றுடைமை சுட்டுவர்'. (திருக்குறட்சுடர், ப. 24). மாறு + மாற்று > உடைமை > மாற்றுடைமை.

விடுசெலவு: 'பொருளஞ்சல் வழிப் பணம் போக்கினால் விடுசெலவு வருமே'. (வள்ளுவம், ப. 17). விடும் + செலவு > விடுசெலவு.

விடுவரி: 'அதன் விடுவரியைப் பார்த்தேன்'. (நெல்லிக்கனி, ப. 60). அனுப்புநர் முகவரி என்ற பொருளில் வந்துள்ளது. விடு + வரி > விடுவரி.

விலகல்முடங்கல்: '......விலகல் முடங்கலை உடன்குத்தி அப் பணியாளனிடம் திருப்பி விட்டிருக்கலாம்'. (ஒரு நொடியில், ப. 111; பக். 117). விலகல் + முடங்கல் > விலகல்முடங்கல்.

2.4 வினை + வினை > பெயர்

ஆய்முனை: 'ஆராய்ச்சி தொடர்ச்சியின்றி அறுபடவும் ஆய்முனை மழுங்கவும் காண்கிறோம்'. (சிந்தனைக் களங்கள், ப. 379). ஆய் + முனை > ஆய்முனை.

வேற்றீடு : 'வேற்றீட்டையும் உள்ளடக்கியது ஒப்பீடு'. (ஒப்பியல் இலக்கியம் — முன்னுரை). வேறு + இடு > வேற்றிடு + ஐ + உம் > வேற்றீட்டையும், (குறிப்புவினை + வினை + விகுதி).

Koviloor Digital Library

2.5 வினையடி + பெயர் > பெயர்

அறக்கீழ்: 'முற்றும் மேலாக அல்லது அறக்கீழாகச் சொன்னாற்றான்.' (வள்ளுவம், ப. 304). அற + கீழ் > அறக்கீழ்.

அறக்குருடு: 'சமுதாயம் முழுச்செவிடாயிற்று. அறக் குருடாயிற்று.' (நெல்லிக்கனி, ப. 100). அற + குருடு > அறக்குருடு.

அறப்பிழை: 'இறைவினை என ஒரு தனித் தொகுதி கோடல் அறப்பிழை.' (வள்ளுவம், ப. 326; ப. 180). அற + பிழை > அறப்பிழை.

2.5.1 பண்படி + பெயர் > பெயர்

அல்உலகியல்: 'கதைக்கோப்பு அல்லுலகியல் என்று குற்றஞ்சொல்லாதவாறு ......' (சாலிமைந்தன்-முன்னுரை; ப. 26, ஆசிரியர் ஆ. பழநி). அல்+உலகியல்>அல்உலகியல். ஒப்பு நோக்குக. அல்திணை. தேவையின் பொருட்டு உருவானசொல்.

அல்சங்கநடை: 'அல்சங்கநடைகளும் சிலப்பதிகாரத்தில் ......நிரம்பவுள.' (காப்பியப்பார்வை, ப. 182). அல் + சங்கநடை > அல்சங்கநடை.

Koviloor Digital Library

அல்தமிழர்: 'ஒவ்வாக் கருத்துடையாரை அல்தமிழர் ......' (சிந்தனைக்களங்கள், ப. 409). அல்+தமிழர் > அல்தமிழர்.

அல்நாகரிகம்: 'அழகுப்போட்டி பெரும் அல்நாகரிகப் போட்டி.' (நெல்லிக்கனி, ப. 160). அல் + நாகரிகம் > அல்நாகரிகம்.

அல்நெறி: '... கூறுவாரை வேறுபடுத்தும் அல்நெறி ......' (சிந்தனைக்களங்கள், ப. 408). அல் + நெறி > அல்நெறி.

2:6 பெயரடை + பெயர் > பெயர்

இரு பேரொலிஞர்: 'தொல்காப்பியர் மொழியொலிஞர்... வாயொலிஞரும் ஆவார் ... இத்தகைய இருபேரொலிஞர் இயற்றிய...' (தொல்காப்பியக்கடல், ப. 111). இரு + பேரொலி + ஞர் > இருபேரொலிஞர்.

உயர்செருப்பு: '...மின்னுடைகட்டி உயர் செருப்பில் குதித்துத் குதித்து நடவா நடை நடக்கும்'. (ஒருநொடியில், ப. 41). உயர் + செருப்பு > உயர்செருப்பு.

சில்லரசு: 'சில்லரசுகளுள் ஒன்றாகத்தான் ...கருதுகின்றன'. (திருக்குறட்சுடர், ப. 144). சிறிய + அரசு > சில்லரசு.

பெருமொழி: 'உணர்ச்சியால் உந்தப்பட்டுக் கண்டவாறு பெருமொழி தூற்றுகிறான்'. (வள்ளுவம், ப. 369). பெரு + மொழி > பெருமொழி.

Koviloor Digital Library

பெருமோதுகை: 'தலைமைப் பாத்திரங்களைப் பெரு மோதுகையின்றிப் பார்த்துக் கொள்கிறான்' (கம்பர் ப. 65). (பெரிய) பெரு + மோதுகை > பெருமோதுகை.

மறுகாலி: 'திரை சென்றால் ... மறுகாலியில் நான் இருப்பேன்' (ஒருநொடியில், ப. 151). மறு + கால் + இ> மறுகாலி.

2:7 பெயர் + வினை > வினை

கம்பிப்படுத்தி: 'மின்சாராற்றலைக் கம்பிப்படுத்தி ஒளி பெறுகின்றோம்'. (சங்கநெறி, ப. 10). கம்பி + படுத்து + இ > கம்பிப்படுத்தி. தேவையை நிரப்ப உருவான சொல். கம்பியின் கண்செலுத்தி என்ற பொருளில் கையாளப் பட்டுள்ளது. இதன் பொருத்தப்பாடு ஆய்விற்குரியது.

காதலாடுகிறேன்: 'அவளைக் காதலாடுகிறேன் என்று தெரிந்தும்....' (ஒரு நொடியில், ப. 151). காதல் + ஆடுகிறேன்> காதலிக்கிறேன் என்ற பொருளில் கையாளப் பட்டுள்ளது.

சுடுசொல்லுவேன்: 'வன்கண்மையாகச் சுடுசொல்லுவேன் ...'. (ஒருநொடியில், ப. 92). சுடுசொல் + சொல்லுவேன் > சுடுசொல்லுவேன். ஆய்விற்குரியது.

திரைப்படுவது: 'தொலைக்காட்சியில் மீண்டும் திரைப்படுவதை மக்கள் ஆவலோடு களிக்கின்றார்கள் அல்லவா?' (இலக்கியச்சாறு, ப. 17). திரை + படுவது > திரைப்படுவது.

Koviloor Digital Library

பரிசிலிடுவர்: 'எச்சொற் கொடுத்து எக்குறிப்புக் கொடுத்து வினவினும் குறள் சொல்ல வல்லேம் எனப் பரிசிலிடுவர் ஒருசாரார்.' (வள்ளுவம், ப. 154). பரிசில் + இடுவர் > பரிசிலிடுவர்.

பலிப்படுகின்றாள்: 'அரக்கர் அழிவுக்குக் கைகேயி பலிப் படுகின்றாள்.' (கம்பர், ப. 70). பலி + படு + கின்று + ஆள் > பலிப்படுகின்றாள்.' (பெயர் + குறைவினை + இடைநிலை + விகுதி) பலியாகின்றாள் என்ற சொல் வழக்கில் உள்ளது.

வானம் படுகின்றது: 'எழுத்துவழக்கு விரைவில் பொது வழக்காக வானம் படுகின்றது'. (தொல்காப்பியக்கடல், ப. 102) வானம் + படுகின்றது > வானம்படுகின்றது.

2:8 வினை + வினை > வினை

எதிராட: 'நான் எதிராட முன்னிற்கவில்லை.' (தொல் காப்பியக்கடல், ப. 207). எதிர் + ஆட > எதிராட.

விலக்குண்ண: 'ஒருவர் சொல்வதனால் ஏனையோரை விலக்குண்ண வேண்டும் என்பதில்லை.' (தொல்காப்பியக் கடல், ப. 170). விலக்கு + உண்ண > விலக்குண்ண.

Koviloor Digital Library

சொற்பட்டி

அ

அட்டவணைப்பர்
அடக்கி
அடிப்படை வேண்டுகை
அணியநாடு
அணுக்குவியல்
அமர்கை
அயன்மை
அரக்கம்
அரசாழி
அரசியம்
அல்உலகியல்
அல்சங்கநடை
அல்தமிழர்
அல்நாகரிகம்
அல்நெறி
அலுவற்களப்பெண்
அவைய இலக்கியம்
அவையப்பாடல்கள்
அழிப்பியம்
அழுக்கறுப்பான்கள்
அறக்கற்பி
அறக்கீழ்
அறக்குருடு
அறப்பிழை
அறப்பெண்கள்
அறமன்றம்
அறிவேடியர்
அறிவுக்களரி
அறிவுநாடிகள்
அன்பி

ஆ

ஆங்கிலர்
ஆட்சான்றுகள்
ஆட்சியாளி
ஆடரங்கம்
ஆடுபொருள்
ஆணவி
ஆய்ஞர்
ஆய்முனை
ஆய்வுடைநூல்
ஆள்கட்சி

இ

இசையிருக்கை
இசைஞர்
இசைபாடி
இடிப்பறிஞர்

Koviloor Digital Library

இடைக்காலோர்
இணைநோக்கம்
இந்தியஒதுக்கியம்
இயற்கையொட்டி
இயற்கைவிலகி
இருட்படை
இருட்புகழ்
இருபேரொலிஞர்
இருமதிவணிகம்
இருமைப்பாடு
இல்லறஉறுப்பி
இல்லறக்கொலைச்சி
இல்லாளி
இலக்கணநெறிஞர்கள்
இலக்கணப் படைப்பி
இலக்கணர்
இலக்கணி
இலக்கணித்தனர்
இலக்கியக்கண்ணோடிகள்
இலக்கியப் படிப்பி
இலக்கியப் படைஞர்
இலக்கியப் படைப்பி
இலக்கிய மேலோடி
இலக்கியர்
இலக்கியல்
இழிஞன்
இழுக்கி
இளங்கோவம்
இளமுருகிகள்
இளிமை.
இளைஞி
இன்பி
இன்மைக்கோளிகள்

ஈ

ஈகம்
ஈகி
ஈடுபாடன்

உ

உடைமை முறிகள்
உடலறையாளர்
உடற்கழகம்
உண்டிச்சாலை
உணர்ச்சிக்கொல்லி
உணர்ச்சிப்பிண்டர்
உணவுச்சாலையாளர்
உத்தியங்கள்
உயர்செருப்பு
உயிரழித்தி
உயிர்க்காப்புக்கழகம்
உயிராயத்தொண்டு
உயிரிகள்
உருளடி
உருமாறி
உரையாசிரியங்கள்

Koviloor Digital Library

உரையாளி
உரைக்கிளை
உரைக்குறுக்கு
உரைத்திரைகள்
உரைநிறை
உரைப்பழி
உரைப்பிசிர்
உரைப்புரை
உரைமருள்
உரைமுடி
உரைவிளக்கிகள்
உலகந்தாங்கி
உலகாயம்
உள்ளக்காவலி
உறிஞ்சி
உறிஞ்சுதரை
உறுப்பரசு
உறுப்பி
உறுப்பிலி

ஊ

ஊடல்முடக்கு
ஊராயத்தொண்டு

எ

எடுப்படிகள்
எதிரர்
எதிராட
எழுத்தாண்மையர்
எழுத்தாள்வார்கள்
எழுத்தாளி
எழுத்தாளுநர்
எழுத்துத் திருத்தி
எழுதுகையர்
எழுத்து வல்லுநர்

ஏ

ஏசுபெருமாட்டி

ஒ

ஒப்பறிவு
ஒப்பாயம்
ஒப்பாரிக்கும்
ஒப்பாளர்
ஒப்பியம்
ஒலிக்கற்பு
ஒலிஞர்
ஒலிப்பாடு
ஒலிப்பான்
ஒழுக்கக்குறைவி
ஒழுக்கத்தி

Koviloor Digital Library

ஓ

ஓடேந்தி

க

கட்டுத்தொகை
கட்டுத்தொடர்பு
கண்ணதாசம்
கணவபதவி
கதைஞன்
கதைதிருத்தி
கம்பனியம்
கம்பிப்படுத்தி
கயத்தந்தை
கயத்தி
கருத்தகம்
கருத்துச்சொல்லி
கல்வித்திட்டர்கள்
கல்வியன்
கல்விவகுப்பி
கல்விவரைவார்
கலைப்பொறி
கழிச்சி
கழியன்
கழிவூதியம்
கழுத்தி
கற்பறியாக்கலைச்சி
கற்பி
கற்பி•
கற்பிலி
கற்புக்கேடி
கற்புச்சாவி
கற்புடையாட்டி.
கற்புப்பதடி
கன்றியவர்
கன்னத்திண்டு
கனத்தி
காதலாடுகிறேன்
காதலியம்
காலஅடைப்பான்
காலவளைவு
குடிஞர்
குடியாள்
குடும்பக்கடமி
குடும்பி
குடும்பியல்
குதிமிதி
குமரமை
குமரிக்கொள்ளிகள்
குழுமநலம்
குழுவாயம்
குளிரகம்
குற்றக்காசுக்கணக்கு
குறிக்கோளி
குறைப்பு
குறையறவுகள்
கூத்துத்தாள்

Koviloor Digital Library

கூலிவழக்காடி
கைச்சிறுத்திணைப்படம்
கையேடு
கைந்நாழி
கைவரைமனைப்படம்
கொடாநோன்பி
கொடுபோக்கு
கொடைஞன்
கொல்லறிவு
கொளைவன்
கொலைவன்
கோடியன்
கோலத்தி
கோளாளர்
கோவலி

ச

சங்கமை
சமவியம்
சமன்மை
சமனியம்
சாய்காலி
சால்பியம்
சாவுநோக்கி
சான்றுச் சுருள்
சிட்டை அரசுகள்
சிமிந்திருக்கை
சில்லரசு
சில்லாண்டு
சிறுமுதுநூல்கள்
சீர்திருத்தி
சீர்திருந்தி
சுடுசொல்லுவேன்
சுரங்கநூல்
சுவைநீர்
சுழல்வேகம்
சுழிநிலை
செந்தெளிவு
செம்பொய்யன்
செய்திக்குறிக்குநர்
செய்தித்தாள் குறிப்பாளர்
செய்து கொடுப்பி
செய்துணிக்கடை
செயலி
செயலுய்ப்பு
செல்லுரிமை
செல்கை
செல்மதிப்பு
சைவச்சி
சொல்லாக்கிகள்
சொல்லாற்றுவேன்
சொற்பொழிந்தேன்
சோற்றுச்சுரபி

த

தகவலியங்கள்
தகவற்கரணங்கள்
தங்கத்தாள்
தட்டெழுத்தி

Koviloor Digital Library

தடிமை
தடுப்பொளி
தடைவழக்கு
தந்திப்பேன்
தமிழ்மை
தமிழமுக்கம்
தமிழாயம்
தமிழ்க்கோள்
தமிழ்ப்பட்டத்தி
தமிழ்ப் போலியன்
தமிழ் வளர்ப்பிகள்
தலைப்பகுதிகள்
தவத்தி
தலையரசு
தலையுரை
தற்கிழமைத்திறம்
தற்கொலைஞன்
தற்பெரியான்
தற்பெருமையாடலாம்
தன்னேய்ப்பு
தனிஇழைத்தாள்
தனித் தமிழ்க் கோளிகள்
தனி மருத்துவ நிலையம்
தனியகாலம்
தாமேயுண்ணிகள்
தாள்விற்பி
திணிசாக்கு
திரையகம்
திரையார்
திரையுத்தி
திரைஞர்
திரைப்படுவது
துணைச்செயலி
துறத்தி
துறவன்
துறவாட்டி
தெருவூதி
தேசியவுணர்விலி
தேர்ச்சிக் கடப்பு
தேர்வுரியோர்
தேர்வுப்பயிற்சிப்பள்ளி
தையஞ்சல்
தொகைப்பாடு
தொடுப்புரை
தொண்டி
தொல்காப்பிய நீந்திகள்
தொல்லிது
தொழில் முதல்வோன்

ந

நடப்பியம்
நடிகச்சி
நடுவன்
நடைப்பிணிப்பு
நடைமுறைக் கண்ணாளர்
நடையாளி
நண்பி
நம்பிக்கைக் கேடி
நன்றியம்
நன்றியன்

Koviloor Digital Library

நாட்டுக்கேடி
நாணயக்கேடி
நிகழர்
நிகழியம்
நிலைத்தலைவி
நிலையறம்
நிலையியம்
நிலையிலிகள்
நிலைநாடி
நிலைமகள்
நிலைமகன்

நிற்பு
நிறவிளக்குகள்
நீர்க்கோள்
நுண்ணாடுபடை
நுரைப்பான்
நூலவன்
நூலறை
நூலான்
நெறிமை
நெறியம்
நேர்மைதவறி

ப

பட்டத்தி
பட்டப்படிப்பிகள்
படைஞர்
படைப்பியம்
படைப்பிலக்கியர்
பண்பர்
பணத்தூதகம்
பணித்தலைவர்
பணிப்பு
பணிவன்
பதிப்பளிப்பு
பதிப்பாடை
பதிப்புப் பொறுப்பர்
பதிவிலக்கியங்கள்
பந்தடிப்பிகள்
பயில்வு
பயிலறிவு
பயிற்சிகொட்டிகள்

பரதநடிகை
பரிசிலிடுவர்
பரிந்துரைமுகம்
பருமன்
பருவத்தி
பல்லுரசி
பல்வேறு போக்கர்கள்
பலிக்கொடையாளர்
பலிப்படுகின்றாள்
பழமொழிகின்றோம்
பழவழக்கு
பறிஞன்
பறைப்பு
பறைஞன்
பறைநூல்
பறைவுப்பாடல்
பாட்டாளி
பாட்டுமை

Koviloor Digital Library

பாடப்போலிநூல்கள்
பாடம்அமைப்பிகள்
பாரதர்
பாரதீயம்
பாலிணைவு
பிச்சையர்
பிடிவாதி
பிறப்பேடுகள்
புகையூதி
புடவைக்கிழார்
புண்ணேடு
புணர்த்த பதிப்பு
புதினர்
புரட்சியம்
புரநடை
புராணிப்பார்கள்
புருடியம்
புரையோடிகள்
புரைத்திறன்
புலமைக்கிளிகள்
புலமை மதுகை
புலமையமனம்
புழங்கிகள்
புழற்கவிதை
பூசையாட்டி
பூசைமகள்
பூதமுரண்கள்
பூவணிகி
பெருமொழி
பெருமோதுகை
பெற்றோரிலி
பேராசிரியம்
பேற்றறை
பேறுவிடுதி
பையூட்டு
பைஞ்ஞிலம்
பொதுவாயம்
பொதுவியம்
பொருளஞ்சல்
பொருளடைவு
பொருளன்
பொன்னாண்டு

ம

மக்களவைப் பொருளமைச்சர்
மக்களியம்
மட்காப்பு
மடத்தி
மடிநாள்
மணிகாட்டி
மரபுக்கால்
மரபுமறைவுகள்
மழலும்
மறக்கற்பி
மறந்தாங்கி
மறிக்கோடுகள்
மறுகாலி
மறைப்பு

Koviloor Digital Library

மன்னாயம்
மன்பதைக்காட்டி
மனக்கூறு
மனப்படிகள்
மனமை
மனிதம்
மனைவிவிலக்கு
மாட்டி
மாற்றாளிகள்
மாற்றுடைமை
மாறுவேடி
மானத்தி
முகஅலகு
முகமா
முத்திரைக்கூடு
முத்தினாள்
முதலெடுப்பு
முதற்காலி
முதிஞர்
முயற்சிக்கொல்லி
முரண்பால்நோய்
முறைக்கவிதை
மெய்த்தாள்
மெய்ப்பொறி
மெலிக்காது
மேலவர்கள்
மேலாள்
மைப்பால்
மொழியியம்
மொழியொலிஞர்
மொழிஞர்
மொழிப்பரத்தமை
மொழிப்பலியர்கள்
மொழிபெயர்ப்பி
மொழிமுதலி

வ

வரவுப்பரிசு
வரவுப்புலவர்
வரன் காணிக்கை
வரன் விலைக்கொடுமை
வல்லமுத்தம்
வல்வி
வல்லாதபடி
வல்லியக்கம்
வல்லிலக்கியம்
வல்லுணவு
வல்லுரை
வள்ளுவம்
வளிதாங்கி
வழங்கி
வழிச்சீட்டு
வழித்தட நூல்
வற்றியம்
வாணிகி
வாதாடுகளம்
வாதீடு
வாயுறிஞ்சி
வாயொலிஞர்

Koviloor Digital Library

வாழ்க்கைக் கேடி
வாழ்வியம்
வாழ்விலி
வாழ்வுநோக்கி
வாழ்வுப்பிடி
வாழ்வு முடங்கி
வானம் படுகின்றது
வானொலிக்கின்றேன்
வானொலிப்பு
விடு செலவு
விடுதலைப்பலிஞர்கள்
விடுவரி
வித்தனு
விலக்குண்ண
விலகல்
விளங்கி
விளம்பரத்தான்
விளம்பரித்தார்கள்
விளையாடி
விழிப்புரை
விற்பனைக்குறி
வினைக்களம்
வினைச்சி
வீண்மை
வீதிக்கல்
வீற்றிலக்கியங்கள்
வெடுக்கிடுகிறாள்
வெண்சுருட்டு
வெண்சுருள்
வெறிஞர்
வேடப்புனைவு
வேண்டுரை
வேதமுடி
வேந்தி
வேற்றீடு

———

பிற்சேர்க்கை

இல்லறன்
ஒருமொழிப்பாடு
வன்கொடை
வாழ்க்கையன்
விருந்தியம்.

Koviloor Digital Library

பயன்பட்ட நூல்கள்

1. இரட்டைக் காப்பியங்கள், மு. ப., 1958, செல்வி பதிப்பகம், காரைக்குடி.
2. இலக்கியச் சாறு, மு. ப., 1987, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
3. இலக்கியவிளக்கம், மு. ப., 1972, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
4. உப்பங்கழியில் மு. ப., 1972, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
5. ஒப்பியல் நோக்கு மு. ப., 1978, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
6. ஒருநொடியில் மு. ப., 1972, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
7. கம்பர் மு. ப., 1973, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
8. காப்பிய பார்வை, மு. ப., 1987, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
9. சங்கநெறி மு. ப., 1987, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
10. சிந்தனைக் களங்கள் மு. ப., 1975, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
11. தமிழ்க் காதல் மு. ப., 1975, தென்னிந்திய அச்சகம், காரைக்குடி.

Koviloor Digital Library

12. தலைவர்களுக்கு — மு. ப., 1965, பாரி நிலையம், சென்னை.

13. திருக்குறட்சுடர் — மு. ப., 1987, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

14. தொல்காப்பியக் கடல் — மு. ப., 1987, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

15. தொல்காப்பியப்புதுமை — பெருக்கியபதிப்பு, 1986, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

16. நெல்லிக்கனி, — மு. ப., 1962, தென்னிந்திய அச்சகம், காரைக்குடி.

17. மனைவியின் உரிமை, — ஆ. ப., 1977, பேகன் பதிப்பகம், காரைக்குடி.

18. வள்ளுவம் — எட்டாம்பதிப்பு, 1982, பாரிநிலையம், சென்னை.

Koviloor Digital Library
KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

பரிசுபெற்ற நூல்கள்

கம்பர் — டாக்டர் வ. சுப. மாணிக்கம்

வீரர் உலகம் — கி. வா. ஜகந்நாதன்

மணிக்கொடிகாலம் — பி. எஸ். ராமையா

பரிபாடல்திறன் — டாக்டர் இரா. சாரங்கபாணி

திருக்குறள் கூறும் உறுதிப்பொருள் — டாக்டர் சோ. ந. கந்தசாமி

உரையாசிரியர்கள் — மு. வை. அரவிந்தன்

ஊருக்குள் ஒரு புரட்சி — சு. சமுத்திரம்

உலகப் பெருங்கவிஞர் கம்பர் — இரா. வ. கமலக்கண்ணன்

தமிழ்மொழி வரலாறு — டாக்டர் சு. சக்திவேல்

திருமுறையும் திருக்கோயில்களும் — புலவர் செந்துறைமுத்து

தாகூர் — ச. மெய்யப்பன்

ச. மெய்யப்பன்
அறக்கட்டளை

Koviloor Digital Library

Koviloor Digital Library

மணிவாசகர் பதிப்பகத்தின்

சிறப்பு வெளியீடுகள்

உரையாசிரியர்கள்

தொல்காப்பியக் கடல்

வள்ளுவரின் மெய்யியல்

மறைந்துபோன தமிழ் நூல்கள்

நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்

இலக்கிய வகை அகராதி

வண்ணங்கள் வடிவங்கள்

தமிழகக் கலை வரலாறு

காப்பியத் திறன்

திரு. வி. க. ஓர் இலக்கியம்

திருமுறைப் பெருமை

சித்தர் பாடல்கள்

Wrapper Printed at Karpakam Achakam, Madras-600 002.